உதயன்
Uthayan - A lively National Tamil Daily
சுடர்: 30 கதிர்: 026 வள்ளுவர் ஆண்டு: 2045
மார்கழி 07, திங்கட்கிழமை 22.12.2014

வானிலை
22 DEC 2014
நூலகம்

## இரணைமடு வான்கதவுகள் இன்று திறக்கப்படலாம்

கிளிநொச்சி, டிசெ.22

இரணைமடுக் குளத்துக்கான நீர் வரத்து அதிகரித்துக் காணப்படுவதன் காரணமாக இன்று அதன் 4 வான் கதவுகள் திறக்கப்படலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால் தாழ் நிலப் பகுதியில் உள்ள மக்கள் அது குறித்து அவதானத்துடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நேற்று இரவு குளத்தின் நீர் மட்டம் 30 அடி 8 அங்குலமாகக் காணப்பட்டது. குளத்தின் நீர் மட்டம் பக்.25

# கைவிரித்தார் ஹக்கீம்

### வெளியேறும் முடிவு இன்று அறிவிப்பு
### நெருக்கடிக்குள் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு, டிசெ.21

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ், அரசகூட்டிலிருந்து வெளியேறி பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்குவதற்கு முடிவெடுத்துள்ளது.

கொழும்பில் இன்று நடைபெறும் கட்சியின் உயர்பீடக் கூட்டம் முடிவடைந்த பின்னர், இது குறித்தான அறிவிப்பை மு.கா.வின் தலைவர் ரவூப் ஹக்கீம் உத்தியோகபூர்வமாக வெளியிடவுள்ளார் என அறியமுடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது குறித்து எவ்வித கருத்தும் வெளியிடாமல் மௌனம் காத்து வந்த முஸ்லிம் காங்கிரஸ், மேற்படி அறிவிப்பை இன்று வெளியிட்ட பின்னர், பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் முக்கிய சந்திப்பொன்றில் ஈடுபடவுள்ளது என்றும் தெரியவருகின்றது.

ஏதேனுமொரு காரணத்தால் இன்று முடிவை அறிவிக்க முடியாமல்போனால் இவ்வாரத்துக்குள் தமது நிலைப்பாட்டை அக் கட்சி அறிவித்துவிடும். பக்.25

## தபால் மூல வாக்களிப்பை கண்காணிக்க அதிகாரிகள் குழு

யாழ்ப்பாணம், டிசெ. 22

வடக்கில் படைமுகாம்களிலும், சிவில் பாதுகாப்பு நிலையங்களிலும் நாளை இடம்பெறவுள்ள தபால்மூல வாக்களிப்பை மேற்பார்வை செய்வதற்கு கொழும்பு மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் க.அச்சுதன் தலைமையில் 250 பேர் கொண்ட குழு ஒன்று வடக்குக்கு வந்துள்ளது. வாக்களிப்பு நிலையங்களுக்கு அவர்கள் இன்று மாலையே சென்று பணிகளில் ஈடுபடுவார்கள் என்றும் கூறப்படுகின்றது. பக்.02

## மஹிந்த விஞ்ஞாபனம் வெளியீடு ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ. 22

மஹிந்த சிந்தனை முக்கால நோக்கு, தேர்தல் அறிக்கை வெளியீடு திடீரென மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இன்று இந்த நிகழ்வு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதும், திடீரென ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. பக்.25

## சர்வதேச கண்காணிப்பாளர் சுதந்திரத்துக்கு தடை

கொழும்பு, டிசெ. 22

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது கண்காணிப்பில் ஈடுபடவுள்ள சர்வதேச கண்காணிப்பாளர்களின் சுயாதீனத்துக்கும் – சுதந்திரத்துக்கும் தடை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இராணுவத்தினரால் நடைமுறைப்படுத்தும் நடைமுறையாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. பக்.22

## அரசின் பேரம் பேசலுக்கு மசியாத கூட்டமைப்பினர்

### மாகாண சபை உறுப்பினர்கள் இருவரை இழுப்பதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 22

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் இருவரைத் தமது பக்கம் இழுப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது. பல்வேறு பேரம் பேசல்கள் இடம்பெற்றபோதும், குறித்த இரு உறுப்பினர்களும் எதற்கும் மசியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

எப்போதுமில்லாத அளவுக்கு இந்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சித்தாவல்கள் அதிகமளவில் இடம்பெற்று வருகின்றன. பிரதான இரு கட்சிகளின் செயலாளர்களே கட்சி தாவியுள்ள நிலையில், இந்தக் கட்சித் தாவல்கள் சூடு பிடித்திருந்தன. இரு பிரதான சிங்களக் கட்சிகளின் நாடாளுமன்ற, மாகாண சபை, பிரதேச சபை உறுப்பினர்களே இதுவரையில் கட்சித் தாவல்களில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்தும், தம் பக்கம் வளைத்துப் போடுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முயன்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை பக்.25

## குடும்ப ஆட்சிக்கு முடிவு தருமா ஜனாதிபதித் தேர்தல்?

பக்.09

## வடக்கில் மைத்திரி 30ஆம் திகதி பரப்புரை

### ரணில், சந்திரிகா, பொன்சேகா, மனோ ஆகியோர் அடங்கிய கூட்டணியுடன்

யாழ்ப்பாணம், டிசெ. 22

வடக்கின் 5 மாவட்டங்களிலும் எதிர்வரும் 30 ஆம் திகதி ஒரே நாளில் சூறாவளிப் பரப்புரை மேற்கொள்ள பொது எதிரணி தீர்மானித்துள்ளது.

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா ஆகிய கூட்டணியே சூறாவளிப் பரப்புரையை மேற்கொள்ளவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், பக்.25

## தமிழர்கள் கட்டாயம் வாக்களிக்கவேண்டும்

### மக்கள் சந்திப்பில் மாவை கோரிக்கை

வவுனியா, டிசெ. 22

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும் கட்டாயமாக வாக்களிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

இந்தத் தேர்தலில், தமிழ் மக்கள் தமது வாக்குகளை பக்.25

## வாக்களிக்கும் முறை

கொழும்பு, டிசெ.22

தேர்தலில் வாக்களிக்கும் முறை குறித்து தேர்தல்கள் திணைக்களத்தால் அறிக்கை ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. பக்.22

## மைத்திரியின் சவாலை ஏற்காது சு.க.

கொழும்பு, டிசெ.22

ஜனவரி முதலாம் திகதி நேரடி விவாதத்துக்கு வருமாறு பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன விடுத்த அழைப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டாலும், அதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அனுமதியளிக்காது என்று கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான பக்.25

## சர்வதேச விசாரணை அறிக்கை மார்ச்சில்

கொழும்பு, டிசெ. 22

இலங்கை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் சர்வதேச விசாரணை அறிக்கை மார்ச் மாதம் 25 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. அன்றைய தினமே, ஐ.நா மனித உரிமைகள் சபையிலும் அது சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் சபையின் 25 ஆவது கூட்டத் தொடரில், இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள சர்வதேச ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. அதற்கமைய சாட்சியங்கள் திரட்டும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. இவை யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

இந்த நிலையில் இறுதிப்படுத்தப்பட்ட அறிக்கை, ஐ.நா மனித உரிமைகள் சபையின் 28 ஆவது கூட்டத் தொடரில் பக்.25

## கூட்டமைப்பு – மைத்திரி இன்று சந்தித்து பேச்சு?

யாழ்ப்பாணம், டிசெ. 22

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர் என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் இதுவரையில் எந்தவொரு வெளிப்படையான அறிவித்தலையும் வெளியிடவில்லை. மக்களை தேர்தலில் வாக்களிக்குமாறு மாத்திரம் தெரிவித்ததுடன், பொருத்தமான நேரத்தில் யாருக்கு வாக்களிப்பது என்பது தெரிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு வந்தது.

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனம் பக்.25

# செய்திகள்

## வன்னி தொகுதியில் 28 வாக்கு எண்ணும் நிலையங்கள்

யாழ்ப்பாணம், டிசெ, 22

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வன்னி தேர்தல் தொகுதியில் 28 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்று வடக்கு மாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் ஏ.ஒ.எம்.நபீல் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது வவுனியா மாவட்ட செயலகத்தில் 15 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்றும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 வாக்கெண்ணும் நிலையங்கள் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை மன்னார் மாவட்டத்தின் செயலக வளாகத்துக்குள் 6 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்றும், மன்னார், வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களில் தபால் மூலம் அளிக்கப்படும் வாக்குகள் வவுனியா மாவட்ட செயலகத்தில் வைத்து எண்ணப்படும் எனவும் வடமாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் ஏ.ஒ.எம். நபீல் தெரிவித்துள்ளார். (ற–10)

## வலி.கிழக்கில் 10 கிணறுகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.22

வலி.கிழக்குப் பிரதேசத்தில் உள்ள 10 பொதுக் கிணறுகளைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாவனையின்றி தூர்ந்த நிலையில் உள்ள அவற்றை மீளப் புனரமைப்பதற்கு கோப்பாய் பிரதேச செயலகம் நிதி ஒதுக் கீடு செய்துள்ளது. அதனைக் கொண்டு பொதுக் கிணறுகளின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வலி.கிழக்குப் பிரதேச சபையின் தலைவர் கே.துரைசிங்கம் தெரிவித்தார்.

உரும்பிராயில் 3 கிணறுகளும், கோப்பாயில் 3 கிணறுகளும், அச்சுவேலியில் 4 கிணறுகளும் புனரமைக்கப்படவுள்ளன.(ற–17)

# தபால்மூல வாக்களிப்பை மேற்பார்வை செய்வதற்கு அதிகாரிகள் குழு வந்தது

யாழ்ப்பாணம், டிசெ. 22

வடக்கில் படைமுகாம்களிலும், சிவில் பாதுகாப்பு நிலையங்களிலும் நாளை இடம்பெறவுள்ள தபால்மூல வாக்களிப்பை மேற்பார்வை செய்வதற்காக, வடக்கு மாகாண முன்னாள் பிரதித் தேர்தல்கள் ஆணையாளரும், கொழும்பு மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளருமான க.அச்சுதன் தலைமையில் 250 உத்தியோகத்தர்கள் தென்பகுதியிலிருந்து நேற்று வருகை தந்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நாளை செவ்வாய்க்கிழமையும் மறுநாள் புதன்கிழமையும் நடைபெறவுள்ளது. அதில் வடக்கில் 25 ஆயிரத்து 930 அரச அதிகாரிகள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அதற்கு மேலதிகமாக, வடக்கில் நிலை கொண்டுள்ள முப்படையினரும், சிவில் பாதுகாப்பு படையினரும் தபால் மூலம் வாக்களிக்கவுள்ளனர்.

இவர்களது வாக்களிப்பு படைமுகாம்களிலேயே இடம்பெறவுள்ளது. வாக்களிப்பு இடம் பெறும்முகாம்களை நேரடியாக மேற்பார்வை செய்வதற்காகவே,தென்பகுதியிலிருந்து தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் வடபகுதிக்கு வருகை தந்துள்ளனர்.

நேற்று வந்த அதிகாரிகள் வடக்கின் 5 மாவட்டங்களிலுமுள்ள வாக்களிப்பு இடம்பெறும் படைமுகாம்களுக்குஇன்றுமாலையே செல்லவுள்ளனர். தபால் மூல வாக்களிப்பு முடியும் வரையில் முகாம்களிலிருந்தே அவர்கள் மேற்பார்வை நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர். தென்பகுதியிலிருந்து வருகை தந்துள்ள உத்தியோகத்தர்களுடன் இணைந்து உள்ளூர் உத்தியோகத்தர்களும் கடமையாற்றவுள்ளனர்.

விரிவு

வடக்கில் முகாம்களில் இடம்பெறும் தபால் மூல வாக்களிப்புக்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் வடக்கு மாகாண முன்னாள் பிரதித் தேர்தல்கள் ஆணையாளரும், கொழும்பு மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளருமான க.அச்சுதன் மற்றும் தேர்தல்கள் திணைக்கள நிர்வாக உதவி ஆணையாளர் நாலக திரகரட்ண ஆகியோரின் நேரடி மேற்பார்வையில் இடம்பெறவுள்ளது. (ற–5)

## சாவகச்சேரியில் மஹிந்த ஆதரவு பரப்புரைக் கூட்டம்

தென்மராட்சி ,டிசெ. 22

ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு திரட்டும் பரப்புரைக் கூட்டம் நேற்று முன்தினம் சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடை பெற்ற பரப்புரைக்கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.குகேந்திரன் (ஜெகன்) ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் ஆ.அலெக்ஸாண்டர் ,ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தென்மராட்சி அமைப்பாளர் கு.சர்வானந்தா , யாழ்ப்பாணம் தொகுதி அமைப்பாளர் எ.றெமீடியஸ் உட்படப் பலர் உரையாற்றினர். (ற–9)

# அச்சம் ஏதுமின்றி வாக்களிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ. 22

அரச ஊழியர்கள் அச்சமின்றி நாளை தங்களது தபால்மூல வாக்குகளைப் பதிவு செய்யலாம். அவர்கள் யாருக்கு வாக்களித்தார்கள் என்பதை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கண்டுபிடிக்க முடியாது. – இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் பிரதித் தேர்தல்கள் ஆணையாளரும், கொழும்பு மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளருமான எஸ்.அச்சுதன் தெரிவித்தார்.

ஜனாதிபதித்தேர்தலுக்கானதபால் மூல வாக்களிப்பு நாளை செவ்வாய்க் கிழமையும் மறுநாள் புதன்கிழமையும் இடம்பெறவுள்ளது. அதற்காக வடக்கில் 25 ஆயிரத்து 930 அரச அதிகாரிகள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இந்த நிலையில், தபால் மூல வாக்காளரை அச்சுறுத்தும் வகையில், யாருக்கு வாக்களிக்கின்றார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முடியும் என்ற தவறான தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றது. அதில் எவ்வித உண்மையும் இல்லை.

அரச ஊழியர்கள் தமக்கு விருப்பமானவர்களுக்கு வாக்களிக்க முடியும். அவ்வாறு அவர்கள் வாக்களிப்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதனைக் கண்டறிய முடியாது. எனவே அரச ஊழியர்கள் சுதந்திரமாக தமது வாக்கைச் செலுத்தலாம்.

தபால்மூல வாக்களிப்புச் செலுத்தப்படும் இடத்தில், அரச அலுவலகங்களிலுள்ள சி.சி.ரி.வி கமராக்கள் அனைத்தும் அகற்றப்படும். எனவே வாக்களிப்பு என்பது நீதியாகவே இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை வடக்கிலுள்ள சிவில் பாதுகாப்பு படையினருக்கு நேற்றைய தினம் தேர்தல் திணைக்கள அதிகாரிகளினால் அறிவுறுத்தல்கள் நேரடியாக வழங்கப்பட்டுள்ளது. முக்கியமான சிவில்பாதுகாப்புப்படைத்தளங்களுக்குச் சென்ற தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள், சிவில் பாதுகாப்பு படையினர் தமது வாக்குகளைச் சுதந்திரமாகப் பதிவு செய்யலாம் என்று தெரிவித்துள்ளனர். (ற–5)



வாகரை – திருகோணமலை பிரதான வீதி மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. அதனால் வீதியை இனங்காண முடியா நிலை காணப்படுகின்றது. அதையடுத்து இரு பஸ்கள் வீதியை விட்டு விலகிச் சென்றுள்ளன. கல்முனையில் இருந்து திருகோணமலை நோக்கி சென்று கொண்டிருந்த பஸ்ஸும், திருக்கோயிலில் இருந்து திருகோணமலைக்கு சென்று கொண்டிருந்த பஸ்ஸும் இவ்வாறு வெள்ளம் காரணமாக ஒரே நேரத்தில் 50 மீற்றர் இடைவெளியில் வீதியை விட்டு வெளியே சென்றுள்ளன. (ற)

# வாழ்வின் எழுச்சி திட்ட வாழ்வாதார உதவிகள்

## தென்மராட்சியில் வழங்கப்பட்டன

தென்மராட்சி ,டிசெ. 22

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வின் எழுச்சி திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஆயிரத்து 95 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

14 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள 250 குடும்பங்களுக்கு தலா 20 கோழிக்குஞ்சுகள் வீதம் வழங்கப்பட்டன. அடுத்தடுத்த கட்டங்களாக ஏனைய பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கப்படும் என்றும், இந்தத் திட்டத்தில் மாடுகள், ஆடுகள் போன்றவற்றுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு விரைவில் அவை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பயனாளி ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க 20 கோழிக்குஞ்சுகளும் அதற்கான தீவனம் மற்றும் உபகரணங்களும் கோழிக்கூடுகளும் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. மழைக்கு மத்தியிலும் கோழிக்குஞ்சு பெறுவதற்கு நீண்ட வரிசையில் பயனாளிகள் காணப்பட்டனர். கூடு தயாரிப்பதற்கான நிதி விரைவில் வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–9)

# இரு வாக்காளர்களுக்கு வாக்களிப்பு நிலையம்

மட்டக்களப்பு, டிசெ.22

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது நாடளாவிய ரீதியில் ஏற்படுத்தப்படவுள்ள வாக்களிப்பு நிலையங்களில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே 2 வாக்காளர்களுக்கு ஒரு வாக்களிப்பு நிலையம் ஏற்படுத்தப்படவுள்ளது.

மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலையில் இரண்டு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களுக்காக அங்கு ஒரு வாக்களிப்பு நிலையம் ஏற்படுத்தப்படவுள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்காக நாடெங்கும் ஏற்படுத்தப்படவுள்ள வாக்க ளிப்பு நிலையங்களில் இதுவே அதி குறைந்த வாக்காளர்களைக் கொண்ட வாக்களிப்பு நிலையமாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை ஜனாதிபதி தேர்தலுக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் 414 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன. மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் 199 நிலையங்களும், கல்குடா தேர்தல் தொகுதியில் 115 நிலையங்களும் பட்டிருப்பு தேர்தல் தொகுதியில் 100 வாக்களிப்புநிலையங்களும் ஏற்படுத்தப்படவுள்ளன. (ற–10)






உயர்த்தரமான பயன்மிக்க சேவையை பெறுவதற்கு நீங்கள் சிறந்த மற்றும் அறிவாற்றல் மிக்க மனநிலையுடன் இருத்தல் வேண்டும் என நான் அறிவேன். உண்மையை உள்ளபடி கூறமுடியாதவாறு நீங்கள் சிறைப்பட்டுள்ளது பற்றி நானும் அவ்வாறே முழுநாடும் நன்கறியும்: இந்த தீர்மானிக்கும் வேளை மீண்டும் தோன்றாது என்பதை நீங்கள் அறிவீர்கள் என நான் அறிவேன். மௌனமாக்கப்பட்ட உங்களுடைய குரலை மீண்டும் ஒலிப்பதற்கு நீங்கள் தீர்மானம் எடுப்பீர்கள் என்பதையும் நான் அறிவேன்.

**உங்களுடைய மனசாட்சியுடன் ஒன்றிணைந்து அச்சமின்றி தேசத்தை மாற்றுவதற்கு உங்களுடைய தீர்மானத்தை அறிவியுங்கள்.**

கௌரவமான பிரஜையாக உங்களுக்கு தேசத்துக்கும் எதிர்காலத்துக்கும்
வெற்றியை வழங்கி மைத்திரி நல்லாட்சிக்கு இடம் கொடுங்கள்.
அது நீங்களும் நாடும் அடையும் வெற்றியின் முதற்படி.

மாற்றத்துக்காக ஒன்றுபடுவோம்


# மைத்திரி ஆட்சி

அரச சேவையாளர்களாகிய உங்களின்
வாக்குகளை அன்னம் சின்னத்துக்கு முன் புள்ளடி
இடுவதன்மூலம் வழங்கி நல்லாட்சிக்கான
அரசசேவையைக் கட்டியெழுப்ப முன்னணியில்
திரண்டு வாருங்கள்.

செய்திகள்

# கடும் மழை மன்னாரில்; 835 பேர் இடம்பெயர்வு

## பெருக்கெடுக்கின்றது மல்வத்துஓயாவும்





மன்னார், டிசெ.22

தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாகவும், மல்வத்து ஓயா பெருக்கெடுத்துள்ளதன் காரணமாகவும் மன்னார் மாவட்டத்தில் இது வரை 271 குடும்பங்களைச் சேர்ந்த 835 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின்மாவட்ட உதவிப்பணிப்பாளர் எம்.ஏ.சி. முஹமட் றியாஸ் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவில் தலைமன்னார், துள்ளுக்குடியிருப்பு, எமிழ்நகர், சாந்திபுரம்,செல்வநகர் ஆகிய 5 கிராமங்களில் 212 குடும்பங்களைச் சேர்ந்த 657 பேர் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அந்தப் பகுதியில் உள்ள பொது மண்டபங்கள், ஆலயங்கள் ஆகியவற்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சுமார் 8 இடங்களில் இந்த மக்கள் இவ்வாறுதங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அதே வேளை மடு உதவி அரச அதிபர்பிரிவுக்குட்பட்ட தம்பனைக்குளம் கிராமத்தினுள் மல்வத்து ஓயா பெருக்கெடுத்துள்ளதன் காரணமாக அங்குள்ள 360 குடும்பங்களில் 59 குடும்பங்களைச் சேர்ந்த 183 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் சின்னப்பண்டிவிரிச்சான் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏனைய 301 குடும்பங்கள் இதுவரை வெளியேறவில்லை.

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இராசமடு, மடுக்கரை, அச்சங்குளம், இசைமாலைத்தாழ்வு ஆகிய நான்கு கிராம மக்களையும், முசலி பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட 4 ஆம் கட்டை, மருதமடு, வேப்பங்குளம் ஆகிய மூன்று கிராம மக்களையும் அவதானத்துடன் இருக்குமாறு மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால் மல்வத்து ஓயாவின் பெருக்கெடுப்பு அதிகரித்தால் குறித்த கிராமங்களுக்குள் வெள்ள நீர் செல்லும் அபாயம் உள்ளது என்று மாவட்ட இடர் முகாமைத்துவப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள விவசாயச் செய்கையும் பாதிப்படைந்துள்ளது என்றும், விவசாய நிலங்கள் குளம் போல் காட்சியளிக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-56)

# தொடர்ச்சியான மழை

## வவுனியா மக்களின் இயல்புநிலை பாதிப்பு

வவுனியா, டிசெ.22

வவுனியாவில் கடந்த இரு நாள்களாக தொடர்ச்சியாக பெய்து வரும்மழையால்மக்கள்பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். போக்குவரத்துகளும் பாதிப்படைந்துள்ளன.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா

"வவுனியா மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வரும் நிலையில் மக்களின்பிரதான போக்குவரத்து பாதைகள் பாதிக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் மக்களின் குடிமனைகளில் நீர் புகுந்துள்ளதால் மக்கள் இடம்பெயர வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக செட்டிகுளம் ஊடாக, பூவரசங்குளம் ஊடான பிரதான வீதியும் நெடுங்குளம் ஊடாக செட்டிகுளம் பிரதான வீதியும் தொடர் மழையால் வீதியின் குறுக்கே வெள்ள நீர் பாய்வதால் மேற்குறிப்பிட்ட இரு பிரதான வீதியூடாக மக்கள் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

புதிய வேலர் சின்னக்குளம், கற்பகபுரம் போன்ற கிராமங்களில் உள்ள தற்காலிக வீடுகளுக்குள் நீர் புகுந்ததால் மக்கள் இடம் பெயரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பாவற்குளம் வான் பாய்வதால் பாவற்குளம் பகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு கூறப்பட்டுள்ளது"– என்று தெரிவித்தார். (ற-421)

# கன மழையால் சேதமுற்றது வீதி



கிளிநொச்சி, டிசெ.22

தற்போது பெய்துவரும் கன மழை காரணமாக பரந்தன் – புதுக்குடியிருப்பு (ஏ-35) பிரதான வீதியை ஊடறுத்து வெள்ளம் பாய்ந்து வருகின்றது. அதனால் வீதி பெரும் சேதத்துக்கு உள்ளாகியுள்ளது.

21ஆவது கிலோமீற்றரில் மாணிக்கப்பிள்ளையார் கோவிலுக்கு முன்பாகப் புதிதாகப் பாலம் அமைக்கும் பணி நடைபெறுகின்றது.

அதனால் பாலத்தின் அருகில் தற்காலிகமான பாதையொன்று அமைக்கப்பட்டு அதனூடாகவே சில மாத காலமாகப் போக்குவரத்து நடந்துவந்தது.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை பெய்த கனமழையால் அதிகளவு வெள்ளம் பெருக்கெடுக்கத் தொடங்கியதால் தற்காலிக பாதை அரிப்புக்குள்ளாகியது. அதையடுத்துஅவசர தேவை கருதி பூர்த்தியடையாத பாலம் உடனடியாகப் போக்குவரத்து செய்யக்கூடிய விதமாக செப்பனிடப்பட்டு இரவு 8மணியளவில் திறந்து விடப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# காப்புறுதி நிதி இதுவரை கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், டிசெ.22

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர்பிரிவுக்குட்பட்ட நவாலி வடக்கு – நவாலி தெற்கு பிரதேச விவசாயிகளுக்கு 2013 ஆம் ஆண்டுக்கான காப்புறுதி நிதி இன்னும் கிடைக்கவில்லை. கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் சகல காப்புறுதி நிதி செலுத்திய விவசாயிகளுக்கும் காப்புறுதி கொடுப்பனவு வழங்கப்படும் என்று கமநல பிரதி ஆணையாளர் பற்றிக் டிறைஞ்சனால் தெரிவிக்கப்பட்டிருந்தது. இன்னும் இந்த 2014 ஆண்டு நிறைவடைய 15 நாள்களே உள்ளன. கூடிய விரைவில் 2013 இன் பேரழிவை வறட்சியால் சந்தித்த நவாலி விவசாயிகளுக்கு காப்புறுதி நிதியை வழங்கி உதவவேண்டும் என்று முன்னாள் நவாலி விவசாய சம்மேளனச்செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (வ-50)

# பால புனரமைப்புகளைத் துரிதப்படுத்தப் பணிப்பு

## சந்திரகுமார் எம்.பி. அதிகாரிகளுக்கு விடுத்தார்

கிளிநொச்சி, டிசெ.22

கிளிநொச்சி மாவட்டத்தில் புனரமைப்புப் பணிகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள சில பாலங்களின் பணிகள் முடிவடையவில்லை. தற்போது பெய்து வரும் கனமழையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதனால் மழைக்காலங்களில் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களுக்குத் தீர்வு காணும் வகையில் புனரமைப்புப் பணிகளை துரிதப்படுத்துமாறு பணிப்புரை விடுத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார்.

குறித்த பாலங்களை நேரில் சென்று பார்வையிட்ட பின்னரே அவர் இவ்வாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். அதன்போது பாலங்களை அமைக்கும் பணியில் ஏற்பட்டுள்ள காலதாமதம் குறித்து ஆராய்ந்ததோடு போக்குவரத்தின்போது மக்கள் எதிர்கொண்டு வரும் சிரமங்களை நிவர்த்திசெய்யும் வகையில் மாற்றுப் போக்குவரத்து பாதைகளை அமைப்பது குறித்தும் ஆராய்ந்தார். இரணைமடுக்குளம் திறக்கப்படும் தறுவாயில் ஏற்படப்போகும் பாதிப்பு மக்களுக்கு பயணச் சிரமங்களை ஏற்படுத்தும் என்ற எதிர்வு கூறலுக்கேற்ப குறித்த பாலங்கள் அமைக்கப்பட்டுவரும் பகுதிகளினூடான போக்குவரத்திற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் அவர் துறைசார்ந்த அதிகாரிகளுக்குப் பணிப்புவிடுத்தார்.



இதன்போதுகிளிநொச்சிமாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப்பணிப்பாளர்சுதாகரன், பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் கார்த்திகேயன் மற்றும்வீதிபுனர்நிர்மாணப்பணிகளை மேற்கொண்டுவரும் ஒப்பந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள், கண்டாவளைப்பிரதேச செயலர் முகுந்தன் மாவட்ட இடர் முகாமைத்துவப்பிரிவின் உத்தியோகத்தர் ஆகியோரும் உடனிருந்தனர். (ற)

# குறைக்கப்பட்ட நிதியை வழங்குமாறு கோர முடிவு

## வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ. 22
கொழும்பு அரசு கடந்த ஆண்டை விட குறைத்து வழங்கிய 521 மில்லியன் ரூபாவையும் வழங்குமாறு கோருவது என்று வடக்கு மாகாண சபை முடிவு செய்துள்ளதாக, அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்குமாகாணசபையின்வரவு- செலவுத்திட்ட இறுதி நாள் விவாதம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே அவைத் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணசபைக்கு 2014 ஆம் ஆண்டுக்கான மூலதனச் செலவாக 2 ஆயிரத்து 4 மில்லியன் ரூபாவும், விசேட திட்டத்தின் கீழ் 3 ஆயிரத்து 955 மில்லியன் ரூபாவுமாக 5 ஆயிரத்து 959 மில்லியன் வழங்கப்பட்டது. ஆனால் 2015 ஆம் ஆண்டுக்கான மூலதனச் செலவாக 2 ஆயிரத்து 735 மில்லியன் ரூபாவும், விசேட திட்டங்களுக்காக 2 ஆயிரத்து 707 மில்லியன் ரூபாவுமாக 5 ஆயிரத்து 437 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டை விட குறைவாக வழங்கிய 521 மில்லியன் ரூபாவையும் கொழும்பு அரசிடம் கோருவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்று அவர் தெரிவித்தார்.

அதேவேளை, வடக்கு மாகாண சபையின் ஒவ்வொரு அமைச்சுக்களாலும் கோரப்பட்ட நிதியின் பத்து சதவீத நிதியையே கொழும்பு அரசு வழங்கியுள்ளது. (ற-5)



## சூழலைப் பேணுவதில் அக்கறை செலுத்துவார்களா மக்கள்?

யாழ்ப்பாணம், டிசெ. 22
திருநெல்வேலி, நாவலடி வீதி பாலக்காய் மூலையில் பொது மக்களால் வீசப்பட்ட கழிவுப் பொருள்களால் அந்தப் பகுதி ஒரே துர்நாற்றம் வீசுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிராம அலுவலர் அலுவலகம், பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிலையம் என்பன அமைந்துள்ள அந்தப் பகுதியில் நிலவும் சுகாதார சீர்கேடுகளால் பாடசாலை மாணவர்கள் மற்றும் அந்தப் பகுதியில் உள்ள முக்கிய அலுவலகத்துக்குச் செல்லும் மக்களும் பெரும் சிரமப்படுகின்றனர்.

குறித்த பிரதேசத்தில் குப்பைகளைப் போட வேண்டாம் என்று அறிவித்தல் போடப்பட்டிருந்தும் மக்கள் அந்த விடத்தில் கழிவுப் பொருள்களை வீசி விடுகின்றனர்.

இதனால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறித்து பல தடவைகள் எடுத்துக் கூறியும் பொது மக்கள் இந்த விடயத்தில் அக்கறை செலுத்துகிறார்கள் இல்லை என்று கவலை தெரிவிக்கும் கிராம அலுவலர் எஸ்.மேகானந்தசிவம் பொது மக்கள் குறிப்பிட்ட இடத்தில் குப்பைகளைப் போடாதிருக்குமாறும் விநயமாகக் கேட்டுள்ளார். (வ-7)

## அச்சுவேலி பஸ் நிலையத்தை புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.22
அச்சுவேலி மத்திய பஸ்தரிப்பிடத்தை புனர்நிர்மாணம் செய்வதற்கு வலி.கிழக்குப் பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

குறித்த பஸ் தரிப்பிட சுற்றாடலில் மழை காலத்தில் வெள்ளம் தேங்குவதால் பயணிகள் சிரமப்படுவதோடு, மக்களும் தரிப்பிடத்தின் உள்ளே செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. அதையடுத்தே அதை உடனடியாக புனர்நிர்மாணம் செய்வதற்குச் சபை ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இந்தப் புனர்நிர்மாணப் பணிகளை பஸ்தரிப்பிடத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படும்என்றும்எதிர்பார்க்கப்படுகின்றது. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இந்த பஸ்தரிப்பிடம் தாழ்வான பகுதியில் அமைக்கப்பட்டதாலேயே மழை வெள்ளம் தேங்கி நிற்கிறது. (ற-17)

## கடற் கொந்தளிப்பால் மீனவர்கள் வீடுகளில்



கரணவாய்,டிசெ. 22
கடும் காற்று கடற்கொந்தளிப்புக் காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்லாததால் வடமராட்சிக் கடற்கரையோரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

தற்போது பெய்து வரும் மழை மற்றும் தாழமுக்கம் காரணமாக வழமைக்கு மாறாக கடல் கொந்தளிப்பாகக் காணப்படுகின்றது. அதனால் வல்வெட்டித்துறை, தொண்டமானாறு , இன்பருட்டி, ஆதிகோவிலடி, பொலிகண்டி உட்பட்ட கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு கடலுக்குச் செல்லவில்லை.

அதையடுத்து இந்தப் பகுதியில் கடல் உணவுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தூர இடங்களில் இருந்து மீன் கொள்வனவு செய்வதற்கு வந்த மீன்வியாபாரிகள் போதிய அளவு மீன்கிடைக்காமையால்ஏமாற்றத்துடன்திரும்பிச்சென்றனர்.

இதேவேளை- மீனவர்களின் பெருமளவான படகுகளும் மீன்பிடிக்குச் செல்லாது கடற்கரைகளில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. (ற-108)

## இருபாலையில் இரு புதிய பஸ் தரிப்பு நிலையங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.22
வடக்கு மாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சின் உதவியுடன் கோப்பாய், இருபாலை பகுதிகளில் இரண்டு பஸ் தரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

கோப்பாய் இராச வீதியில் கரந்தன் சந்திப் பகுதியில் ஒரு பஸ் தரிப்பு நிலையமும், பருத்தித்துறை வீதியல் இருபாலை கட்டப்பிராய் குளத்தடியில் மற்றைய பஸ்தரிப்பு நிலையமும் அமைக்கப்படவுள்ளன. இவற்றை விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேசமயம் நீர்வேலி பூதர்மடத்தடியில் பஸ்தரிப்பு நிலையம் இல்லாத காரணத்தால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அங்கு பஸ்தரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சு உரிய நடவடிக்கைமேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-17)

## தாக்குதலில் குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி, டிசெ. 22
கொடிகாமம், எழுவனில் குடும்பஸ்தர் ஒருவர் கும்பல் ஒன்றால் கடுமையாகத் தாக்கப்பட்டும், வாளால் வெட்டப்பட்டும் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடந்த இந்தச் சம்பவத்தில் தாவளை, இயற்றாலையைச் சேர்ந்த சண்முகலிங்கம் ஸ்ரீநிவாசன் (வயது-32) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

கொடிகாமம் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-9)

# காக்கைதீவுப் பகுதியில் குப்பைகளை கொட்டுவதை உடன் நிறுத்தக் கோரிக்கை

## ஹேமலதா ஞாபகார்த்தமாக சமூக நிலையம் விடுக்கின்றது

யாழ்ப்பாணம், டிசெ.22
காக்கைதீவுப் பகுதியில் குப்பைகள், திண்மக் கழிவுகளை கொட்டிஎரிக்கும்திட்டத்தைஉடன் கைவிட்டு அங்கு பயன் தரு மரங்களை நடுங்கள். அல்லாது விடில் நவாலி, ஆனைக்கோட்டை மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். – இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது நவாலிஹேமலதா ஞாபகார்த்தமாக சமூக நிலையம்.

இது குறித்து அந்த நிலையம் மேலும்தெரிவித்துள்ளதாவது:-

"பல தடவைகள் யாழ். அரச அதிபருக்கும் உள்ளூராட்சிமன்ற ஆணையாளர், செயலாளர்களுக்கும் இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளோம். யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை ரவியின் கவனத்துக்கும்விசேடமாககொண்டு வந்துள்ளோம்.

இன்று தென்பகுதிகளில் திண்ம கழிவுகள் உபாயத்துக்கு மாற்றுத் திட்டங்கள் வந்து, கழிவுகளால் மாசுபட்ட கிராமங்கள் புத்துயிர்பெற்றுவிட்டன. ஆனால் காக்கைதீவு கழிவுகளால் கடல் பிரதேசம் முற்றாக அழிகிறது. இதனால் மீன்வளம் அழியும் அபாயம் தோன்றியுள்ளது. திண்மக் கழிவுகள் கொட்டப்படுவதால் நிலத்தடி நீர் மாசடைகிறது. திண்மக் கழிவுகள் எரிக்கப்படுவதனால் அதனால் ஏற்படும் புகை மூட்டம் புற்றுநோய், சுவாச நோய் ஏற்படுகின்றது. இன்னும், சில காலங்களில் இங்கு ஏற்படப்போகும் பாதிப்புக்களை அவதானிக்க முடியும். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களும் குறிப்பாக உள்ளூராட்சி சபை, சண்டிலிப்பாய், சங் கானை, சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் கூடுதல் கவனம் எடுத்தால் மட்டுமேஅழிவில் இருந்து மக்களைக் காப்பாற்றலாம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-50)

# செய்திகள்

## வவுனியா அரச ஊழியர்களுக்கு காணிகள்

### அரச அதிபர் தெரிவிப்பு

வவுனியா, டிசெ.22
வவுனியா மாவட்டத்தில் இது வரை எந்தவித காணிகளும் இன்றிகடமையாற்றும்அரசஊழியர்களுக்கு 2015 ஆண்டின் முற்பகுதியில் காணிகள் வழங்கப்படவுள்ளன என்று வவுனியா மாவட்டஅரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திரா தெரிவித்தார்.

கடந்த 18 ஆம் திகதி வவுனியா ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் அரச அதிபருக்கும்இடையில்வவுனியாமாவட்ட செயலகத்தில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.இதன்போதுஉரையாற்றுகையிலே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; வவுனியா மாவட்ட செயலகத்தால் ஏற்கனவே 300 ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது. அதில் இன்னமும் வீடு கட்டாத அரச ஊழியர்களின் காணிகள் பறிமுதல் செய்யப்பட்டு காணிகள் அற்ற வவுனியா மாவட்டத்தில் அரச திணைக்களங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ளன. மேலும், 300 ஏக்கர் காணி புதிதாக பலருக்கு வழங்கப்படவுள்ளது. 2015 ஆண்டில் அரச ஊழியர் வீட்டுத்திட்டம் இலங்கையின் முன்மாதிரியான வீட்டுத்திட்டமாக ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டம் அமையும். வீதி புனரமைப்பு, மின் விளக்குகள் அமைத்தல், சுப்பமாக்கெட்உட்பட பல்வேறுதேவைகள் நிறைவேற்றப்படும். முற்பகுதியில் உள்ள காட்டுத்துண்டு அகற்றப்பட்டு, அங்கு முன்மாதிரியான கடைத் தொகுதி அமைக்கப்படும்.இங்குவசிக்கும் அரச ஊழியர்களின் பிள்ளைகளுக்குசிறந்தஎதிர்காலம்உண்டு. அடுத்த ஆண்டின் முற்பகுதியில் வீடமைப்பு அதிகாரசபையின் பொறுப்பில் இந்த வீட்டுத்திட்ட காணிகள் அவர்களுக்கு உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படும். ஓமந்தை அரச ஊழியர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாகவே வீடு கட்டாத காணிகள் ஏனைய அரச ஊழியாகளுக்கு மாற்றிக் கொடுக்கப்படும். காணிகள் தேவையானோரின் விவரங்கள் கோரப்படவுள்ளன–என்றார்.

இந்தச் சந்திப்பில் ஓமந்தை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கு.சண்முகலிங்கம், செயலாளர் க.பேர்ணாட்,நிர்வாக சபை உறுப்பினரும்– துணுக்காய் பிரதேசசெயலக தலைவருமாகிய குணபாலன் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (வ–402)

## போரால் பாதித்த குடும்பத்துக்கு 'உதவும் இதயங்'களின் உதவி




பளை, டிசெ.22
போர் அவலங்களைத் தாங்கி வாழ்ந்துவரும்தமிழ்மக்களுக்கு தம்மாலான உதவிகளை ஜேர்மனியைச் சேர்ந்த 'உதவும் இதயங்கள்' அமைப்பு தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கின்றன. பளை, தம்பகாமம் பகுதியைச் சேர்ந்த மறைந்த முன்னாள் போராளியினது குழந்தைகளது கல்விக்கு அந்த அமைப்பு இப்போது கைகொடுத்துள்ளது. உத்தியோகபூர்வமாக உதவித் தொகையை அந்த அமைப்பின் இலங்கை இணைப்பாளரும் வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழுத்தலைவருமான ச.சஜீவன் போராளியின் பாரியாரிடம் நேரில் கையளித்துள்ளார்.

ஐந்துகுழந்தைகளதுதந்தையான குறித்த முன்னாள் போராளி நீண்டகாலம் புனர் வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தநிலையில்அண்மையில் இடம்பெற்ற விபத்தொன்றில் உயிரிழந்திருந்தார். (வ)

## விபத்துக்கள்



### பாடசாலை உப அதிபர் விபத்தில் காயம்

புதுக்குடியிருப்பு ,டிசெ. 22
மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரு பிள்ளைகளின் தாயான உப அதிபர் மாந்தை கிழக்கு வன்னிவிளாங்குளம் சந்தியிலுள்ள சோதனைச் சாவடியில் வாகனங்களை மறிப்பதற்காகசோதனைச்சாவடியில் வைக்கப்பட்டிருந்த மரத்துடன் மோதுண்டு தலையில் படுகாயமடைந்தார். அவர் மாங்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகாக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பாலி நகரைச் சேர்ந்த இரு பிள்ளைகளின்தாயானபிரேமச்சந்திரன்பதுமைராணி என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார். கடந்த வாரமும் அதே இடத்தில் இதே போன்ற விபத்து இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (வ–115)

### மூதூர் பஸ் விபத்தில் 6 வயதுச் சிறுவன் சாவு

திருகோணமலை, டிசெ.22
திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு ஆரையம்பதி நோக்கி வந்த தனியார் பஸ் ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 6.30 மணி யளவில் மூதூரில் விபத்துக்குள்ளாகியது. இதில் 6 வயது சிறுவன் உயிரிழந்துள்ளதுடன் சாரதி பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு– ஆரையம்பதியிலிருந்து திருகோணமலைக்குச் சுற்றுலாவுக்காகச் சென்று விட்டு ஆரையம்பதி நோக்கி திரும்பி வரும் வழியில் மூதூர் அன்சில் ஹோட்டலுக்கு முன்பாக உள்ள மரம் ஒன்றில் மோதியதாலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது. மேலதிக விசாரணையை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(வ)

### கார்–ராணுவ டிப்பர் விபத்து



காருடன் இராணுவ டிப்பர் மோதியதில் கார் பகுதி யளவில் சேதமடைந்தது. ஸ்ரான்லி வீதியில் இருந்து மானிப்பாய் வீதியை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த காரும் காங்கேசன்துறை வீதியினூடாக மானிப்பாயைநோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ வாகன மும் முட்டாஸ் கடைச் சந்தியில் நேற்று முன் தினம் மோதின. இதன் போது காரின் பின்பக்கக் கதவுப் பகுதி ஓரளவு சேதமடைந்தது. (வ–ரி)

## வலி.தென்மேற்கில் பாதீனிய ஒழிப்பு

வலி.வடக்கு. 22
வலி.தென்மேற்குபிரதேச இளைஞர் கழக சம்மேளன எல்லைக்குள் பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக் கப்பட்டு இடம் பெற்று வரு கின்றன.

பிரதேசஎல்லைக்குட்பட்டபொது இடங்களிலுள்ள பாதீனியம் அந்தப் பகுதி இளைஞர் கழகங்களால் ஒழிக்கப்பட்டுவருவதுடன் தனியார் காணிகளில்உள்ளபாதீனியம்தொடர்பில்காணி உரிமையாளர்கள் வலி. தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தால் அறிவுறுத்தப்பட்டும் வருகின்றனர். இதன் ஒரு கட்டமாக மானிப்பாய் மேற்கு ஜே/140 இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில்சண்டிலிப்பாய் மதவடிப்பகுதியில் காணப்பட்ட பாதீனியம் முற்றுமுழுதாக ஒழிக்கப்பட்டது. சுமார் நான்கரைப் பரப்புக்கும் மேற்பட்ட பகுதியில் காணப்பட்ட பாதீனியம் மானிப்பாய் மேற்கு ஜே/140 இளைஞர் கழகத்தின் தன்னார்வுப் பணியின் மூலம் ஒழிக்கப்பட்டது.

பாதீனிய ஒழிக்கப்பட்ட பகுதிக்கு அண்மையில் அதிகளவான விளைச்சல் நிலங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



நிகழ்வில்பிரதேசஇளைஞர்நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தின் தலைவர் பே.சாம்பவி, செயலாளர் அ.கீர்த்தனா, பொருளாளர் கம்சிகா, கணக்குப்பரிசோதகர் கிரிஷாந், அமைப்பாளர் கௌசிகன் உள்ளிட்ட அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். (வ–86)

## சந்தை விற்பனை பிரிவுகள் திறப்பு

சாவகச்சேரிநகரசபையின்பொதுச் சந்தை வளாகத்தில் நாடு நகர அபிவிருத்தி அதிகார சபையால் அமைக்கப்பட்டு வரும் சந்தை விற்பனைப்பிரிவுகள் எதிர்வரும் 28ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளன.

6 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சந்தை விற்பனைக் பிரிவுகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு சந்தையைச் சுற்றி காப்பெற் வீதி அமைக்கும் பணிகளும் சந்தை விற்பனை பிரிவுகள்அமைக்கும்பணிகளும்படையினரால் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜனாதிபதியின் வருகையையிட்டுநகரசபையின்நவீனசந்தை கட்டடத்தை புதிய வர்ணபூச நகரசபையினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ–9)

# அம்மாடியோவ்!

## இவ்வளவு போட்டிகளும் பரிசுகளும் எமக்கா?



| இல | போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு ரூ. | 2ஆம் பரிசு ரூ. | 3ஆம் பரிசு ரூ. | மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| | | C | தரம் 3, 4, 5 | 5,000 | 4,000 | 3,000 | மாகாணம் |
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | C | தரம் 3, 4, 5 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |

# 30

அகவையில் உதயன்

## தமிழ் வளர்ப்போம் தமிழால் இணைவோம்!

### *கவிதை! கவிதை!!*

### *வெற்றியிலும் பரிசு மழையிலும் திளைத்திடுங்கள்*

## உங்களால் முடியும் மாணவர்களே!

**தமிழ்க் கவிதை மேம்பாட்டில் தீவிர கரிசனைகாட்டிவரும் உதயனின் உதயன் 30ஆவது ஆண்டு மாபெரும் கவிதைப் போட்டி**

**தரம் 10, 11, 12, 13 இல் கற்கும் மாணவர்களே!**

**கவிதைத் தேர்வில் கலந்துகொண்டு பரிசில்களை வெல்லுங்கள்**

### கவிதைக்கான தலைப்புக்கள் இதோ!

- 'ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்'
- 'கற்றதன் வழி உயர்வு காண்போம்'

கவிதை ஒவ்வொன்றும் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். கவிதைகள் மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.

அனுப்பப்படும் கவிதைகள் முன் எப்பொழுதும் வெளியிடப்படாதது என்பதனையும், சொந்த ஆக்கம் என்பதனையும் ஆசிரியர்/ அதிபர் உறுதி செய்தல் வேண்டும்.

தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம், அழகிய கையெழுத்தில் அல்லது கணினியில் அச்சிடப்பட்டதாக கவிதை அமைதல் வேண்டும்.

**கவிதையை 2015.02.28 இற்கு முன்னர்**

**30 அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.**

உங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தி கவிதைகளை ஆக்குங்கள்.
உடன் உதயனுக்கு அனுப்பி வையுங்கள்.
உதயன் விண்ணப்பப் படிவத்தில் வேறாக உங்கள் விவரங்களை இணைக்க மறந்து விடாதீர்கள்.

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:–
செல்வன்/செல்வி ..........................................................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..........................................................
கற்கும் பாடசாலை: ..........................................................
தரம்: ...............

பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..........................................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்:..........................................
ஆசிரியரின் பாடத்துறை: ..........................................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ ..இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .......................................... அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

உதயன் பத்திரிகையுடன் நாளாந்தம் இணைந்திருங்கள்!

# கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பசப்பு வார்த்தைகளுக்கு மோசம் போக முடியுமா?

இன்றிலிருந்து சரியாக 18 நாள்கள் இருக்கின்றன இந்த நாட்டில் வாக்குரிமையுள்ள குடிமக்கள் அனைவரும் அவர் அவருக்குரிய வாக்குச் சாவடிக்குச் சென்று தமது புனிதமான ஜனநாயகக் கடமையான வாக்குரிமையை நிறைவேற்றுவதற்கு.

எப்போதையும் விட இம்முறை ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் மிக மிக பரபரப்பானதாகவும், எதிர்பார்ப்புக்கள் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது. அதற்குப் பல காரணங்கள் உண்டு.

ஏற்கனவே இரண்டு தடவை பதவியிலிருந்த மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையும் அந்தப் பதவியைக் கைப்பற்றப் போட்டியிடுகின்றார். கடந்த இரு தடவைகளிலும் அவருடைய அமைச்சரவையில் பணியாற்றியவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தவருமான மைத்திரிபால சிறிசேன அங்கிருந்து வேறு சில சகாக்களுடன் எதிரணிக்கு வந்து ராஜபக்ஷவுக்கு எதிராக போட்டியில் இறங்கியுள்ளார். எதிரணியிலிருந்து பல கட்சிகளைய்யும், கட்சி உறுப்பினர்களையும் தம் பக்கம் இழுத்து வைத்துக் கொண்டு செயற்பட்டு வந்த ராஜபக்ஷவுக்கு இது பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

அதைவிட சிறிசேனவும் அவருடன் வந்தவர்களும் ராஜபக்ஷ அரசின் செயற்பாடுகள் குறித்து, வெளியிட்டு வரும் அதிர்ச்சித் தகவல்களும் அவர்களுக்கு மகிழ்ச்சியளிப்பவையாகக் காணப்படவில்லை. அதனால் வெளிநாட்டு சதித்திட்டங்கள், சிங்கப்பூரில் புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் ஆலோசனை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இரகசிய ஒப்பந்தம் என்றெல்லாம் அரசுத் தரப்பிலிருந்து பிதற்றப்படுவதைக் கேட்கின்றோம்.

இதற்கிடையில் தாம் பதவிக்கு வந்ததும் செயற்படுத்துவதற்கான தேர்தல் அறிக்கையொன்றையும் சிறிசேன தமது சார்பு கட்சிகளுடன் இணைந்து வெளியிட்டுள்ளார். பொதுவில் அந்த அறிக்கை சாதாரண மக்களுக்கும் அரசு, தனியார் மற்றும் தோட்டத்துறை மக்களுக்கும் ஆர்வத்தைத் தூண்டுவதாகவே காணப்படுகின்றது என்றாலும், நாட்டின் தேசிய பிரச்சினையில் சிறிசேன எவ்வாறு செயற்படப் போகிறார் என்பது விளக்கப்படாமை தமிழ் பேசும் மக்களுக்கு ஏமாற்றமளிப்பதாகவே கருதப்படுகின்றது.

அதேவிதம் ஜனாதிபதி மஹிந்த தரப்பிலிருந்தும் தேசியப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு பொருட்டாகவே இவர்கள் கருதுவதாகத் தெரியவில்லை.

நாடாளுமன்றத்துக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளை அமோகமாக அங்கீகரித்த தமிழ் மக்களை வெறும் கிள்ளுக்கீரைகள் போல் எவரும் எடைபோடலாகாது. அவர்கள் 60 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டு அரசியலை நன்கு அறிந்து அனுபவித்தவர்கள், பசப்பு வார்த்தைகளில் மோசம் போகக் கூடியவர்கள் அல்லர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேசி பேசியே காலம் கழிக்கிறார்கள். நடைமுறையில் எதைச் சாதித்தார்கள் என்று கேட்கப்படுகின்றது. இதே மாதிரியான ஒரு சந்தர்ப்பத்தில் 30 களில் இந்திய பிரதமர் ஜவகர்லால் நேரு எழுதிய தம் சுயசரிதையில் இப்படியான கேள்விக்குப் பதில் கூறியிருக்கிறார்.

"பேசுவதைத் தவிர அவர்களால் வேறு என்னதான் செய்ய முடியும்?" என்பது அது.

சகல அதிகாரங்களையும் வளங்களையும் அரசு தன் கையில் வைத்துக்கொண்டு சட்டப்படி உள்ளவைகளையும் இல்லாமற் செய்ய முயல்கையில் அவர்களால் வேறு என்னதான் செய்ய முடியும்.

# வடக்கு வாழ் தமிழர்களது 7 லட்ச வாக்குகளுக்காக மைத்திரிபால ஆடும் ஆட்டம்

சிங்கள மூலம் மவ்பிம
தமிழில் வீஎஸ்ரி

மைத்திரிபாலவும் பொன்சேகா போன்றவரா? என அண்மைய நாள்களில் அரச விரோதத் தரப்பினர்கள் அச்சத்துடன் தமக்குள் கேள்வி எழுப்பிக் கொள்கின்றனர். 2010 ஆம் ஆண்டைய ஜனாதிபதித் தேர்தல் வேளையில், ஆரம்பத்தில் வெற்றியடைவார் எனக் கருதப் பட்ட சரத் பொன்சேகா, இடைநடுவில் அதைக்கெடுத்துக் கொண்டமை போன்று தற்போது மைத்திரிபாலவும் அதைக் கெடுத்துக் கொள்ளக் கூடுமா? என்பதே அவர்களது அந்த அச்சம். சரத்பொன்சேகா அன்று தனது வெற்றிவாய்ப்பைப் பாழடித்துக்கொண்டமை குறித்து அன்று மஹிந்தவின் வெற்றிக்காக உழைத்தவரும், அண்மையில் அரச தரப்பிலிருந்து எதிரணியுடன் இணைந்து கொண்டவருமான பிரமுகரொருவர் தெரிவித்த தகவல் இது.

"புலனாய்வுத் துறையினரதும் , தனிப்பட்ட நிறுவனங்களினதும் கருத்துக் கணிப்பு முடிவுகளை நாம் தினமும் அவதானித்தோம். அதன்படி மஹிந்தவை விட பொன்சேகாவுக்கு பொதுமக்கள் ஆதரவு பெருமளவில் அதிகரித்துச் செல்வதை உணர்ந்தோம். அதனை எவ்வாறு மாற்றியமைப்பதென எமக்குள் ஆலோசித்தோம். பொன்சேகாவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்புபடுத்த இயலுமா என எங்களில் ஒருவர் வினாவினார். லங்காதீப பத்திரிகையைப் பயன் படுத்தி அதனை நிறைவேற்றித் தருவதாக மற்றொருவர் உறுதியளித்தார். அதற்கமைய அடுத்த வார இறுதி லங்காதீப பத்திரிகையில் சரத்பொன்சேகா தமது நிபந்தனைகளுக்குச் சம்மதம் தெரிவிக்கிறார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார் எனச் செய்தி பிரசுரமாகியத்து. அத்தோடு சம்பந்தனுடன் தொடர்பு கொண்டு அவரது வாய்மொழி மூலம் பெறப்பட்ட கருத்து இதுவெனவும் பத்திரிகைச் செய்தி தெரிவித்தது. குறிப்பிட்ட ஞாயிறன்று இரவு இடம்பெற்ற தொலைக்காட்சி விவாத நிகழ்வொன்றிலும் எமது அமைச்சரொருவர் அந்தச் செய்தியைப் பூதாகரமாக்கியிருந்தார். எதிரணித் தரப்பிலிருந்து அந்த விவாதத்தில் கலந்து கொண்டோர். வாய் மூடி மௌனமாகினர். எங்கு பற்ற வைக்க வேண்டுமோ, அங்குதான் பற்ற வைத்திருக்கிறோம் என்பதை நாங்கள் அப்போது உணர்ந்து கொண்டோம். பொன்சேகா – த.தே.கூட்டமைப்பின் தேர்தல் ஒப்பந்தம் என்ற அந்த பரப்புரைக் குண்டு, தேர்தல் ஆதரவு அலையை தலைகீழாக மாற்றிவைத்தது"

மேற்குறித்த தகவல் தொடர்பாக பொன்சேகா தரப்புப் பரப்புரைப் பணிகளில் முன்னின்று செயற்பட்ட பிரமுகரிடம் கேட்டபோது அவர் கூறிய கதை இது.

குறிப்பிட்ட தேர்தல் ஒப்பந்தம் தொடர்பான தகவல் பரவியதும் நாங்கள் குழப்பமடைந்தோம். லங்காதீப பத்திரிகை ரணிலின் மாமனாரது பத்திரிகை என்பதால், ரணிலிடம் கூறி அந்தச் செய்தி பொய்யானதெனப் பத்திரிகையில் பிரசுரிக்கச் செய்யுமாறு நாம் பொன்சேகாவிடம் கூறினோம். ரணிலோ தமது மாமனாரின் பத்திரிகையைக் காப்பாற்றுவதற்காக நாடகமொன்று ஆடினார். அதனால் பிரயோசனம் எதுவுமில்லை. சம்பந்தன் மூலமாக குறிப்பிட்ட அந்தச் செய்தி பொய்யானதெனக் கூறவைப்போம். நாளை நான் சம்பந்தனுடன் பேசி அதற்கு ஒழுங்கு செய்கிறேன் என ரணில் எங்களுக்கு உறுதியளித்தார். ரணில் சம்பந்தனைச் சந்தித்த பின்னர், குறிப்பிட்ட மறுப்புச் செய்தியைப் பெற்றுக்கொள்ள எமது பரப்புரைக் குழு சம்பந்தனுடன் தொடர்பு கொண்டபோதும், சம்பந்தன் தொலைபேசித் தொடர்பைத் துண்டித்துவிட்டு இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார். அந்த வேளையில் ரணிலுக்கும் பொன்சேகாவுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஆரம்பித்திருந்ததால், ரணிலே சம்பந்தனை அத்தகைய மறுப்பறிக்கை எதனையும் வெளியிடவேண்டாமெனக் கூறி அவரை இந்தியாவுக்கு அனுப்பி வைத்து பொன்சேகா தோல்வியடையும் வரை காத்திருந்தார் என ஒரு சிலர் எண்ணினர். பொன்சேகா குறித்து வடபகுதித் தமிழ் மக்கள் மனங்களில் இருந்த வைராக்கியத்தைப் போக்க, பொன்சேகாவுக்கு அரசு புலி முத்திரை குத்துவது நல்லதே எனக் கருதி ரணிலும் சம்பந்தனும் இணங்கிக் கொண்டனர் என வேறு சிலர் கூறினர். இருந்த போதிலும் தமிழ் மக்களது வாக்குகள் பொன்சேகாவுக்கே கிட்டுமென இவ்விருவரும் நினைத்திருக்கக் கூடுமென வேறு சிலர் கருதினர்.

இது அந்த இரண்டாமவர் – பொன்சேகா தரப்புப் பிரமுகர் தெரிவித்த தகவல். அது உண்மையானதே. பொன்சேகா தரப்பில் செயற்பட்ட மங்கள சமரவீரவும் அனுரகுமார திஸநாயகவும் "லங்காதீப" பத்திரிகை அரசின் எடுபிடியாகச் செயற்படுவதாக ஊடகவியலாளர்கள் சந்திப்பில் வைத்துக் குற்றம் சாட்டினர். அதற்குப் பின்னரே வெள்ளைக்கொடியுடன் சரணடைய வந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துமாறு கோத்தபாய ராஜபக்ஷ கூறியதாக சரத் பொன்சேகா "சண்டே லீடர்" பத்திரிகைக்கான பேட்டியில் கூறியிருந்தார். அந்தக் கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்குமாறு ஜே.வி.பி. பொன்சேகாவுக்கு அழுத்தம் கொடுத்தபோது அந்தவேளையில் சென்னையில் இருந்த ரணில் இந்திய ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோது பொன்சேகா அவ்விதமே கூறியதாகப் பூடகமாகக் கூறியிருந்தார். அதனை பொன்சேகாவைத் தோல்வியுற வைக்க ரணில் மேற்கொண்ட சதியென்று சிலர் கருதினர். வேறு சிலரோ பொன்சேகாவுக்குத் தமிழர்களது வாக்குகளைப் பெற்றுக்கொடுக்க ரணில் அடித்த 'கேம்' அதுவென எண்ணினர். அந்த வேளையில் ரணில் தரப்பு 'சண்டேலீடர்' பத்திரிகைக்கு உதவும் வகையிலேயே செயற்பட்டு வந்தது. மேற்குறிப்பிட்ட இரு கருத்துக்களின் காரணமாகவே பொன்சேகாவின் ஆதரவு அலை வீழ்ச்சி கண்டது.

குறித்த லங்காதீப மற்றும் சண்டே லீடர் செய்திகளை முன்னிலைப்படுத்தி நாங்கள் பெரும் பரப்புரையை முன்னெடுத்தோம். இருந்தாற்போல் திடுதிப்பென பொதுசன கருத்துக் கணிப்பில் மஹிந்தவை விட பொன்சேகா ஆதரவு அலை வீழ்ச்சி கண்டது.

இது தற்போது எதிரணியில் இணைந்து கொண்டுள்ள, முன்னர் 2010 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவின் பரப்புரைக் குழுவில் செயற்பட்ட பிரமுகரொருவர் வெளியிட்ட இரகசியம்.

பொதுவேட்பாளர் மைத்திரிபாலவும் அந்த வேளையில் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற வகையில் அந்தப் பரப்புரை நடவடிக்கைகளில் பெரும் பங்காற்றியிருந்தார். அந்த வகையில் பொன்சேகாவின் தவறு குறித்து அவர் நன்கறிவார். அத்தகைய தவறுகளைத் தவிர்த்துக் கொள்வதற்காகவே அவருக்கு ஹெல உறுமய தரப்பு இன்று தேவைப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் எப்போதுமே பதவியிலிருந்த ஜனாதிபதிமார் எதிரணி வேட்பாளர்கள் மீது புலிச்சாயம் பூசியே தேர்தலில் வெற்றிபெற்றுள்ளனர். அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் கூட இந்தப் போக்கே தொடரப் போகிறது. எதிரணி தேர்தலில் வெற்றியீட்ட வேண்டுமானால் அதற்குத் தமிழ் மக்களது வாக்குகள் அவசியம். சிங்கள பௌத்த வாக்குகளுக்குப் பாதிப்பு ஏற்படும் விதத்தில் தமிழர்களது வாக்குகளை ஈட்ட நினைத்தால் எதிரணியின் பாடு அதோகதிதான்.

# குடும்ப ஆட்சிக்கு முடிவு தருமா தேர்தல்?

*த வோல் ஸ்ட்ரீட் ஊடகத்தில் (The Wall Street Journal) றஸீன் சாலி (Razeen Sally) எழுதியுள்ள கட்டுரை*

இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த மாதம் ஜனாதிபதித் தேர்தலை முற்கூட்டி நடத்தவுள்ளதாக அறிவித்த தானது இவர் மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாகப் பதவியேற்பதை நோக்காகக் கொண்டிருந்தது. ஆனால் ஜனவரி 08 அன்று இடம்பெறவுள்ள அதிபர் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து எதிரணியின் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டதானது தற்போதைய தேர்தலில் வெற்றி பெறுவதற்கான சாத்தியத்தை குறைத்துள்ளது.

ஒரு மாதத்துக்கு முன்னர் மைத்திரிபால சிறிசேன தற்போதைய மஹிந்தராஜபக்ஷவின் நாடாளுமன்ற அமைச்சராகவும் தற்போதைய ஆளுங்கட்சியின் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றியிருந்தார். ஆனால் கடந்த பத்தாண்டாக சிறிலங்காவை ராஜபக்ஷ ஆட்சி செய்து வரும் அரசியல் நடவடிக்கையில் மைத்திரிபால சிறிசேனவின் கட்சித் தாவலும் எதிரணியின் பொதுவேட்பாளராக இவர் அறிவிக்கப்பட்டமையும் ஒரு திடீர்த் திருப்பமாக அமைந்துள்ளது.

2009இல் தமிழ்ப் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொருளாதார அபிவிருத்தி தொடர்பான பரப்புரையை மேற்கொண்டு வருகிறார். இந்த அடிப்படையில், சிறிலங்காவானது ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தை பெரிதும் வரவேற்றுள்ளது. கால் நூற்றாண்டாக இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் பின்னர், தற்போது மக்கள் அச்சமின்றி தமது நாளாந் தத்தைக் கழிக்க முடிகிறது.

வீதிகள், பாலங்கள், பஸ் பாதைகள், மின்சக்தித் திட்டங்கள் நாட்டில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன. கொழும்பு மற்றும் நாட்டின் பெரும்பாலான பட்டிணங்கள் மேலும் அழகுபடுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான ஒரு சூழலில் இலங்கையில் வாழும் மக்களின் நிலை அரசியல் காரணங்களால் சீர் குலைந்துள்ளது. இலங்கையின் அரசியல், இனங்களுக்கிடையிலான நல்லுறவு, பொருளாதாரம் மற்றும் வெளியுறவுக் கொள்கை போன்றன மிகவும் மோசமடைந்துள்ளன.

அரசியல் ரீதியாக நோக்கில், சிறிலங்காவானது தனியொரு குடும்பத்தால் நிர்வகிக்கப்படும் ஒரு நாடாகக் காணப்படுகிறது. இது தற்போது நான்கு சகோதரர்களால் மட்டும் ஆளப்படுகிறது. அதாவது இலங்கையின் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ இவரது இரு சகோதரர்களான கோத்தபாய மற்றும் பஸில் மற்றும் அதிபரின் மகன் நாமல் ஆகிய நான்கு பேரால் ஆட்சிசெய்யப்படுகிறது. இதைவிட, ராஜபக்ஷவின் நெருங்கிய உறவுகள், நண்பர்கள் போன்றவர்களும் பிரதான பதவிக ளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.



சிறிலங்காவின் கொள்கைத் தீர்மானமானது குறித்த ஒரு சில நபர்களால் மட்டும் வரையப்படுகிறது. பொது நிர்வாகம், சட்டசபை, நீதிச் சேவை, பிரதேச சபைகள், காவல்துறை, இராணுவம் போன்றவற்றை நிர்வகிப்பவர்கள் ராஜபக்ஷவின் செல்வாக்கின் அடிப்படையில் நியமிக்கப் படுகின்றனர். இதேபோன்று வர்த்தகம், ஊடகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றனவும் ராஜபக்ஷவின் கையாள்களால் அச்சுறுத்தப்படுகின்றன.

மிகச் சுருக்கமாகக் கூறின், இலங்கையானது தற்போது சர்வாதிகாரப் போக்குள்ள ஒரு நாடாக மாறியுள்ளது. அதாவது ரஷ்யா மற்றும் வெனிசுலா போன்ற நாடுகளை விடவும் இந்திய உபகண்ட நாடுகளை விடவும் சர்வதிகாரப் போக்குள்ள நாடாக இலங்கை மாறிவருகிறது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததிலிருந்து இங்கு வாழும் இனங்களுக்கிடையிலான உறவு முன்னேற்றப்படவில்லை. தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மற்றும் கிழக்கில் போர் தீவிரமடைந்திருந்தது. இவர்கள் தற்போது கட்டுமான வசதிகள், புதிய வீடுகள் போன்றவற்றைப் பெற்றிருந்தாலும் கூட, இங்கு போரால் ஏற்பட்ட வறுமை மற்றும் உளவியல் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை. போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இராணுவம் தொடர்ந்தும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கில் இராணுவ ஆதிக்கம் அதிகரித்துள்ளது. பௌத்த பிக்குகளால் தலைமை தாங்கப்படும் பொதுபல சேனா என்கின்ற அமைப்பானது பள்ளிவாசல்கள், முஸ்லிம் கடைகள் மற்றும் கத்தோலிக்கத் தேவாலயங்கள் போன்றவற்றின் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இலங்கையில் என்றுமில்லாதவாறு சிங்கள–பௌத்த இனவாதம் தீவிரமடைந்துள்ளது. இதற்கு ராஜபக்ஷ அரசும் தனது ஆதரவையும் உந்துதலையும் வழங்கி வருகிறது.

அதாவது போர் முடிவடைந்ததிலிருந்து தற்போது வரை சிறிலங்காவின் பொருளாதாரமானது ஏழு சதவீதத்தைவிட அதிகரித்துள்ளது. விலையேற்றம், கடன், வட்டிவீதம் போன்றன குறைந்துள்ளன. நாட்டில் தற்போது வறுமை அதிகரித்துள்ளது. இதனால் வேலையற்றோர் வீதம் அதிகரித்துள்ளது. இலங்கை அரசும் தனது பொருளாதார வளர்ச்சியை பெருமிதமாகப் பேசுவதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். போருக்குப் பின்னான வளர்ச்சியானது நாட்டின் உற்பத்தி வீதம் அதிகரித்ததால் ஏற்பட்டதல்ல. அதாவது அனைத்துலக நாடுகளிடமிருந்து மானியமாகவும் கடனாகவும் அதிகளவு நிதியைப் பெற்றுக் கொண்டமையே இதற்குக் காரணமாகும்.

உள்நாட்டு தொழிற்றுறைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. இதற்குப் பதிலாக நுண்பொருளாதாரக் கோட்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. வர்த்தகப் பாதுகாப்பு நடைமுறைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. போட்டித் தன்மை குறைவடைந்துள்ளது. வெளிநாட்டு முதலீடுகள் தடைப்பட்டுள்ளன. கட்டுமானத் திட்டங்கள் மிக அதிகளவான நிதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேவேளையில்–இலங்கையின் பாதுகாப்புச் செலவினம் அதிகரித்துள்ளது. இராணுவத்தினர் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். நாட்டில் ஜனநாயகம் வீழ்ச்சியடைவதற்கும் பொருளாதார தேசியவாதம் அதிகரிப்பதற்கேற்ப வெளியுறவுக் கோட்பாடு வரையறுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் மேற்குலக நாடுகளுடனான உறவுநிலை மோசமடைந்துள்ளது. இந்தியாவுடனான இலங்கையின் உறவு நிலையில் விரிசல் ஏற்பட்டுள்ளது. ஆனால் சீனா, இலங்கையின் முதலாவது நண்பனாக செல்வாக்குச் செலுத்துகிறது. இலங்கையின் புதிய கட்டுமானத் திட்டங்கள் மற்றும் ராஜபக்ஷவின் பெருமையைப் பறைசாற்றும் திட்டங்களுக்கு சீனா அதிக கடன்களை வழங்குகிறது.

இலங்கையின் பூகோள பொருளாதார நலன்களை அடைந்து கொள்வதற்கேற்ற வெளியுறவுக் கோட்பாட்டை ராஜபக்ஷ வரையறுத்துள்ளார். அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்றன இலங்கையின் ஏற்றுமதியின் மூன்றில் இரண்டு பங்குக்குப் பொறுப்பாக உள்ளன. இலங்கை–இந்தியாவுடன் பொருளாதார உறவைப் பேணுவதற்கான முயற்சிகளைமேற்கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக, தென்னிந்தியாவுக்கு அருகி லுள்ள 300 மில்லியன் மக்களைக் கொண்ட நான்கு நாடுகளுடன் சிறிலங்கா பொருளாதார உறவைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இலங்கை அதிபர் ராஜபக்ஷ ஜனவரி 08இல் தேர்தலில் வெற்றி பெற்றால், இலங்கையானது மேலும் பொருளாதாரத் தேசியவாதம் மற்றும் சீனாவில் தங்கியிருக்க வேண்டிய பொருளாதாரத்துடன் இணைந்த அதிகாரத்துவம், சிங்கள–பௌத்த பேரினவாதம் மற்றும் இனவாதம் போன்றவற்றைக் கொண்ட ஒரு நாடாக மாறும்.

அதிபராகப் பதவியேற்று 100 நாள்களில் நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பேன் எனவும், அனைத்துக்கட்சி அரசை உருவாக்குவேன் எனவும் பிரதமர் தலைமையிலான நாடாளுமன்ற முறை மையை மீண்டும் நடைமுறைப்படுத்துவேன் எனவும் காவல்துறை, நீதிச்சேவை, பொதுச் சேவை போன்ற சுயாதீன நிறுவகங்களை மீளவும் நிறுவுவேன் எனவும் சிறிசேன வாக்குறுதி வழங்கியுள்ளார். இவையெல் லாம் வரவேற்கத்தக்க மாற்றங் களாகும். இலங்கையானது நம்பகமான பொது நிறுவகங் களைக் கொண்ட ஒரு நாடாகவும் சட்ட ஆட்சி மதிக்கப்படும் ஒரு நாடாகவும் மாற வேண்டிய தேவையுள்ளது. ஆனால் ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிடும் எதிரணியிலும் அதிகாரத்துவ சக்திகள் அங்கம் பெற்றுள்ளன.

எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இன உறவு தொடர்பாக எவ்வித கருத்துக்களும் முன்வைக்கப்படவில்லை. ஏனெனில் எதிரணியில் சிங்கள–பௌத்த இனவாதிகள் அங்கம் வகிக்கின்றனர். இதயசுத்தியுடன் கூடிய இன மீளிணக்கப்பாட்டை விரும்புவோர் இதற்காகப் போரிட வேண்டியிருக்கும். வடக்கு–கிழக்கு உட்பட மாகாண சபைகளுக்குவழங்கப்படாதுநீண்ட காலமாகத் தாமதிக்கப்படும் அதிகாரப் பரவலாக்கம் நாட்டின் இன மீளிணக்கப் பாட்டை ஏற்படுத்துவதற்கான ஒரு தீர்வாகும்.

சிறிலங்காவில் தாராளவாதப் பொருளாதாரம் நிலைநிறுத்தப் பட வேண்டும். பொது முதலீடுகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். தனியார்துறை செயற்படுவதற்கு வழிவகுக்கப்பட வேண்டும். வர்த்தக தாராள வாதம் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு உந்துதல் அளிக்கப்பட வேண்டும். பொதுத்துறை மீளவும் சீர்திருத்தப்பட வேண்டும். பாதுகாப்புச் செலவினம் குறைக்கப்பட வேண்டும். இவை அனைத்தும் சிறிலங்காவின் வெளியுறவுக் கோட்பாட்டில் மாற்றம் ஏற்படுத்தப்படுவதன் மூலம் சீரமைக்கப்பட வேண்டும். அத்துடன் சிறிலங்காவானது மேற்குலக நாடுகளுடனும் இந்தியாவுடனும் நல்லுறவைப் பேணுவதற்கான அழுத்தம் வழங்கப்பட வேண்டும்.

நடைமுறை ரீதியாக நோக்கில் சிறிலங்காவுக்கு பொருளாதார மற்றும் அரசியல் துறைகளில் சுதந்திரம் பேணப்பட வேண்டும். ஜனவரி 08இல் இடம்பெறவுள்ள தேர்தலில் எதிரணி வெற்றி பெறுமாயின் இது இலங்கையின் அரசியலில் ஏற்படக்கூடிய வரவேற்கத்தக்க திசைதிருப்பமாகக் காணப்படும். ஆனால் இது சுதந்திர சிறிலங்காவைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டத்தின் ஆரம்பமாக மட்டுமே அமையும்.

# வாசகர் திருமுகம்

## அரச பஸ்ஸுக்கு ஏற்பட்ட இடையூறுகள்

யாழ்ப்பாணம் வருவதற்காக முல்லைத்தீவு பஸ் நிலையத்துக்கு காலை 4.30 மணிக்கு வந்தேன். மூன்று பஸ்கள் யாழ்ப்பாணம் செல்வதற்கெனத் தரித்து நின்றன. மூன்றாவதாக நின்ற இ.போ.ச. பஸ்ஸில் ஏறி அமர்ந்து கொண்டேன். அங்கு வந்த அனேகர் அதில் ஏறியதைக் காணமுடிந்தது. சுமார் 4.45 மணியளவில் தனது பயணத்தை ஆரம்பித்தது. நான் ஏறிய பஸ் 5.10 மணிக்கு செல்லும் என அதன் நடத்துநர் தெரிவித்தார். 5.15 மணிக்கு இ.போ.ச.பஸ் புறப்பட ஆயத்தமான போது இரண்டாவதாக நின்ற பஸ் மெதுவாக நகர்ந்து சென்றது. அப்போது புறப்பட ஆயத்தமான இ.போ.ச.பஸ்ஸின் சாரதி என்ன நினைத்தாரோ அதனை நிறுத்திவிட்டார். 2, 3 நிமிட இடைவெளியில் குறித்த தனியார் பஸ் முல்லைத்தீவு செல்வபுரம் கிராமத்தைச் சுற்றி வந்ததோடு இ.போ.ச. பஸ்ஸையும் பின்னால் வந்து முந்திச் சென்றது. அப்போது இ.போ.ச. பஸ் முந்திச் செல்ல முற்பட்டபோது தனியார் பஸ் அதற்கு இடமளிக்காது வீதிக்கு குறுக்காக சென்று கொண்டிருந்தது. வட்டுவாகல் பாலத்தடி வரை வந்த போது 4.45 மணிக்கு புறப்பட்ட பஸ் அந்த இடத்தில் நிற்பதைக் கண்டேன். பின்பு ஓரளவு வேகமாக அது செல்ல இரண்டாவதாகச் சென்ற பஸ் இ.போ.ச பஸ்ஸை முன் செல்ல விடாது வீதிகளில் இரு பக்கங் களுக்கும் சென்று தடுத்தவாறு முன் சென்று கொண்டிருக்க முதலாவதாகச் சென்ற பஸ் பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு சென்றது. உடையார்கட்டுக்கு சற்று முன்பாக ஓரளவு விலகி செல்ல முடியும் என நினைத்த இ.போ.ச. சாரதி முன்செல்ல முயற்சித்த வேளை வீதியின் குறுக்கே மீண்டும் பஸ்ஸால் மறிக்கவே கடும் பிறேக் போட இ.போ.ச. பஸ்ஸில் இருந்தவர்கள் அனேகர் தூக்கி வீசப்பட்டனர். பின்பு ஆழமான பள்ளத்தில் இ.போ.ச. பஸ் தடம்புரளப் பார்த்தது. பரந்தன் வரை மறித்துவிட்டு அங்கு மேற்படி பஸ் நின்றிடவே 4.45 மணிக்கு புறப்பட்ட பஸ் அதே போல ஏ– 9 பாதையில் பின்னால் வந்த இ.போ.ச. பஸ்ஸை மறித்து இடையூறு செய்தவாறு இயக்கச்சி வரை வரவே இயக்கச்சியில் இரு பயணிகளை ஏற்ற தனியார் பஸ் நின்றபோது இ.போ.ச. பஸ் முந்திக்கொண்டு சென்றது. இது விடயமாக என்னால் புதுக்குடியிருப்பிலும் இன்னும் ஒரு பயணியால் விசுவமடு விலும் 119 இலக்கத்துடன் தொடர்பு கொண்டபோது பயன் கிடைக்கவில்லை. யாழ்ப்பாணம் வரை தொடர்ந்து இடையூறு ஏற்பட்டது.


*எம்.சிவா*

## கண் இருந்தும் குருடாய்

பரபரப்பான ஸ்ரான்லி வீதியில் போர்க் கால வடுக்களை மேல்மாடியில் சுமந்தபடி நிற்கும் "மொம்சாக்" கட்டடத்துக்கு எதிரான பாதையில் நிலத்தின் கீழான நீர்க்குழாய் வெடிப்புற்று, தண்ணீர் வீண் விரயமாகிறது. தண்ணீருக்கு ஆலாய் பறக்கும் இந்தக் காலத்தில் இந்தக் கட்டடத்தில் இயங்கும் பல நிறுவனங்கள் இதனை கண்டும் காணாததுமாக இருப்பது மிகவும் வேதனைக்குரியது. எமது வீட்டில் இப்படி தண்ணீர் வீணாவதை சகித்துக் கொள்ள முடியுமா? யார் எக்கேடு கெட்டாலும் தானும், தனது குடும்பமும் நிம்மதியாக இருந்தால் போதும் என்ற நிலைப்பாடு. தண்ணீர் தேங்கி நிற்பதனால் காப்பெற் வீதியும் பள்ளமாகிவிட்டது. இது சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு சமர்ப்பணம் . மேற்படி நீர்விரயம் பல மாதங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

*நலன்விரும்பி, சுன்னாகம்.*

### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# முஸ்லிம் நாடுகள் ஆதரிப்பது ஏன்?

ஐ.நாவில் இலங்கையைக் காப்பாற்றிவிடுவது முஸ்லிம் நாடுகள் தான் என்று ஜனாதிபதி.மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார். அதில் உண்மையும் உண்டு. இதை வெறும் பரப்புரை வார்த்தையாக மட்டும் எடுத்துக் கொள்ள முடியாது. அதற்குப் பின்னாலிருக்கின்ற அரசியலை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இதுவரைகாலமும் மஹிந்தரை சீனாவும், இந்தியாவும், அவ்வப்போது அமெரிக்காவும் தான் சர்வதேச அரங்கில் காப்பாற்றி வருகின்றன என்ற எண்ணத்துக்கு இன்னொன்றையும் சேர்த்துத் தந்திருக்கின்றார். அவை முஸ்லிம் நாடுகள். ஏன் முஸ்லிம்நாடுகள் இலங்கையைக் காப்பாற்றி விடுகின்றன என்ற சிந்தனை இந்த விடத்தில் எழுவது தவிர்க்க முடியாதது.

முதலாவது எண்ணெய் வியாபாரம்தான். இலங்கை உள்ளிட்ட நாடுகளில் முஸ்லிம் நாடுகள் செய்யும் எண்ணெய் வியாபாரமும், எண்ணெய்க்கப்பல் வியாபாரத்தில் இலங்கை. துறைமுகங்கள் பெறும் முக்கியத்துவம் முதலானவற்றைக் கவனத்தில் கொண்டே முஸ்லிம் நாடுகள் இந்தத் தார்மீக ஆதரவை ராஜபக்ஷ அரசுக்கு வழங்கிவந்திருக்கின்றன. இது தமிழர்களுக்கு உள்நாட்டளவில் பெரும் ஆபத்தைத் தரவில்லை யாயினும், சர்வதேச அளவில் தமிழர்களின் அரசியல் முன்னெடுப்புக்களை முன்னெடுக்கையில் பாதகங்களையே ஏற்படுத்தியிருக்கின்றன. இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானங்கள் கொண்டு வரப்படும்போதெல்லாம் அதிகளவில் அதற்கு முட்டுக்கட்டையாக இருப்பது முஸ்லிம் நாடுகளே என்கிற விவகாரத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதைவிட இந்த ஆதரவு நிலைக்குப் பிறிதொரு காரணமும் உண்டு. இலங்கை அன்றுதொட்டு வெளிக்காட்டி வரும் அமெரிக்க எதிர்ப்புவாதம். இதில் இலங்கை இரட்டை வேடமே போட்டுவந்திருக்கின்றது. உள்ளுக்குள் ஆதரவும், வெளியில் எதிர்ப்பையும் காட்டி அமெரிக்காவின் சலுகைகளைப் பெற்றுவந்திருக்கின்றது. ஆனால் போர் முடிந்தவுடன் இந்தநிலையில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. முற்றுமுழுதாக அமெரிக்காவை நிராகரித்து சீனாவின் பக்கம் சாய்ந்ததால்தான் இப்போது வலுத்திருக்கும் மேற்கு முரண்களுக்குக் காரணம். ஆனால் முஸ்லிம் நாடுகளோடு என்றுமே அமெரிக்காவுக்கு நட்பு இருந்ததில்லை. அது ஒரு பண்பாட்டு ரீதியான அரசியல் முரணாக இருப்பதால் இருதரப்பு உறவுகளும் ஒட்டுவதற்கு சந்தர்ப்பமேயில்லை. அப்பிடி ஒட்டினால் எண்ணெய் வியாபார நலனில் அடிப்படையாகத்தான் இருக்கும். எனவே நீடிக்கும் இந்த முரண்பாட்டினால், அமெரிக்காவை எதிர்க்கும் எந்த சிறு தீவாயினும் முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்கின்றன.

மற்றையது இலங்கையைப் போர்த்தியிருக்கும் அடிப்படைவாதப் பண்பாடும் முஸ்லிம் நாடுகளுடன் மிகவும் பொருந்திப் போகும் விடயங்களில் ஒன்றாக இருக்கின்றது. முஸ்லிம் நாடுகளில் இன்றும் மத அடிப்படையிலான சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. மிக இறுக்கமான கலாசார நடைமுறைகளை அந்த நாடுகள் கொண்டிருக்கின்றன. இலங்கையின் பௌத்தமும் அப்படியான ஒன்றுதான். முஸ்லிம் தேசியம் எப்படி இஸ்லாம் மதத்தின் அடிப்படையிலிருந்து கட்டமைவு பெற்றிருக்கின்றதோ, அதேபோலவே சிங்கள தேசியமும் பௌத்தத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டதுதான். எனவே தன் பாணியில் இருக்கும் நாடுகளில் ஒன்றாகவே இலங்கையை முஸ் லிம் நாடுகள் கணிப்பிடுகின்றன. ஆனால் உண்மையில் இலங்கை முஸ்லிம்களுக்கு ஆதர வான நாடாக இருக்கின்றதா? இதற்கு சரி யான விடையை தம்புள்ளவிலும், அளுத்கமவிலும் தேடிக்கொள்ள முடியும்.

**பத்தி எழுத்து**

# சிறுவர்



## பருந்தாரே...! பருந்தாரே...!!

*அகல விரித்த சிறகோடு*
*அழகாய்ப் பறக்கும் பருந்தாரே*
*சுகமாய் வானில் வட்டமிடும்*
*செய்தி என்ன சொல்வீரா?*


*கோழிக் குஞ்சைக் கண்டீரா?*
*கீச்சிடும் ஒலியை ரசித்தீரா?*
*கோலச் சொண்டுள் உமிழ்நீரா?*
*கொத்திச் சுவைக்க நினைத்தீரா?*

*பாவம் சின்னக் குஞ்சுகளாம்*
*பறக்க முடியாப் பிஞ்சுகளாம்*
*சேவல் காவல் செய்கிறதாம்*
*சின்னக் குஞ்சுகள் நடுங்கிறதாம்*

*தூக்கிடும் ஆசை கொள்ளாதீர்*
*துடிக்கும் குஞ்சுகள் கொல்லாதீர்*
*தாக்கியே உயிர்களை*
*அழிப்பதெல்லாம்*
*தப்பாம் உமக்குத் தெரியாதோ?*

*முற்றம் நிறைந்த மரமுண்டு...*
*முற்றிப் பழுத்த கனிகளுண்டு...*
*உற்றுக் கொத்தி உண்ணலாம் வா!*
*உறவு கொண்டு மகிழலாம் வா!!*

## மூன்று மீன்களின் கதை!



அதிக மேடோ, பள்ளமோ இல்லாத இடத்தில் நீர் நிறைந்த ஒரு குட்டை இருந்தது, அந்தக் குட்டையில் அதிக மான மீன்கள் இருந்தன. அவற்றுள் மூன்று மீன்கள் நட்புடன் இருந்தன. அந்த மூன்று மீன்களுள் ஒன்று முன் னெச்சரிக்கையுள்ள மீன், இன்னொன்று சமயத்துக்கு ஏற்றபடி நடந்து கொள்ளக் கூடியது. மூன்றாவது புத்தி குறை வானது. ஒருநாள் மீன்பிடிப்பவர்கள் அந்தக் குளத்துக்கு வந்து பார்த்தனர். அந்தக் குட்டையிலிருந்த மீன்களை யெல்லாம் பிடித்து விட வேண்டும் எனத்திட்டமிட்டனர். அவர்கள் அந்தக் குட்டையின் நான்கு பகுதிகளிலும் வடிகாலை வெட்டி விட்டனர். இத னால் அந்தக் குட்டையிலிருந்த தண்ணீர் வடிந்து வெளியேறிக் கொண்டிருந்தது. குட்டையிலிருந்த நீர் குறைந்து கொண்டே செல்வதைப் பார்த்த முன்னெச் சரிக்கையுள்ள மீன், 'குட்டையில் நீர் குறைகின்றது. இது ஆபத்து வரப்போவதைக் காட்டுகிறது. அதற்குள் நாம் எப்படியாவது வேறு ஒரு நீர்நிலைக்குப் போய் விடலாம். முன்கூட்டியே வரவிருக்கும் ஆபத்திலிருந்து தப்பிக்கும் வழியைக் கண்டவன் பின்னர் மகிழ்ச்சியுடன் வாழ்வான்' என்றது. அந்த மீனின் பேச்சைக் கேட்ட புத்தி மந்தமான மீன், 'ஆபத்து வரும் என்று நான் நினைக்கவில்லை. அவசரப்பட்டு, நெடுநாள்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தக் குட்டையை விட்டு வெளியேற எனக்கு மனமில்லை.' என்றது. இந்த இரு மீன்களின் பேச்சையும் கேட்ட சமயோசித புத்தியுள்ள மீன், 'ஆபத்து வரும் போது அதற்கேற்றபடி ஏதாவது செய்து தப்பித்துக் கொள்ளலாம்' என்றது. முன்னெச்சரிக்கையுள்ள மீன் வடிகால் மூலம் வெளியேறிக் கொண்டிருந்த நீருடன் போய் வேறொரு நீர் நிலையில் வாழத் தொடங்கியது. மறுநாள், மீன்பிடிப்பவர்கள் வந்தனர். நீர் ஓரளவு வடிந்திருப்பதைப் பார்த்துவிட்டு, குட்டையிலிருந்த மீன்களைப் பிடிக்கத் தொடங்கினர்.

மந்தப் புத்தியுள்ள மீன் மாட்டிக் கொண்டது. பிடிபட்ட மீன்கள் அனைத்தையும் கயிற்றினுள் கோர்த்து அருகே இருந்த சிறு பாறையின் மேல் வைத்தனர். இதைப் பார்த்த சமயோசித மீன் தானாகவே பிடிக்கப்பட்ட மீன்கள் கோர்க்கப்பட்டிருந்த கயிற்றைக் கவ்விப் பிடித்துக் கொண்டது. குட்டையிலிருந்த மீன்களைப் பிடித்த மகிழ்ச்சியில் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டனர். அவர்கள் அடுத்திருந்த நீர் நிலையில் தாங்கள் கயிற்றுள் கோர்த்து வைத்திருந்த மீன்களைக் கழுவுவதற்காக நீரில் முக்கி எடுத்தனர். அப்போது கயிற்றைக் கவ்விக் கொண்டு தொங்கிய சமயோசித புத்தியுள்ள மீன் அவர்களுக் குத் தெரியாமலேயே தண்ணீருக்குள் போய் தப்பியது. மந்தப் புத்தியுடைய மீனின் நிலைமை அவ்வளவுதான். முன்னெச்சரிக்கையும், சமயோசிதமாக நடக்கும் புத்தியுள்ள மீன்கள் தப்பின. வாழ்க்கையில் முன்னெச்சரிக்கையும், சமயோசித புத்தியுமுடையவர்கள் சுக வாழ்வடைவார்கள்.

CW K


இவ்வருடம் சாதாரண தர பரீட்சைக்கு தோற்றி உயர்தர வகுப்புக்காக கணித, உயிரியல் விஞ்ஞானத் துறையினை தெரிவு செய்யும் மாணவர்களுக்கான.....

ஒன்றுகூடல் GATHERING

THE NSA

காலம் : இன்று(22-12-2014) திங்கள் (காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணி வரை)
இடம் : வடமாகாண விஞ்ஞான சங்க கேட்போர் கூடம் (4வது மாடி) கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத்தொகுதி இல-12 K.K.S வீதி யாழ்ப்பாணம்.
HOT LINE - 077 123 7 333

தங்கள் இலக்கினை வெற்றி கொள்ள விரும்புகிறீர்களா ???? .........

மேலே விபரமளிக்கப்பட்ட ஒன்றுகூடலில் பங்குபற்றுவதன் மூலம் பாதுகாப்பான உயர் கல்விச் சேவை ஒன்றில் இணைந்து கொண்டு உங்கள் இலக்கினை வெற்றி கொள்ள இருக்கும் உங்களை அன்புடன் வரவேற்பதுடன் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முக்கிய குறிப்பு

- உள்நுழைவு முற்றிலும் இலவசமானது
- தங்களுக்கு வழங்கப்படும் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து ரூபா 100/= உடன் காலை 8.45 க்கு முன்பாக கேட்போர் கூடத்திற்கு சமுகமளிப்பதன் மூலம் ஒருங்கிணைப்பாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
- இல் அறிவித்தலே இறுதியானது.

ஏற்பாடு • உயர்தர வகுப்பு விஞ்ஞான மாணவர் ஒன்றியம் (2014-2015) தூய விஞ்ஞான திணைக்களம்.

ஊடக அனுசரணை உதயன்



செல்லா சினிமா யாழ்ப்பாணம்

விஜய், சமந்தா நடிப்பில்




எமது செல்லா சினி திரையரங்கில் உங்களது விளம்பரங்களை காட்சிப்படுத்த அழையுங்கள்: 077 326 6949



காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதியில் சிவன் கோயிலுக்கும், மனோகரா திரையரங்குக்கும் இடையில் 2½ பரப்புக் காணி (கடையுடன்) உடனடி விற்பனைக்குண்டு.
கடை, வீடு, Flats, Stores, Shopping Complex, அச்சுக்கூடம் போன்றவற்றிற்கு உகந்தது.
குடி தண்ணீர்க் கிணறும் உண்டு.

தொடர்பு: 077 686 5072, 077 609 3024

(சி/18376)(4.3.6)



நத்தார் அமோக மலிவு விற்பனை

Mangala

ARPICO NIPPONS DAMRO Piyestra Nilkamal Phoenix

போன்ற நிறுவனங்களின் அனைத்துத் தளபாடப் பொருள் களுக்கும் மூங்கில், மரம், உருக்கு, வெளிநாட்டுத் தளபாடங்கள் மின்சாதனப் பொருள்கள் அனைத்துக்கும் அமோக விலைக் குறைப்பு

3 door steal cupboard 19,500/- 14,900/-
Office cupboard 14,500/- 8,000/-
steal mirror cupboard 6x3 14,500/- 8,500/- 6x4 15,600/- 9,990/-
Glass Dining Table set 24,900/- 14,900/-
New Table Mate 4,500/- 2,400/-
Iron Board 1,500/- 1000/-
SU - XL SMKR Kitchen Rack 2,800/- 1,500/- 2,800/- 2,000/-

10% ⇒ 50% தள்ளுபடி
முந்துங்கள்! கையிருப்பு உள்ளவரை மட்டுமே!!

மங்களா காட்சியறை
இல. 536, கே.கே.எஸ். வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 8366, 8367, 0777 286069



நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு கொள்வனவு செய்யும் அனைத்துப் பொருள்களுக்கும் 10% விலைக்கழிவு



Style Park
Perfect Collection



நவ நாகரீக நவீன மய ஆடைகள், புத்தம் புதிய சாறி வகைகள்,
நங்கையருக்கேற்ற ஜவுளிகள், சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற
அதி சிறந்த ஆடைகளை விரும்பிய டிசைன்களில் பெற்றிட நாடவேண்டிய இடம்...
யாழ். மண்ணில் நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுகள்

171, K.K.S. Road, Jaffna. T.P: 021 222 8383

TCT MULTI TRADE CENTRE

# அறப்பணிக்காக ஸ்தாபிக்கப்பட்ட உங்கள்
# ரீசிரி பல்பொருள் விற்பனை நிலையத்தின்
# நத்தார், புதுவருட அதிரடி புதுமைகள்!

## (21.12.2014 - 31.12.2014)

**சிந்தியுங்கள் விரையுங்கள் சேமியுங்கள்**

**கையிருப்பு உள்ளவரை மட்டுமே!**

| இவற்றை வாங்கினால் | இவை இலவசம் |
|---|---|
| **Maam Biscuits** | |
| 1.Chocolate Chips – 250g | Cocount Cookies- 150g |
| 2.Milk Shorties – 320g | Ginger Shorties- 60g |
| 3.Banana Cream – 360g | Lemon Puff – 100g |
| 4.Chocolate Cream – 360g | Lemon Puff – 100g |
| 5.Apple Cream – 360g | Lemon Puff – 100g |
| 6.Better Carols – 270g | Ranwan Marie- 80g |
| 7.Ginger Shorties – 260g | Ranwan Marie – 80g |
| **Maliban Biscuits** | |
| 8.White Chocolate Puff – 200g | Light Marie – 65g |
| 9.Lemon Puff – 400g | Doubles Cream – 100g |
| 10.Chocolate Cream - 250g | Gold Marie – 80g |
| **Little lion Biscuits** | |
| 11.Milky Cookies – 400g | Coconut Cookies – 200g |
| **Lucky Land Biscuits** | |
| 12.Ginger'n rice – 400g | Bourbon -100g |
| 13.Milky Glucose – 300g | Orange Cream Smiley's – 100g |
| 14.Choco & Butter – 400g | Bourbon – 150g |
| **Master Biscuits** | |
| 15.Choco Rings – 300g | Bourbon – 100g |
| 16.Batter Rings – 300g | Bourbon – 100g |
| 17.Milk Biscuits | Bourbon – 100g |
| 18.Marie Mega Pack – 300g | Bourbon – 100g |
| 19.Prima Special Noodles – 430g | Anna Roasted Red Rice Flour -400g |
| 20.Ruhunu Noodles – 400g | Ruhunu Soya Meat – 65g |
| 21.Rasa Hari Special Noodles – 400g | lanka Soy – 50g |
| 22.Samaposha 200g x 2Pck | Samaposha – 80g |
| 23.Lanka Soy 90g x 2 Pck | Samaposha – 80g |
| 24.Ruhunu Soya Meat 3Pck | Ruhunu Soya – 01 |
| 25.Kandos Promises – 120g | Choconuts – 90g |
| 26.Ritzbury Chocolate Fingers- 200g | Choconuts – 60g |
| 27.Ritzbury Chunky Chocolate- 200g | Chocolate Fingers – 100g |
| 28.Turkey Sun Flower Oil – 200ml | Noodles – 400g |
| 29.Turkey Sunflower Oil 1L | Soya 50gx 2Pck |
| 30.Kotmale Chocolate Milk – 1L | Chox Chocolate Milk – 180ml |
| 31.Kotmale Vanilla Milk 1L | Chox Chocolate Milk – 180ml |
| 32.Bambi Baby Diaper | Baby Soap |
| 33.Clean & Clear Facial Wash – 100ml | Clean & Clear Facial Wash -50ml |
| 34.Natures Secrets Body Lotion | Papaya Facial Wash – 100ml |
| 35.Star Light Wash Powder 1Kg | 400g Star Light |
| 36.Lifebuoy Soap 3 | Lifebuoy Soap – 1 |
| 37.Cheramy Baby Soap 3 | 1 Baby Soap |
| 38.Panda Nappy Wash 500ml | Panda Baby Cologne -100ml |
| 39.Comfort 800ml after Wash | Comfort Refill pack 200ml |
| 40.Comfort 200ml | Surf Excel – 80g |
| 41.Horlicks Chocolate 400g | Lunch box |
| 42.Nestomalt – 400g box | Maggi Noodles – 84g |
| 43.Nespray Every Day 1Kg | Milo 200g |
| 44.Ceylonta Tea 200g | canister free |
| 45.Prima Stella Noodles 80g | Book Cover – 1 |
| 46.Zesta Tea 400g | Free Canister |
| 47.Watawala Pureceylon Tea – 400g | Exercise book 2 – 80Page |
| 48.Ceylonta Tea – 400g | Ceylonta Tea100g |
| 49.Zesta Tea 500g | 100g Zesta |
| 50.MD Mango Delight – 850ml | MD Tomato Sauce – 200ml |
| 51.MD Orange Delight – 850ml | MD Tomato Sauce – 200ml |
| 52.MD Mixed Cordial – 750ml | MD Soya Sauce – 190ml |
| 53.MD Mixed Fruit Cordial – 750ml | Coconut Vinegar 350ml |
| 54.MD Sherbet Syrup | Kheer Pudding Mix – 100g |
| 55.Gliz Dish Wash Liquid | Brush |
| 56.Comox Toilet Cleaner – 500ml | Toilet Brush |
| 57.Garnier Fructis Shampoo | Fairness Cream 18g |
| 58.Loreal Shampoo – 175ml | 75ml Shampoo |
| 59.Mortine Spray | Coil 1 Box |
| 60.Dettol Soap – 04 Pcs | Dettol Soap - 01 |
| 61.Vim Liqued – 500ml | 3 Steel wool |
| 62.Dash Car Wash 800ml | Harpic 200ml |
| 63.Harpic 750ml | Harpic Powder |
| 64.Air Wick | Harpic 200ml |
| 65.Lysol 950ml | Scouring Sponge |
| 66.Lysol 500ml | Sponge |
| 67.Ariel – 1kg | Ariel Washing Powder 200g |
| 68.Sani Fresh Toilet Cleaner- 500m | Odonil |
| 69.Schick Razor 1 pcs | 1 Pcs Schick Razor |
| 70.Nyle Body Lotion 100ml | Face Wash 50ml |
| 71.Soap Santoor 2 Pcs | 1 santoor Soap |
| 72.Clogate Tooth Paste | 1 Tooth Brush |
| 73.Velvet Soap – 3 | 1 Velvet Soap |
| 74.Cheese Bits – Diana 170g | wafers 90g |
| 75.Tomato sauce - MD 400g | Mix fruit Jam 225g |

| பொருட்கள் | குறித்த விலை | எமது விலை | சேமிப்பு |
|---|---|---|---|
| 1.Maliban Gift Selection 400g | - 220/- | - 190/- | 30/- |
| 2.Maliban Gift Tin 500g | - 450/- | - 400/- | 50/- |
| 3.Ruhunu String Hopper Flour 1Kg | - 142/- | - 100/- | 42/- |
| 4.Necto 1.5L | - 210/- | - 180/- | 30/- |
| 5.Pepsi 2.25L | - 250/- | - 220/- | 30/- |
| 6.Sustagen Chocolate | - 1600/- | -1450/- | 150/- |
| 7.Sustagen Vanilla | - 1600/- | - 1450/- | 150/- |
| 8.Turkey Sun Flower Oil 2L | - 1100/- | - 1040/- | 60/- |
| 9.Turkey Sun Flower Oil 1L | - 590/- | - 530/- | 60/- |
| 10.Turkey sun Flower Oil 3L | - 1625/- | -1550/- | 75/- |
| 11.Fortune Sun Flower Oil 2L | -1100/- | - 940/- | 60/- |
| 12.Fortune Sun Flower Oil 1L | -590/- | -520/- | 70/- |
| 13.Fortune Sun Flower Oil 5L | -2550/- | -2300/- | 250/- |
| 14.Fortune Vegetable Oil 5L | -1800/- | -1520/- | 280/- |
| 15.Fortune Vegetable Oil 2L | -740/- | -640/- | 100/- |
| 16.Fortune Vegetable Oil 3L | -1200/- | -1020/- | 180/- |
| 17.Paper Serviettes Eco Plus | - 110/- | - 70/- | 40/- |
| 18.Eva Dritex Wings (2pcs) | - 230/- | -200/- | 30/- |
| 19.Colgate Active Salt – 200g | - 430/- | -160/- | 270/- |
| 20.Rich Life Full Cream Fresh Milk 1L | - 185/- | -160/- | 25/- |
| 21.Ambewela Fullcream Fresh Milk | - 185/- | -160/- | 25/- |
| 22.Onjus Gold 1 L | - 270/- | - 240/- | 30/- |
| 23.Onjus 1L | - 225/- | - 200/- | 25/- |
| 24.Nestle Milk Maid 510g | - 240/- | - 220/- | 20/- |
| 25.Nescafe – 200g | - 1155/- | - 1000/- | 155/- |
| 26.MD Pineapple Jam -485g | - 290/- | -265/- | 25/- |
| 27.Sunquick Fruit Cocktail 840ml | - 680/- | - 580/- | 100/- |
| 28.Sunquick Orange 840ml | - 680/- | - 580/- | 100/- |
| 29.Vegetable Oil 3L-Vegetable | - 1150/- | -980/ | 170/- |
| 30.Fair and Handsome 60g | - 260/- | -234/- | 26/- |
| 31.Delmege Tin Fish Mackerel-425g | - 250/- | -180/- | 70/- |
| 32.Dream Softener With Liquid Detergent | - 750/- | - 600/- | 150/- |
| 33.Loreal Shampoo- 400ml | - 1270/- | -999/- | 271/- |
| 34.Garnier Shampoo- 400ml | - 935/- | - 750/- | 185/- |
| 35.Garnier men Oil – 100ml | - 835/- | -690/- | 145/- |
| 36.Astra – 500g | - 335/- | -300/- | 35/- |
| 37.Miranda 2.25L | -250/- | -220/- | 30/- |
| 38.Sausages-Keells 500g | -470/- | -430/- | 40/- |
| 39.Chicken - prima 1kg | -380/- | -330/- | 50/- |
| 40.French fries 1kg | -750/- | -650/- | 100/- |

* அத்துடன் நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு கேக் தயாரிப்பதற்கான பொருள்கள் மிகக் குறைந்த விலையில் முன்பக்கத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கேக் வகைகளுக்கு 10% விலைக்கழிவு வழங்கப்படுகின்றது.
* புதிய வகுப்பில் கால்பதிக்கும் மாணவச் செல்வங்களுக்குரிய அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் காலணி வகைகள் ஆச்சரிய மூட்டும் விலைக்கழிவில் விற்பனை செய்யப்படுகின்றது. கொள்வனவுக்கு ஏற்ப மாணவர்களுக்கு அன்பளிப்புகளும் வழங்கப்படும்.
* இந்நாள்களில் 500ml,1L,2L,4L,5L **Elephant House** ஐஸ்கிறீம் வகைகளுக்கு 10%விலைக்கழிவு வழங்கப்படும்.

இத்துடன் மேலும் எமது வழமையான சலுகைகள்

- எமது விற்பனை நிலையத்தில் 10000/- இற்குமேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு (4 Km தூரத்திற்குள் வசிப்பவர்களுக்கு) இலவச வாகன வசதி வழங்கப்படுகின்றது. (நிபந்தனைக்குட்பட்டது)
- இரண்டு மாதத்திற்குள் 25,000 ரூபாவிற்கு மேல் பொருள்களைக் கொள்வனவு செய்பவருக்கு 500/- Gift Voucher வழங்கப்படுகின்றது.
- அத்துடன் எமது வாடிக்கையாளர்களின் நலன் கருதி எம்மால் 150 இற்கு மேற்பட்ட பொருட்கள் (பால்மா, எண்ணெய் வகைகள் உட்பட) குறித்த விலையிலிருந்து விலை குறைப்பு செய்யப்பட்டு தொடர்ச்சியாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றமையை வாடிக்கையாளர்களுக்கு ஞாபகமூட்டுகின்றோம்

**TCT பான்சியகம்**

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அழகு சாதனப்பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், சமையல் பாத்திரங்கள், மின்சார உபகரணங்கள் மற்றும் தளபாட வகைகள் என்பன எங்கும் இல்லாதவாறு தமது சுயதெரிவுகளுக்கமைய ஒழுங்கமைக்கப்பட்ட எமது அழகு சாதனப் பகுதியில் உத்தரவாதத்துடன் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும். இக்காலப் பகுதியில்...

Osram CFL மின்குமிழ்களுக்கு 20% விலைக்கழிவும், குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் 3 வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசு வழங்கப்படும்.

கிறஸ்மஸ் அலங்காரப் பொருள்கள், பாடசாலை மாணவர்களின் காலணிகள், தண்ணீர்ப் போத்தல் சாப்பாட்டுப் பெட்டி என்பவற்றிற்கு 10% விலைக்கழிவும்,

மின்சாதனப் பொருள்கள், Panasonic CFL Bulb இற்கு 5% .விலைக்கழிவும்

ரெயின்கோ பொருள்கள் (குடை, நுளம்பு வலை, ரெயின் கோட்) ஆகியவற்றுக்கு 17% விலைக்கழிவும் வழங்கப்படும்

**TCT புடவையகம்**

விரைவாக மாறிவரும் நாகரீக மாற்றத்திற்கு ஏற்ப அனைத்து வயதினருக்கும் ஏற்ற புடவை வகைகள் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் தெரிவு செய்யப்பட்ட

- இருபாலருக்குமான ஜீன்ஸ் வகைகள், சேட் வகைகள், பிளவுஸ் வகைகள் என்பனவற்றிற்கு 10% விலைக்கழிவும் தெரிவுசெய்யப்பட்ட ஸ்கேட் வகைகளுக்கு 20% விலைக்கழிவும் வழங்கப்படும்.

- **21.12.2014 இருந்து 31.12.2014 வரை ரூபாய் 15,000/- இற்கு மேல் பொருள்களை ஓரே நாளில் கொள்வனவு செய்வோருக்கு உடனடியாக பெறுமதிமிக்க அன்பளிப்புப் பொருள் வழங்கப்படும்.**
  *** இக்காலப்பகுதியில் ரூபாய் 1000/- இற்கு மேல் பொருட்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில் 100 வாடிக்கையாளர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.**

உங்கள் நுகர்வுத் தேவைகளை ஒரே இடத்தில் நிறைவு செய்யவும், பருவகால சலுகைகளுக்கும் முந்துங்கள்! உங்கள் திருப்தி எங்கள் நிறைவு!

"அறப்பணியே எங்கள் முதற் பணி"

**ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்**

527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே. இலக்கம் - 021-7451895 E.mail : tctmc@dialognet.lk

## ஆக்கம்

# நான் நானாக இல்லையே!



வளர்ச்சிப் பருவத்தின் அதிமுக்கியமான கட்டம் சுயம் விழித்துக்கொள்வது. ஒரு புதிய சுய உணர்வு மலரும் அந்த உணர்வைத்தான் நாம் காதல் என்று நினைத்துக்கொள்கிறோம். அதுவரைக்கும்அனுபவம்கொண்டிராத ஒரு உணர்ச்சி. ஒரு புதிய தன்னுணர்வு. யாரோ ஒருவர் நமக்காக மட்டுமே நம்மை விரும்புகிறார் என்பது உயிரைச் சிலிர்க்கவைக்கும் உன்னத உணர்வு. அது வரையில் ஒரு மகனாக, மகளாக, சகோதரனாக அல்லது சகோதரியாக என்று மட்டுமே தெரிந்து, இப்போது அப்படி எதுவும் இல்லாமல் தனக்காகவே தான் முக்கியம் என்று ஒருவர் நினைத்துக் கொள்ளும் தருணம் அது.

அதற்கு முன்னாலும் பின்னாலும் நடக்க முடியாத அனுபவம் இது. அதனாலேயே அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அனுபவமாக இருக்கிறது. எந்த வயதிலும் இந்த அனுபவம் கிடைக்கலாம் என்பது உண்மையாக இருந்தாலும், பொதுவாகப் பதின் பருவத்தில்தான் இது நடக்கிறது. இந்த உலகத்தில் நம்மை ஒரு தனிச்சுயமாக நாம் அடையாளம்காணும்அற்புதஅனுபவம்அது. ஒருபக்கம் இதை மறுத்துக் கொண்டும், மறுபக்கம் திரைப் படங்களிலும் நாவல்களிலும் இதைப் பெரிதுபடுத்திக் காட்டிக் கொண்டும் இருக்கும் சமூகத்தின் பொய் முகம் இந்த அனுபவத்தின் உன்னதத்தை மறைத்து, சிதைத்துவிடுகிறது. இதன் உண்மையைச் சரியான விதத்தில் புரிந்துகொண்டால் மட்டுமே அந்த உன்னதம் தெரியவரும். அதற்குச் சமூகம் தன் பொய் முகமூடிகளைக்கழற்றிப்போட்டு விட்டு, வாழ்க்கை அனுபவத்தின் வெளிச்சத்தில் இதைப் பார்க்கக் கற்க வேண்டும்.

நானும் அவளும் 5 வயதிலிருந்து வகுப்புத் தோழர்கள். வளர, வளர எங்கள் நட்பும் சேர்ந்தே வளர்ந்தது. வெறும் தோழியாக மட்டுமில்லாமல் எனக்கு அறிவுரை சொல்லி, வழிநடத்துபவளும் அவளே. நான் 15 வயதை எட்டியபோது அவளிடம் எனக்கு இருந்தது நட்பு மட்டுமல்ல, காதலும்தான் எனத் தோன்றியது. உடனே அவளிடம் என் காதலைச் சொன்னேன். ஆனால் முதலில் எந்த பதிலையும் அவள் சொல்லவில்லை. கிட்டத்தட்ட நான்கு வருடங்கள் கழித்து என் காதலை ஏற்றுக்கொண்டு, நானும் உன்னைக்காதலிக்கிறேன் என்று சொன்னாள்.

நாங்கள் ஒரு வருடம் காதலர்களாக இருந்தோம். ஆனால் திடீரென என்னைத் தவிர்க்க ஆரம்பித்தாள். நான் உன்னைக் காதலிக்கவில்லை, தயவுசெய்து புரிந்துகொள் என்கிறாள். அவளிடம் ஏன் இந்தத் திடீர் மாற்றம் என்பது எனக்குப் புரியவில்லை. அவளை யார் குழப்பியிருப்பார்கள் என்று தெரியவில்லை. இப்பொழுது நான் என்ன செய்வது?

உறவு என்பது மிகவும் இயக்க பூர்வமாக நடக்கும் ஒரு ஆழ்மன முறைபாடு. அதை மனித மேல்மனத்தின் எல்லைகளுக்குள் அடக்கிவிட முடியாது. யார் மீது எப்போது மனத்தில் பிடிப்பு ஏற்படும், எப்போது அது விட்டுப் போய்விடும் என்பதை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. இதைப் பொறுப்பற்ற செயலாகப் பார்க்க வேண்டியதில்லை. உண்மையில் இது நமக்குள்ளே இருக்கும் குழந்தை மனத்தின் உள்ளியக்கம். ஆதரவும் அரவணைப்பும் தேடும் உள்ளியக்கம். நமக்குத் தெரிந்த, நாம் நன்றாக அறிந்த ஒருவரை அந்த மனம் பிடித்துக்கொள்வது இயல்பானது. ஆனால் அதில் வளர்ச்சி இல்லை. அதனால் சில காலம் கழித்து இது விட்டுப் போய்விடலாம். யாராவது அவளைக் குழப்பியிருப்பார்கள் என்று நீங்கள் உங்களைக் குழப்பிக்கொள்ளத் தேவையில்லை. இவ்வளவு நெருக்கமான தோழி என்பதைக் கணக்கில் கொண்டு அவள் உணர்ச்சிகளை மதித்து, அவள் முடிவை நீங்கள் எந்தக் கேள்வியும் கேட்காமல் ஏற்றுக்கொள்வதுதான் சரி. உங்கள் வலியும் வேதனையும்கூட உங்களை உங்கள் வளர்ச்சியின் பாதையில்தான் இட்டுச்செல்லும் என்பதையும் புரிந்துகொள்ளுங்கள்.

நான் 18 வயதுப் பெண். சிறு வயது முதல் ஒரே வகுப்பில் படித்தாலும் நானும், அவனும் எப்பொழுதுமே எதிரும் புதிருமாகத் தான் இருந்திருக்கிறோம். பத்தாம் வகுப்புமுடித்தவுடன் அவன் வேறு பள்ளிக்கு மாற்றமாகிப் போய்விட்டான். அதன் பின் அவனைச் சந்திக்கவே இல்லை. ஆனால் ஒரு வருடத்திற்கு முன், திடீரென்று ஒரு நாள் அவனிடமிருந்து எப்படி இருக்க? என ஒரு எஸ்.எம்.எஸ். வந்தது. நானும் பதிலாக எஸ். எம்.எஸ். அனுப்பினேன். அப்புறம் எப்பவாச்சும் இருவரும் எஸ்.எம்.எஸ். பரிமாறிக்கொள் வோம். போகப் போக அவனிட மிருந்து எஸ்.எம்.எஸ். வந்தாலே நான் பரவசமாக உணர ஆரம்பித்தேன்.

இப்படி இருக்க, சில மாதங்களுக்கு முன் ஒரு நாள் நான் பேருந்தில் பயணம் செய்யும் போது அவனும் எதேச்சையாக அதே பேருந்தில் இருந்தான். இருவரும் நான்கு வருடங்கள் கழித்து அன்றுதான் மீண்டும் பார்த்துக்கொண்டோம். சகஜமாகப் பேசினோம், அவ்வளவு தான். என் பள்ளி நாள்களில் இருந்த அளவுக்குக்கூட இப்பொழுது அவன் தோற்றம் வசீகரமாக இல்லை. ஆனால் எனக்கு என்ன ஆனது என்றே புரியவில்லை. அவனுடைய நினைவுகள்என்னைஆட்கொண்டு விட்டன. தினம் தினம் பேருந்தில் பயணிக்கும் போதெல்லாம் அவனும் அதே பேருந்தில் இருக்க மாட்டானா? என மனம் ஏங்கு கிறது. இதனால் நான்மன உளைச்சலுக்கு ஆளாகு கிறேன். என்னால் வேறெதையும் சிந்திக்க முடியவில்லை. இந்த எண்ணத்தை விட்டு வெளி வர வேண்டும். நான் முன்பு இருந்ததைப் போலவே சகஜமாக மாற வேண்டும். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று தயவு செய்து வழிகாட்டுங்கள்.

இந்த மனவலைப் பின்னலில் சிக்கிக்கொண்டுவிடாமல், இந்த எண்ணத்தை விட்டு வெளியில் வர-வேண்டும் என்ற உங்கள் நோக்கத்திற்கு முதலில் என் வாழ்த்துக்கள்.

உங்களுக்குப் பதினெட்டு வயது. உங்களுக்குள்உங்கள்பெண்மை முழுச் சுய உணர்வுடன் விழித்துக்கொள்ளும்பருவம் இது. நம் எல்லோருக்குள்ளும்பெண்மை ஆண்மை இரண்டும்உண்டு. இந்த வயதில் ஆண்மையை உள்ளடக்கிய தன் முழுமையை அடையும் ஏக்கம்உங்கள் மனத்தில் எழுவது மிகவும் இயல் பானதுதான். இது ஒரு அக மன முறைபாடு. இதை நாம் தவறாகக் காதல் என்று நினைத்துக் கொள்கிறோம்.

வெளியில் ஒரு ஆணை நாடிப் போவது மனத்தின் செயல்பாடு. ஆனால் வெளியில் உள்ள எந்த நபரையும்விட அந்த ஏக்கம் அதிமுக்கியமானது. ஒரு தவம் போல் அந்த ஏக்க உணர்வுடன் இருங்கள். மிகவும் பொறுமை வேண்டும் அந்தத் தவத்திற்கு. ஆனால் கொஞ்ச காலம் அவ்வாறு நீங்கள் இருக்க முடிந்தால் உங்களுக்குள்ளே தனித்துவம் வாய்ந்த உங்கள் சுயம் மலரும். உன்னதமானநிகழ்வு அது. அதற்கு எதுவும் ஈடில்லை.

இப்போது யாருக்கும் எந்த வாக்கையும் கொடுத்துவிடாதீர்கள்.

உங்களுக்குள்ளேயே இருக் கும் ஆண்மையுடன் ஒன்றிணைந்துவிட்டால் அதன் பிறகு நீங்கள் வெளியில் உங்களுக்குப் பொருத்தமான ஒருவருடன் முழுமையான வாழ்க்கை வாழ முடியும்.

## வணிகம்

# புதிய சஞ்சிகையை வெளியிட்டுள்ள ஏ.எம்.டபிள்யூ

இலங்கையின் கூட்டாண்மை துறையில் முன்னோடி நிறுவனமாகத் திகழும் அசோசியேட்டட் மோட்டர்வேய்ஸ் பிரைவேற் லிமிட்டெட் நிறுவனம், இலங்கையின் ரயர் துறை மற்றும் நிறுவனங்கள் குறித்த விளம்பரங்களை உள்ளடக்கிய புதிய சஞ்சிகை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்தச் சஞ்சிகைக்கு 'அபி எக்கட்ட' (நாம் ஒன்றாக) என பெயரிடப்பட்டுள்ளது. இந்த அறிமுக நிகழ்வு கண்டி, ஏர்ள்ஸ் ரீஜென்ஸி ஹோட்டலில் புனிநி நிறுவனத்தின் உற்பத்தி பணிப்பாளர் புஷ்பிக ஜனதீர அவர்களின் பங்குபற்றலுடன் இடம் பெற்றது.

இலங்கையின் ரயர் விநியோகத்தர்கள் மத்தியில் இந்த சஞ்சிகை இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளது. எட்டு பக்கங்களைக் கொண்ட இந்த 'அபி எக்கட்ட' (நாம் ஒன்றாக) சஞ்சிகையில், ரயர் விநியோகத்தர்களின் விவரங்கள், ரயர் உற்பத்தியில் பின்பற்றப்படும் புதிய நுட்ப முறைகள் மற்றும் ரீபில்டிங் துறை, பிறந்தநாள் மற்றும் திருமணநாள் வாழ்த்துக்கள் மற்றும் துறையுடன் தொடர்புடைய இதர பொருத்தமான விடயங்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஏ.எம்.எபிள்யூ இன் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை பிரிவின் சிரேஷ்ட முகாமையாளர் நிமல் எஸ்.ரத்நாயக்க இந்த 'அபி எக்கட்ட' (நாம் ஒன்றாக) சஞ்சிகை நிகழ்வில் கருத்து தெரிவிக்கையில், 'நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான ரயர் விநியோகத்தர்கள் காணப்படுகின்றனர்.

அவர்களின் மூலமாக ரயர் உற்பத்தித் துறைக்கு நிகரற்ற பங்களிப்பு வழங்கப்படுகிறது. 'அபி எக்கட்ட' (நாம் ஒன்றாக) போன்றதொரு சஞ்சிகையை அறிமுகம் செய்யும் திட்டத்தை வேறெந்தவொரு நிறுவனமும் முன்னெடுத்ததில்லை.

இந்த சஞ்சிகையில் ரயர் விநியோகத்தர்கள் பற்றிய வியாபார விபரங்கள், 'அவர்களின் அனுபவங்கள் மற்றும் சிந்தனைகள், இந்தப் பாரிய துறையில் எழும் புதிய முயற்சிகள் போன்ற பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த சஞ்சிகை ஒன்றின் தேவையை உணர்ந்த ஏ.எம்.டபிள்யூ, தற்போது அதை அறிமுகம் செய்துள்ளது' என்றார்.

இந்தச் சஞ்சிகைக்கு ரயர் விநியோகத்தர்களிடமிருந்து சிறந்த வரவேற்புகிடைத்துள்ளது. இதை ஒரு சிறந்த முயற்சியாக அவர்கள் கருதி வரவேற்றுள்ளனர். இந்த வரவேற்பு ஏ.எம்.டபிள்யூ சிறந்த ஊக்குவிப்பாக அமைந்துள்ளது. இந்தத் துறையை சேர்ந்த சகலரிடமும் இருந்து இந்த சஞ்சிகையில் பிரசுரிப்பதற்கு துறைசார்ந்த ஆக்கங்களை நாம் எதிர்பார்க்கிறோம் என ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.


ரயர் ரீபில்டிங் என்பது ஏ.எம்.டபிள்யூஇன் பிரதான வர்த்தக செயற்பாடுகளின் ஒரு அங்கமாக அமைந்துள்ளது. பாரம்பரிய முறைகளுக்கமைய ரயர்களை மீள நிரப்பக்கூடிய ஆற்றலைக் கொண்ட இலங்கையின் ஒரே நிறுவனமாக இது திகழ்கிறது.

1949 ஆம் ஆண்டு ஏ.எம்.எபிள்யூ நிறுவனம் தாபிக்கப்பட்டிருந்தது. இலங்கையின் ரயர் உற்பத்தித்துறையில் முன்னோடியாக இந்த நிறுவனம் அமைந்துள்ளது.



# உலகச் செய்திகள்

## சென்னையில் குழந்தைக்கு இதய மாற்று அறுவைச்சிகிச்சை



சென்னை, டிசெ.22

பெங்களூரில் மூளைச்சாவடைந்த குழந்தையின் இதயம் சென்னையைச் சேர்ந்த இரண்டரை வயதுக் குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை மூலம் பொருத்தப்பட்டது. இதற்காக 45 நிமிடங்களில் பெங்களூரில் இருந்து இதயம் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு அறுவைச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஒரு குழந்தையின் இதயத்தை இதய மாற்று அறுவைசிகிச்சைமூலம் இன்னொரு குழந்தைக்கு பொருத்தப்படுவது இது முதல் முறையாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

## காங்கிரஸுக்கு எதிரான வழக்கு அமெரிக்க நீதிமன்றம் தள்ளுபடி

சென்னை, டிசெ. 22

காங்கிரஸ் கட்சிக்கு எதிராக சீக்கிய அமைப்பு தொடர்ந்த மனித உரிமைகள் மீறல் வழக்கை அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

இதுதொடர்பாக 'நீதி கோரும் சீக்கியர்கள்' என்ற அமைப்பு தொடர்ந்த வழக்கு, நியூயோர்க் 2ஆவது சர்க்யூட் நீதிமன்றத்தில் 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அதன்போது நீதிமன்றம் தெரிவித்ததாவது:

இந்தியாவின் பிரதமராக இருந்த இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டதை தொடர்ந்து நிகழ்த்தப்பட்ட படுகொலைகளுக்கு காங்கிரஸ் கட்சியும், அக்கட்சியின் மூத்த தலைவர் கமல்நாத்தும் பொறுப்பு எனக் குற்றம் சாட்டி வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும், இந்தியாவில் இந்தியர்களுக்கு எதிராக மற்றொரு இந்தியரால் நிகழ்த்தப்பட்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இதனால், அமெரிக்காவுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. அத்துடன், பிற நாட்டில் நிகழ்ந்ததாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் மீது வெறும் வாதத்தை அடிப்படையாகக்கொண்டு உத்தரவைப் பிறப்பிக்க முடியாது என்று நீதிமன்றம் அறிவித்தது. (ஒ–ரி)

## குண்டுத் தாக்குதல்களில் ஈராக்கில் 10 பேர் சாவு

ஈராக்கில் பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் நடைபெற்ற வெடிகுண்டுத் தாக்குதல்களில் 10 பேர் சாவடைந்துள்ளனர்.



தலைநகர் பாக்தாதிலிருந்து 20 கி.மீ. தொலைவிலுள்ள மதாயின் நகரில் கடைத்தெருவில் குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டது. இந்தச் சம்பவத்தில் 4 பேர் கொல்லப்பட்டனர். ஒன்பது பேர் காயமடைந்தனர்.

மேலும் பாக்தாத்தின் வடக்குப் புறநகர் பகுதியான தாஜியில் கடை வீதியில் நிகழ்த்தப்பட்ட குண்டு வெடிப்பில் 3 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவத்தில் மேலும் 11 பேர் காயமடைந்தனர்.

தலைநகரின் மேற்குப் பகுதியில் ராணுவ வாகனத்துக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் மூன்று ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். ஏழு வீரர்கள் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)



பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் உள்ள ஈபிள் கோபுரத்தின் கீழ் படர்ந்திருக்கும் பனி மீது அந்த நாட்டு மக்கள் பனிச்சறுக்கு விளையாட்டுப் போட்டியில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருக்கும் காட்சி.

## ஆப்கனில் 48 மணி நேரத்தில் 141 தலிபான்கள் சுட்டுக்கொலை

### பெஷாவர் தாக்குதலை அடுத்து அதிரடி



இஸ்லாமபாத், டிசெ. 22

ஆப்கானிஸ்தானில் 48 மணி நேரத்தில் 141 தலிபான் தீவிரவாதிகளை பாகிஸ்தான் ராணுவம் சுட்டுக்கொன்றுள்ளது. பாகிஸ்தானில் உள்ள பெஷாவர் இராணுவ பாடசாலையில் தலிபான் தீவிரவாதிகள் புகுந்து, 132 குழந்தைகள் உள்ளிட்ட 145க்கும் மேற்பட்டவர்களைக்கொன்று குவித்தது.

இந்த தாக்குதலை தொடர்ந்து, தலிபான் தீவிரவாதிகள் ஆதிக்கம் மிகுந்த ஆப்கானிஸ்தானுடன் பேச்சு நடத்த பாகிஸ்தான் முடிவு செய்தது.

பாகிஸ்தான் இராணுவத்தலைமை தளபதி ரஹீல் ஷெரீப், உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.யின் தலைவருடன் ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலுக்குச் சென்றார். அங்கு அவர் அந்த நாட்டின் அதிபர் அஷ்ரப்கனியைச் சந்தித்து பேசினார். அதைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அஷ்ரப் கனி, தீவிரவாதத்துக்கு எதிராக ஆப்கானிஸ்தானும், பாகிஸ்தானும் இணைந்து செயற்பட்டு, தீவிரவாதிகளை ஒடுக்க வேண்டிய தருணம் வந்து விட்டது. தீவிரவாதிகளை கூண்டோடு ஒழிப்போம் எனச் சபதம் செய்தார்.

அதன்படி ஆப்கானிஸ்தானில் குனார், நங்கர்ஹார், கஜினி, ஹெல்மாண்ட், உருஸ்கான், பால்க், ஹெராத் மாகாணங்களில் தலிபான் தீவிரவாதிகளின் மறைவிடங்களைக் குறி வைத்து ஆப்கானிஸ்தான் இராணுவம் கடும் தாக்குதல் நடத்தியது. கடந்த 48 மணி நேரத்தில் நடந்த இந்தத் தாக்குதல்களில் 141 தீவிரவாதிகள் சாவடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

## பா.ஜ.கவில் இணைகிறார் இயக்குநர் கங்கை அமரன்

சென்னை, டிசெ. 22

இயக்குநர் கங்கை அமரன் பா.ஜ.கவில் இணையப்போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழகத்தில் பா.ஜ.கவை வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளில் பா.ஜ.க. கட்சியினர் செயற்பட்டு வருகின்றனர். தமிழகச் சினிமா மற்றும் பிற கட்சியின் பிரபலங்களுக்கு அக்கட்சி வலைவீசி வருகிறது. திராவிட கட்சிகளில் உள்ள தலைவர்கள், பிரபலங்களை தங்கள் கட்சிக்கு இழுக்கும் நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியுள்ளனர். இந்நிலையில், நாளை சென்னை வரவிருக்கும் பா.ஜ.க தலைவர் அமித் ஷா முன்னிலையில் பிரபல இசையமைப்பாளர், பாடலாசிரியர், இயக்குநர் என பன்முகம் கொண்ட கங்கை அமரன் பா.ஜ.கவில் இணையவிருக்கிறார். அவருடன் மேலும் சில சினிமா பிரபலங்களும் இணையக்கூடும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.



## இலங்கை கடற்படைக்கு இரு இந்தியக் கப்பல்கள்

### பாதுகாப்பு துணை அமைச்சர் தெரிவிப்பு

இலங்கைகடற்படைக்காக இரண்டு கப்பல்களை இந்தியா உருவாக்கி வருவதாக இந்திய பாதுகாப்பு துணை அமைச்சர் தெரிவித்துள்ளார். மொரீஷியஸுக்கு ரோந்துக் கப்பலொன்றை இந்தியா வழங்கிய நிகழ்ச்சியில் இந்த விவரத்தை அவர் வெளியிட்டார்

ஆயுதங்களை இறக்குமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ள இந்தியா, இதுவரை மிக அரிதாகத்தான் ஆயுதங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறது. தற்போது முதல் முறையாக போர்க் கப்பல் ஒன்றை வெளிநாடு ஒன்றுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. கொல்கத்தாவில் உள்ள அரசுக்கு சொந்தமான கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட ரோந்துக் கப்பலை மொரீஷியஸுக்கு அளிக்கும் நிகழ்ச்சியில் பேசிய பாதுகாப்புத் துறை துணை அமைச்சர் ராவ் இந்தர்ஜித் சிங், இதனைத் தெரிவித்தார் இரண்டு ரோந்துக் கப்பல்களை இந்தியாவிடம் இருந்து விலைக்கு வாங்க இலங்கை கோரியுள்ளதாகவும், அந்தக் கப்பல்கள் கோவாவில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை தற்போது வியட்நாம், இந்திய ஆயுதங்களை வாங்க ஆர்வம் காட்டுகிறது. ஆனால் வியட்நாமுடனான இராணுவ ஒத்துழைப்பு சீனாவுக்கு கோபத்தை ஏற்படுத்தும் என்பதால், இந்தியா இந்த விடயத்தில் மெதுவாகவே பயணிக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)



சிங்கங்களுக்குப் பயந்து எவரும் அதன் அருகில் செல்லாத நிலையில் ஆர்ஜென்டீனாவில் உள்ள மிருகக் காட்சியில் சிங்கத்துடன் பலரும் ஒளிப்படம் எடுத்து வருகிறார்கள்.

# 132 குழந்தைகளை கொன்ற தலிபான் தலைவர் சாவு



இஸ்லாமபாத், டிசெ. 22

பெஷாவர் குழந்தைகள் படுகொலைக்குக்காரணமாகஇருந்த தெரிக் இ தலிபான் தீவிரவாத இயக்கத்தின் தலைவர் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டுவிட்டதாகதகவல் வெளியாகியுள்ளது. பாகிஸ்தானின் பெஷாவர் பகுதியில் உள்ள இராணுவ பாடசாலை ஒன்றில் புகுந்த 6 தலிபான் தீவிரவாதிகள் சரமாரியாக நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 132 குழந்தைகள் உட்பட 145 பேர் சாவடைந்துள்ளனர்.

இந்த நிலையில் இந்த தாக்குதலுக்கு பொறுப்பான தலிபான் தீவிரவாத அமைப்பின் தலைவர் மௌலானா பஸ்லுல்லா பாகிஸ்தானும் அமெரிக்காவும் இணைந்து நடத்திய விமான தாக்குதலில் உயிரிழந்துவிட்டதாக அந்தநாட்டு ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. (ஒ–ரி)

## பனிப் புயலில் சிக்கி ஜப்பானில் 11 பேர் சாவு

டோக்கியோ, டிசெ. 22

ஜப்பானில் வீசி வரும் பனிப்புயலுக்கு 11 பேர் சாவடைந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அந்த நாட்டின் வடக்குப் பகுதியிலும், மத்திய பகுதியிலும் கடந்த சில நாள்களாக தொடர்ந்து வீசி வரும் பனிப் புயலால் வீதிகளில் பனி படர்ந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இந்த பனிப் புயல் காரணமாக 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதுதவிர பனி காரணமாக நூற்றுக்கணக்கான வீதி விபத்துக்களிலும்சிலர்உயிரிழந்துள்ளனர். வீதிகளில் படிந்திருந்த பனியை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த தீயணைப்புப் படை வீரர் ஒருவர் பள்ளம் ஒன்றில் விழுந்து உயிரிழந்துள்ளார். அங்கு நிலவி வரும் மோசமான பருவ நிலை, இன்னும் சில நாள்களுக்கு நீடிக்கும் என வானிலை ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.(ஒ–ரி)

## எரிமலை வெடித்துச் சீறியது; இந்தோனேசியாவில் 4 பேர் சாவு



இந்தோனேஷியாவில் நேற்று முன்தினம் எரிமலைச் சீற்றத்தில் 4 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இதில் வடக்கு மலுக்கு மாகாணத்தின் கமலாமா மலையில் உள்ள எரிமலையே நேற்று முன்தினம் மாலை வெடித்துச் சிதறியது.

அதையடுத்து அந்தப் பகுதியில் உள்ள அனைவரையும் உடனடியாக வெளியேறும்படி அரசு உத்தரவிட்டது. மலையில் வசித்து வந்த 11 பேர் சரிவில் இறங்கி வரும்போது 4 பேர் சாவடைந்துள்ளனர். மேலும் காயமடைந்த 3 பேருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 5630 அடி உயரம் கொண்ட எரிமலையின் உச்சியிலிருந்து இன்று வரை 600 அடி உயரத்திற்கு புகை வெளியேறிய வண்ணம் இருக்கிறது.

எரிமலை வெடிப்பினால் வெளியேறும் புகையால் விமான சேவைக்கு இடையூறு ஏற்படும் என்பதால் டெர்னேட் நகரத்தில் உள்ள அந்த நாட்டின் பாபுலா விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அந்த நாட்டுப் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஒ–ரி)

# ஹமாஸ் தளம் மீது இஸ்ரேல் வான் தாக்கு

காசா, டிசெ. 22




காசாவின் ஹமாஸ் இயக்க உள்கட்டமைப்புத் தளத்தை இலக்காக வைத்து விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காசாவில் 50 நாள்களுக்கும் மேலாக நடைபெற்று வந்த போரானது, கடந்த ஓகஸ்ட் மாதம் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டதையடுத்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் அங்கு இயல்பு வாழ்க்கை திரும்பி வந்துள்ளது. இந்தநிலையில் 4 மாதங்களுக்குப் பிறகு இஸ்ரேலிய விமானம், காசாவின் மீது தாக்குதல் நடத்தியது. காசாவில் இருந்து தெற்கு இஸ்ரேல் மீது ரொக்கெட் வீசி தாக்குதல் நடத்திய சில மணி நேரங்களில் இந்த விமானத் தாக்குதல் நடந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. போர் நிறுத்தத்துக்குப் பிறகு இஸ்ரேல் மீது நடத்தப்படும் மூன்றாவது ரொக்கெட் தாக்குதல் இதுவாகும்.

காசாவின் ஹமாஸ் இயக்க உள்கட்டமைப்புத் தளத்தை இலக்காக வைத்தே இந்தத் தாக்குதல் நடைபெற்றதாகவும் ரொக்கெட் தாக்குதலுக்கு ஹமாஸ் பயங்கரவாத அமைப்பே பொறுப்பேற்க வேண்டும் என்றும் இஸ்ரேல் இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் லெப்டினன்ட் கேர்ணல் பீற்றர் லேனர் கூறினார். அதேவேளை, இஸ்ரேல் மீதான ரொக்கெட் தாக்குதலுக்குப் பொறுப்பேற்க ஹமாஸ் அமைப்பு மறுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)

# கியூபாவின் கம்யூனிச கொள்கைகளை அமெரிக்கா மதித்து நடக்க வேண்டும்

## அதிபர் ரபேல் காஸ்ட்ரோ தெரிவிப்பு

அமெரிக்காவும் கியூபாவும் இரு நாடுகளுக்கு இடையேயான தூதரக உறவுகளைப் புதுப்பிக்க இருக்கும் நிலையில் நேற்று முன்தினம் கியூபா அதிபர் ரபேல் காஸ்ட்ரோ அமெரிக்கா கியூபாவின் கம்யூனிச கொள்கைகளை மதிக்க வேண்டும் என்றார். இரு நாடுகளிலும் இருந்து தத்தமது நாட்டிற்குப் புலம் பெயர்ந்தவர்கள் தற்போது ஏற்பட்டுள்ள நல்லிணக்கத்தை சீர்குலைக்க முயற்சிக்கலாம் எனவும் அவர் எச்சரித்தார்.



கியூபா மக்கள் அமெரிக்காவுடனான விரோதப் போக்கு முடிவடைந்ததைபெரும் வெற்றியாக நினைக்கிறார்கள். குறிப்பாக அமெரிக்காவில் உளவு வேலை பார்த்த மூன்று கியூபா புலனாய்வு அதிகாரிகளை விடுதலை செய்தது அந்நாட்டின் மீதான கியூபர்களின் நம்பிக்கையை அதிகரித்துள்ளது.

கியூபா அதிபர் காஸ்ட்ரோ பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஒபாமாவிடம்பேசஆர்வமாயிருப்பதாகவும் அதே வேளை கியூபா ஒருபோதும் தன் பொதுவுடமை தத்துவங்களை விட்டுக் கொடுக்காது என்று கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)

# கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை சோதித்தது சீனா

பிஜிங், டிசெ. 22

அணு ஆயுதங்களைச் சுமந்து சென்று, கண்டம் விட்டு கண்டம் பாயும் வல்லமை கொண்ட 'டிஎப்–41' என்ற ஏவுகணையைச் சீனா சோதனை செய்துள்ளது.

இந்த ஏவுகணையைச் சீன இராணுவம் கடந்த 13ஆம் திகதி சோதனைசெய்ததாக 'வொஷிங்டன் ப்ரீ பீகன்' என்ற செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த ஏவுகணை, ஒரே நேரத்தில் 10 ஆயுதங்களைச் சுமந்து சென்று, 12,000 கிலோ மீற்றர் தொலைவு வரையுள்ள இலக்கை தாக்கும் சக்தி கொண்டதாகும். இலக்கை நெருங்கும் நேரத்தில் ஏவுகணையில் இருந்து அந்த ஆயுதங்கள் தனித்தனியாகப் பிரிந்து செல்லும்தன்மை கொண்டதால், நகரங்களைக் குறி வைத்து பன்முனைத் தாக்குதல் நடத்துவதற்குப் பயன்படுத்த முடியும். பலஆயுதங்களைத்தாங்கிச் செல்லும் ஏவுகணையை சீனா சோதிப்பது இதுவே முதல் முறையாகும். இதற்கு முன்பு ஒரே ஒரு ஆயுதத்தைச் சுமந்து செல்லும் டி.எப்–41 ஏவுகணை சோதிக்கப்பட்டது. இந்தச் சோதனை மூலம் ஆசிய– பசிபிக் நாடுகளில் அமெரிக்காவின் அணுஆயுத வலிமைக்கு இணையாக சீனா குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. இந்தப் புதிய சாதனை, நிச்சயம் அமெரிக்காவை கவலையடையச் செய்யும் என்று தெரிவித்துள்ளது.



# பல்சுவை

## வாழ்க்கையில் எதுவும் நிலையற்றது

இன்பமாக வாழ வேண்டும் என்ற ஆசை எல்லோருக்குமே இருக்கிறது. இன்பத்தை நாடி ஒவ்வொன்றின் பின்னாலும் ஓடுகிறோம். புலன்களால் அனுபவிக்கின்ற புற உலகில் பைத்தியக் காரத்தனமாக நாம் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டே இருக்கிறோம். புலன்களால் நடைபெறும் எந்தச் செயலுக்கும் ஓர் எதிர்ச் செயல் உண்டு. எல்லாமே கண நேரத்தில் மறைவதுதான், இன்பம், துன்பம், ஆடம்பரம், செல்வம், அதிகாரம், வறுமை எல்லாமே. ஏன், வாழ்க்கையே கூடக் கணநேரத்தில் மறைவதுதான்.

மனிதகுலத்துக்கு இரண்டு வழிகள் இருக்கின்றன சூன்யவாதிகளுடன் சேர்ந்து கொண்டு, எதுவுமே இல்லை, நமக்கு ஒன்றுமே தெரியாது, எதிர்காலத்தைப் பற்றியோ, கடந்த காலத்தைப் பற்றியோ, ஏன் நிகழ்காலத்தைப் பற்றியோகூட நம்மால் எதையும் எப்பொழுதும் அறிந்துகொள்ள முடியாது என்று நம்புவது ஒரு வழி. இறந்த காலம் எதிர்காலம் இவற்றை மறுத்து, நிகழ்காலத்தை மட்டுமே ஒப்புகொள்ள விரும்புபவன், பைத்தியக்காரனே என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இது ஒருவன் தாய் தந்தையை மறுத்து, குழந்தையை மட்டும் ஒப்புக்

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



கொள்வது போன்ற வாதமே. இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் மறுக்க வேண்டுமானால், நிகழ் காலத்தையும் மறுந்தேயாக வேண்டும். இது ஒரு வழி அதாவது சூன்யவாதிகளின் வழி. உண்மையிலேயே சூன்யவாதியாக ஒரு நிமிடமேனும் மனிதர்கள் எவரும் இருந்ததில்லை. புற உலகவாழ்க்கையின் போலிகளை அறிந்தவன் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறான்.

## பத்து நிமிடத்தில் பல்வலி தீர

**நாளை**

மார்கழி-08 செவ்வாய்க்கிழமை
23.12.2014
திதி: துதியை பி.இ.04.32 வரை
நட்சத்திரம்: பூராடம்
மு.இ.07.46 வரை
சுபநேரம்: 10.55-12.25 வரை
இராகுகாலம்: 03.25-04.55 வரை

மனிதனின் உடம்பில் மிகவும் கடினமான பகுதி எதுவென்றால் எலும்புகளும், பற்களும் தான். ஆனால் இந்தப் பகுதிகளில் வலி ஏற்பட்டால் தாங்கிக் கொள்வதும் மிகவும் கடினமானது தான். பல்வலி வந்தால் ஒரு வெங்காயத்தைப் பொடிப்பொடியாக நறுக்கி எந்தப் பல்லில் வலி இருக்கிறதோ அந்தப் பல்லைச் சுற்றி வைத்துவிட்டு வாயை மூடிக்கொள்ளவும். சிறிது நேரத்தில் பல்வலி காணாமல் போய்விடும். எந்தப் பல்லில் வலி இருக்கிறதோ, அந்தப்பகுதியில் வாயினுள் சீனியை வைத்துவிட்டு, 18 மிளகை நன்றாக அரைத்து (அல்லது பொடி செய்து) கால் டம்ளர் தண்ணீர் விட்டுக் காய்ச்ச வேண்டும். காய்ச்சிய நீரை சிறிது நேரம் ஆற வைத்து விரல் சூடு தாங்கும் அளவுக்கு வந்ததும், வெளியே வலி இருக்கும் கன்னத்தின் பகுதியில் இந்த நீரால் நன்றாகத் தேய்க்க வேண்டும்




## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | [illegible] | [illegible] | சாவகச்சேரி | [illegible] | திருநெல்வேலி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மன்னார் | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கத்தரி | 220 | 250 | 200 | 200 | 220 | 200 | 140 | 150 | 120 |
| கரட் | 100 | 200 | 180 | 200 | 180 | 280 | 240 | 210 | 150 |
| மரவள்ளி | 40 | 40 | 50 | 50 | 40 | 50 | 80 | 55 | 20 |
| பயிற்றை | 300 | 220 | 240 | 300 | 200 | 240 | 200 | 270 | 180 |
| பாகல் | 300 | 350 | 400 | 320 | 300 | – | 160 | 250 | 190 |
| கருணைக்கிழங்கு | 45 | 50 | 60 | 80 | 50 | 80 | 240 | 100 | 40 |
| பெ.வெங்காயம் | 100 | 130 | 120 | 120 | 120 | 120 | 100 | 150 | 100 |
| சி.வெங்காயம் | 50 | 50 | 100 | 100 | 90 | 90 | 120 | 140 | 60 |
| பூசணி | 40 | 35 | 60 | 40 | 30 | 50 | 60 | 65 | 30 |
| தக்காளி | 220 | 180 | 200 | 200 | 220 | 200 | 160 | 200 | 140 |
| வாழைக்காய் | 80 | 50 | 80 | 80 | 70 | 120 | 80 | 110 | 70 |
| கீரை | 60 | 50 | 50 | 30 | 40 | 50 | 30 | 50 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | – | 30 | 30 | 30 | 20 | 15 |
| மிளகாய் | 400 | 450 | 600 | 500 | 350 | 800 | 600 | 700 | 400 |
| புடோல் | 140 | 80 | 160 | 120 | 130 | 140 | 140 | 140 | 100 |
| கோவா | 120 | 120 | 160 | 140 | 120 | 160 | 160 | 140 | 120 |
| வெண்டி | 150 | 160 | 160 | 120 | 140 | 140 | 180 | 110 | 100 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 180 | 160 | 160 | 200 | 190 | 140 |
| லீக்ஸ் | 300 | 240 | 320 | 300 | 220 | 280 | 200 | 250 | 160 |
| தேங்காய் | 40 | 50 | 45 | 40 | 35 | 45 | 45 | 45 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 85 | 80 | 140 | 90 | – |
| தேசிக்காய் | 100 | 100 | 60 | 80 | 90 | 70 | 150 | 90 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | – | 20 | 20 | 20 | 20 | 10 |

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | 1 | 8 | | 4 | | 3 |
| 3 | | 5 | 6 | | | 9 | | |
| | 6 | 4 | | | 9 | 5 | | |
| | 4 | | | 7 | | 1 | 9 | 6 |
| | | | | | | | | |
| 6 | 7 | 9 | | 2 | | | 3 | |
| | | 6 | 9 | | | 7 | 1 | |
| | | 1 | | | 4 | 3 | | 5 |
| 2 | | 3 | | 1 | 7 | 6 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 9 | 1 | 4 | 2 | 3 | 5 | 6 |
| 3 | 2 | 4 | 9 | 6 | 5 | 1 | 7 | 8 |
| 5 | 6 | 1 | 8 | 7 | 3 | 4 | 2 | 9 |
| 6 | 3 | 7 | 4 | 5 | 1 | 8 | 9 | 2 |
| 9 | 4 | 5 | 6 | 2 | 8 | 7 | 3 | 1 |
| 1 | 8 | 2 | 7 | 3 | 9 | 6 | 4 | 5 |
| 2 | 5 | 8 | 3 | 1 | 4 | 9 | 6 | 7 |
| 7 | 9 | 3 | 2 | 8 | 6 | 5 | 1 | 4 |
| 4 | 1 | 6 | 5 | 9 | 7 | 2 | 8 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வீரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | முல்லைத்தீவு | [illegible] |
|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 800 | 700 |
| நண்டு | 250 | 400 | 400 | 500 | 500 |
| கணவாய் | 400 | 400 | 500 | 600 | 600 |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 600 |
| சுறா | – | 500 | 600 | 600 | 700 |
| சீலா | 250 | 400 | 300 | 400 | 600 |
| விளை | 500 | 300 | 400 | 400 | 600 |
| முரல் | 260 | 250 | 350 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 250 | 300 | 400 | – |
| கிழாக்கன் | 180 | 500 | 400 | 300 | – |
| ஓரா | 250 | 200 | 400 | 400 | – |
| திரளி | 150 | 200 | 300 | 200 | 300 |
| நகரை | 150 | 200 | – | 200 | 400 |
| சூடை | 120 | 100 | 200 | – | 300 |




## 9 ஆம் திகதி பிறந்தவர்கள்

### 9

வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டு முன்னேறுபவர்கள். எளிதில் உணர்ச்சி வசப்படுவார்கள். சுதந்திரமான எண்ணங்கள் நிறைந்தவர். புதிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்ற ஆதங்கம் உடையவர்கள். மற்றவர்களை அடக்கியாள விரும்புவார்கள். உற்றார், உறவினர்களிடம் கூட அடிக்கடி சண்டை போடும் குணமும் உண்டு.


### 18

போராட்டமேஇவர்களது வாழ்க்கையாகஇருக்கும். இவர்கள் மற்றவர்களின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தமாட்டார்கள். எதையும் தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரவே முற்படுவார்கள். பேச்சுத் திறமை அதிகம் உண்டு. அவசரம், பிடிவாதம், சுயநலம் ஆகியவற்றை விட்டு விட்டால், இவர்கள் பெரும் சாதனைகளைப் படைக்கலாம்.
காதலிலும் அதிகாரம் காட்டி, அதன் மூலம் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்வார்கள். எப்போதும் உணர்ச்சி வசப்பட்டவர் கள், மன அமைதியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

### 27

அறிவும், ஆற்றலும் நிறைந்தவர்கள். பலர் இராஜதந்திரிகளாகவும் விளங்குவார்கள். சமூகத்தில் இவர்களுக்கு நல்ல செல்வாக்கு நிச்சயம் கிடைக்கும். இரவு நேரத்தில் வேலை செய்வது இவர்களுக்குப் பிடிக்கும். இவர்களது திட்டங்கள் எல்லாம் நிச்சயம் வெற்றி அடையும். மனம் தளராமல் உழைப்பவர்கள். மற்றைய இரு திகதிகளில் பிறந்த அன்பர்களை விட அமைதியானவர்கள். செயலில் நம்பிக்கை உடையவர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு உண்டாகும். நல்ல செயல்களின் மூலம் பேரும், புகழும் அடைவார்கள். சுதந்திர மனப்பான்மை உண்டு. நிதானமாக, அவசரப் படாமல் (சீரானதிட்டத்துடன்) செயற்பட்டு வெற்றியை இலகுவில் அடைவார்கள்.

# ராசிக் கற்கள்



**மேஷம்-பவளம்**
மேடராசிக்காரர்கள் அணிய வேண்டியது பவளம். இதை அணிவதால் தெய்வ கடாட்சம் கிடைக்கும். கோபம் தணியும், அதிர்ஷ்டம் உண்டாகும்.

**இடபம்-வைரம்**
இடப ராசிக்காரர்கள் அணிய வேண்டியது வைரம் இதை அணிந்தால் மகிழ்ச்சியையும் யோகத்தையும் வசீகரத்தையும் கொடுக்கும்.

**மிதுனம்-மரகதம்**
மிதுன ராசிக்காரர்கள் அணிய வேண்டியது மரகதம். இது செய்யும் தொழிலில் விருத்தியும், அதிர்ஷ்டத்தையும் அளிக்க வல்லது.

**கடகம்-முத்து**
கடக ராசிக்காரர்கள் அணிய வேண்டியது முத்து. இது அமைதியும் மகிழ்ச்சியும் செல்வவிருத்தியும்அளிக்கவல்லது.

**சிம்மம்-மாணிக்கம்**
சிம்மராசிக்காரர்கள் அணிய வேண்டியது மாணிக்கம். இதை அணிந்தால் மிகுந்த அதிர்ஷ்டசாலியாகலாம்.

**கன்னி-மரகதம்**
கன்னி ராசிக்காரர்கள் அணிய வேண்டியது மரகதம். இது செய்யும் தொழிலில் விருத்தியும் அதிர்ஷ்டத்தையும் அளிக்க வல்லது.

**துலாம் - வைரம்**
துலாம் ராசிக்காரர்கள் அணிய வேண்டியது வைரம். இதை அணிந்தால் மகிழ்ச்சியையும், யோகத்தையும், வசீகரத்தையும் கொடுக்கும்.

**விருச்சிகம்-பவளம்**
விருச்சிகராசிக்காரர்கள் அணிய வேண்டியது பவளம். இதை அணிந்தால் தெய்வ கடாட்சம் கிடைக்கும். கோபம் தணியும், அதிர்ஷ்டம் உண்டாகும்.

**தனுசு-கனக புஷ்பராகம்**
தனுசு ராசிக்காரர்கள் அணிய வேண்டியது கனக புஷ்ப ராகம். இந்தக் கல் பார்ப்பதற்கு மஞ்சள் நிறமாக இருக்கும். இது மன அமைதியையும் செல்வ விருத்தியையும் கொடுக்கும்.

**மகரம்-நீலக்கல்**
மகர ராசிக்காரர்கள் அணிய வேண்டியது நீலக்கல். செல்வ விருத்தியையும், செல்வாக்கையும், தெய்வீகத் தன்மையையும் கொடுக்க வல்லது.

**கும்பம்-நீலக்கல்**
கும்ப ராசிக்காரர்கள் அணிய வேண்டியது நீலக்கல். செல்வ விருத்தியையும், செல்வாக்கையும், தெய்வீகத் தன்மையையும் கொடுக்கவல்லது.

**மீனம்-கனக புஷ்பராகம்**
மீன ராசிக்காரர்கள் அணிய வேண்டியது கனக புஷ்ப ராகம். இந்தக் கல் பார்ப்பதற்கு மஞ்சள் நிறமாக இருக்கும். இது மன அமைதியையும், செல்வ விருத்தியையும் கொடுக்கும்.

# மனைவிக்கு மதிப்புக் கொடுங்கள்

தத்தம் துறைகளில் சாதித்த இந்தப் பெண்கள், கணவரின் வன்முறையைச் சகித்து வாழ்வது தங்கள் பிள்ளைகள் மற்றும் பெற்றவர்களுக்காக மட்டும்தான். இதில் ஒரே ஒரு ஆறுதல் என்னவென்றால் திருமண வாழ்வின் சில வருடங்களுக்குப் பின் கணவரின் தாக்குதலை எதிர்க்கத் தொடங்கியதால் வன்முறையின் அளவு சற்று குறைந்துள்ளது. தினம் தினம் வீட்டு வேலையோடு, பிள்ளைகளைத் தயார் செய்து பாடசாலைக்கு அனுப்பி விட்டு, அலுவலக வேலையையும் முடித்து வீடு திரும்பும் எத்தனையோ படித்த பெண்களுக்கும். இதுதான் நடக்கிறதோ என்ற பய உணர்வு ஏற்படுகிறது. பல வகை சுதந்திரத்தைப் பற்றிப் பேசத் தொடங்கியுள்ள இந்த நூற்றாண்டிலாவது படித்த பெண்கள் மீதும் வன்முறை என்று பலர் நம்பக்கூட மறுப்பர். ஆனால் உண்மை இதுவே. பிள்ளைகளின் எதிர்காலம், பெற்றோரின் அறிவுரை, சமூகத்தின் பார்வை இவை அனைத்துக்காகவும் அன்றும், இன்றும் பெண்கள் அடங்கி, தாங்கிக்கொண்டுதான் வாழ்கின்றனர். ஒரே ஒரு வித்தியாசம் இன்றுள்ள பெண்கள் படிப்பு, உயர் பதவி என்ற கூடுதல் தகுதிகளோடு அதே சூழ்நிலையில் உள்ளனர். மனைவியை அடித்து, உதைக்கும் ஆண்களில் பலரும் மேற்படிப்பு படித்து, வெளி


-சோபனா

நாடுகளுக்குச் சென்று, பன்னாட்டு நிறுவனங்களில் பணிபுரிந்தவர்களாக உள்ளனர். பணியிடத்தில் தங்களோடு பணிபுரியும் பெண்களிடம் காட்டும் அதே மரியாதையை மனைவியிடம் காட்டத் தவறுவது ஏன்? படிப்பறிவு என்பது ஒருவனுக்குப் பாட அறிவோடு, சமூகப் பார்வை, ஒழுக்கம், சக மனித மரியாதை போன்றவற்றைப் போதிக்க தவறியதைத்தான் காட்டுகிறது. சிறு வயதிலிருந்து ஆண்மகனை வளர்க்கும் தாய் ஒரு பெண்ணிடம் குறிப்பாக மனைவியிடம் நடந்துகொள்ளும் முறையை, நேயத்தைக் கற்பிக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. வேலையிலிருந்து களைப்புடன் திரும்பும் கணவன், கோபம் வந்து கை ஓங்கலாம் என்றால் வீட்டு வேலையோடு வேலைக்குச் சென்று திரும்பி வரும் பெண்களுக்கும் அதே கோபம் வந்தால் என்ன ஆகும் என்று சிந்திக்க வேண்டும். இத்தனை ஆண்டுகள் அடங்கியிருந்த பெண்கள் இன்று சுயமாக இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாத ஆண்களே வன்முறையில் இறங்குகிறார்கள். ஆனால் ஆண்கள் புரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுதான், இயன்றளவும் பெண்கள் எவ்வளவோ விட்டுக்கொடுத்துதான் தங்கள் சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொள்கிறார்கள். அதைச் சரிவரப் புரிந்து கணவர்கள் மனைவியைச் சக மனுஷியாக நடத்தினாலே போதும்.




## தற்காப்புத் தான் பெண்களுக்கு துணை

எத்தனை வீடுகளில் பெண் குழந்தைகளுக்குத் தற்காப்புக் கலைகளைக் கற்றுத் தருகிறோம்? இவை எல்லாம் பெண்பிள்ளைகளுக்கு எதற்கு என்று விட்டுவிடுகிறோம். விளைவு, அநீதி நடக்கும் நேரங்களில் வேறொருவரின் துணையை நாட வேண்டியுள்ளது. சாதுவாக, அமைதியாக இருப்பதற்குப் பெண்மை என்று பெயரில்லை. பெண்மை என்பது வீரம் நிறைந்தது. ஆனால் அந்தப் பெண்மையை இந்தச் சமூகம் தன் கட்டுப்பாட்டுக்குள்ளே வைத்துக் கொள்கிறது. மாற்றம் முதலில் பெண்ணிடம் இருந்தே வர வேண்டும். தனக்கு என்ன தேவையோ அதைத் துணிச்சலோடு எடுத்துச் சொல்லும் மன உறுதி பெண்களுக்குத் தேவை. பெண்கள் தங்களுக்குத் தேவையான உரிமைகளுக்காக யாரிடமும் யாசகம் கேட்கத் தேவையில்லை. இந்தச் சமூகம் பெண்ணை கண்ணே, மணியே என்று பாராட்டி, வேலைக்காரியாக மட்டுமே வாழப் பணிக்கிறது. எப்போதும் எதற்காகவும் பெண் ஒரு குறுகிய வட்டத்துக்குள் தன்னை குறுக்கிக் கொள்ளக் கூடாது.

-நிஷா

# செய்திகள்

## மீன் சந்தை விற்பனைப் பிரிவு நாளை திறப்பு

தென்மராட்சி, டிசெ.22
சாவகச்சேரி நகர சபையால் 95 லட்சம் ரூபா செலவில் தனன்களப்பு வீதியில் நிர்மாணிக்கப்பட்ட மீன் சந்தை விற்பனைப் பிரிவு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு திறந்து வைக்கப் படவுள்ளதாக நகரசபைத்தலைவர் இ.தேவ சகாயம்பிள்ளை அறிவித்துள்ளார். (வ–9)

## பிள்ளையார் கதை படிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.22
கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்தில் விநாயகர் விரதத்தை முன்னிட்டு தினமும் காலையில் பிள்ளையார் கதைப் படிப்பு இடம்பெற்று வருகின்றது.
காலை 8.30 மணிக்கு விசேட பூசை அபிஷேகம் வழிபாடுகள் என்பன நடைபெற்று பிள்ளையார் கதைப் படிப்பு இடம்பெற்று வருகின்றது. (வ–17)

## பாராட்டு விழாவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், டிசெ, 22
ஓய்வு நிலைக் கிராம அலுவலர் லயன் சின்னத்துரை இலட்சுமி காந்தனின் 70ஆவது அகவையை முன்னிட்டு அவருக்கான பாராட்டு விழாவும் நூல் வெளியீடும் வாழ்வாதார மற்றும் கல்வி ஊக்குவிப்பு உதவி வழங்கலும் நடைபெறவுள்ளன.
நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 5 மணிக்கு கட்டப் பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு செங்குந்தா இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் எஸ்.பத்மராஜா தலைமை வகிக்க வுள்ளார்.
நிகழ்வில் கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு பிரணதார்த்திகரக் குருக்கள்– ரகுராமக் குருக்கள், கல்வியன்காடு வீரபத்திரர் ஆலய பிரதம குரு பொன்னையாக்குருக்கள் – வரதராஜக் குருக்கள் ஆகியோர் ஆசி உரை வழங்க வாழ்த்துரைகளை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், யாழ். பிரதேச செயலர் சு.தெய்வேந்திரம், கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், சர்வதேச லயன்ஸ் கழக உப மாவட்ட ஆளுநர் வைத்தியர் வை.தியாகராஜா, ஓய்வுநிலை அதிபர் கா.தவராசா, வட மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன், நல்லூர் பிரதேசசபைத் தவிசாளர் பா.வசந்தகுமார், நகராட்சி மன்ற செயலாளர் கா.சண்முகதாசன், சர்வதேச லயன்ஸ் கழக நல்லூர் தலைவர் கே.உலகநாதன், கிராம அலுவலர் சி.உதயகுமார், செம்மணி இந்து மயான சபை செயலாளர் இ.தணிகைநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.
இதேவேளை இந்த நிகழ்வில் 'கட்டப் பிராயின் வாழ்வியல்' நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. இந்த நூலுக்கான வெளியீட்டுரையை யாழ். பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி. எஸ்.விஜயகுமார் வழங்கவுள்ளார். தொடர்ந்து வாழ்வாதார உதவிகள், கல்வி ஊக்குவிப்பு வழங்கல் என்பன இடம் பெறும். (வ–10)

---

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



கடந்த 22.11.2014 சனிக்கிழமை
சிவபதமடைந்த
**அமரர் சுப்பர் கருணானந்தன்**

பிறப்பு 10.05.1937 — இறப்பு 22.11.2014

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (21.12.2014) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (22.12.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் இக்கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இரங்கல் தெரிவித்த நல் உள்ளங்களுக்கு மனமார்ந்த நன்றிகள்

புகையிரத நிலையம் அருகில்,
மருதனார் மடம், இணுவில்.
(55142)(4.3.7.1)
**குடும்பத்தினர்.**

---

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

**திருமதி சரஸ்வதி கனகசுந்தரம்**




மலர்வு 19.10.1935
உதிர்வு 22.11.2014

கார்த்திகை மூவிரண்டு வளர்பிரதமையில்
உதிர்ந்த ஒளி விளக்கின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
(55147)(4.3.6)
சகோதரர், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

# எம் நெஞ்சை விட்டகலா முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **ஐயம்பிள்ளை கற்பகவரன்**
**(வரன்)**

மலர்வு 20.01.1965
உதிர்வு 02.01.2014



அப்பா! உமையிழந்து ஆண்டொன்று
ஆனதுவோ!
உங்கள் ஆசைமுகம் மறைந்து அவலம்
தான் சூழ்ந்ததுவோ!
உங்கள் செம்மையான சிரிப்பும்
செந்தளிப்பாம் பூவதனம்!
சேர்ந்து மகிழ்ந்திருந்த காலமெல்லாம்
மறைந்திடுமோ!
உங்களைக் காக்க உழைத்தோம்
முடியவில்லை!
ஒவ்வோர் நாளும் பொழுதுமிங்கு உங்கள்
நினைவில் வாடுகின்றோம்
எம் வீட்டு நாயகனே! என்றென்றும்
உங்களை மறவோம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
**சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.** (55135)(4.3.6)

உங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி - செல்வமலர்,**
**பிள்ளைகள்- சாய்சரன்,**
**(ஜேர்மனி)- சாத்வீகன்**

# வாக்கெண்ணப்படும் 1,115 நிலையங்களில் 300 இற்கு மாத்திரமே உட்செல்ல அனுமதி

## கண்காணிப்பு அமைப்புகளிடம் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.22

ஜனாதிபதித் தேர்தல் வாக்குகள் எண்ணப்படவுள்ள ஆயிரத்து 115 நிலையங்களில் 300 நிலையங்களுக்கு மாத்திரமே தேர்தல் கண்காணிப்பாளர்கள் செல்வதற்கு தேர்தல் ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப் பின்போது இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளரினால் ஒதுக்கப்படவுள்ள 300 வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களில் தாம் எவற்றைக் கண்காணிப்பது என அனுமதிவழங்கப்பட்டுள்ள ஏழு கண்காணிப்பு குழுக்களையும் தீர்மானிக்குமாறு தேர்தல் ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த காலங்களில் வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களில் பிரச்சினைகள்எதுவும்இடம்பெறாததால் கண்காணிப்பாளர்கள் அவசியமில்லை என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

300 வாக்குகள் எண்ணும் நிலையங்களில் பவ்ரல் மற்றும் சி.எம்.ஈ.வி. அமைப்புகளுக்கு முப்பது வீதமானவற்றைக் கண்காணிப்பதற்கும், கபே அமைப்பிற்கு 20 வீதமானவற்றைக் கண்காணிப்பதற்கும் தேர்தல் ஆணையாளர் அனுமதிவழங்கியுள்ளார். மேலும் தபால்மூல வாக்குகளை எண்ணும் 304 நிலையங்களில் 70 நிலையங்களைத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பதற்கும் மஹிந்த தேசப்பிரிய அனுமதி வழங்கியுள்ளார்.

இதேவேளை, செவ்வாய், மற்றும் புதன்கிழமைகளில் நடைபெறவுள்ள தபால்மூல வாக்களிப்பில் 541000 வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 626.953 பேர் தபால்மூல வாக்களிப்பிற்காக விண்ணப்பித்துள்ளதாகவும் இவர்களில் 85.521 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் உதவி தேர்தல் ஆணையாளர் முகமட் தெரிவித்துள்ளார்.

தேர்தல் கண்காணிப்பு நிலையங்கள் தாங்கள் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் 3 ஆயிரம் பேரை ஈடுபடுத்தவுள்ளதாக தெரிவித்துள்ளன. 1000 கண்காணிப்பாளர்களையும், 35 நடமாடும் குழுக்களையும் பணியில் ஈடுபடுத்தவுள்ளதாக தெரிவித்துள்ள பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோகன ஹெட்டியாராச்சி தேர்தல் மோசடிகள் இடம்பெறக்கூடிய பகுதிகள் என சிலவற்றை இனம் கண்டுள்ளதாகவும், இலங்கை போக்குவரத்துச்சபை, தொண்டர்படைப்பிரிவினர், பொலிஸ் நிலையங்கள், பிரதேச சபை மற்றும் கல்வி திணைக்களங்கள் இவற்றுள் அடங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ற–சி)

# சதாசிவம் அரசிடம் சரணாகதி

## மைத்திரியின் விஞ்ஞாபனத்தில் மலையகம் புறக்கணிப்பாம்

கொழும்பு, டிசெ.22

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாணசபை உறுப்பினரும் இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளருமான சதாசிவம் நேற்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கட்சியுடன் இணைந்து கொண்டார். அது மாத்திரமல்லாது, ஐ.தே.கவுக்கு ஆதரவு வழங்கி வந்த தொழிற் சங்கமான இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் அரசுடன் இணைந்துகொண்டார். இதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரி பால சிறிசேனவினால் முன்வைக்கப் பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தால் சிறுபான்மை மக்களுக்கு எந்தவித பயனும் இல்லை. குறிப்பாக, மலையகத் தொழிலாளர்களுக்கு இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எந்தவிதமான வாக்குறுதிகளும் வழங்கப்படவில்லை. இதனாலேயே நானும் எனது தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தோம்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாது செய்வதானது சிறுபான்மை மக்களுக்கு பாதகமான விடயமாகும். நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்கப்படுமானால் சிறுபான்மை மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகள் கிடைக்கப்போவதில்லை. ஆகவே நாங்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையில் சில அதிகாரங்கள் குறைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றோம்.

இதேவேளை, பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மலையக தமிழ் மக்களை புறக்கணித்துள்ளார். அது மாத்திரமல்லாது அங்கு வாழும் தோட்டத் தொழிலாளர்கள் இயந்திரங்கள் அல்ல. அவர்களது நல்வாழ்வுக்குத் தேவையான கொடுப்பனவுகளும் வழங்கப்பட வேண்டும். எனினும். அவர்களது கொடுப்பனவுகள் தொடர்பிலும் எந்த வித வாக்குறுதிகளும் வழங்கப்படவில்லை.

ஆகவே, மலையக மக்களது நல்வாழ்வுக்காக பல சேவைகளை வழங்கியுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை எமது தொழிற் சங்க உயர்பீடக் கூட்டத்தில் எடுத்தோம் – என்றார். (ற–சி)

# சீனாவுடனான உறவு தொடரும்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.22

சீனாவுடனான உறவுகள் துண்டிக்கப்படமாட்டாது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவும் தெரிவித்துள்ளனர் என்று சீன ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சீனா இலங்கையின் மெய்யான நண்பன் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறித்த ஊடகத்துக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளின் முக்கிய பங்குதாரராக சீனா செயற்பட்டு வருவதாகவும் உறவுகளில் விரிசல் ஏற்படாது எனவும் தெரிவித்துள்ளார்.

மக்கள் சீனக் குடியரசு உருவாக்கப்பட்ட போது ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவே பதவி வகித்து வந்ததாகவும், அவர் சீனாவை ஒரு நாடாக அங்கீகரித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் சீனா மீது பொருளாதாரத் தடை விதித்திருந்த 1952 ஆம் ஆண்டில், இலங்கை சீனாவுடன் பொருளாதார உடன்படிக்கைகளை மேற்கொண்டது என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் செய்து கொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கையே இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் வலுப்பெற பிரதான ஏதுவாக அமைந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப் படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது ராஜபக்ஷ அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தர நிர்ணயங்கள் மற்றும் இயற்கைப் பாதுகாப்பு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றதா என்பது குறித்து புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவனம் செலுத்துவார் எனவும் ரணில் விக்ரமசிங்க அந்த ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார். (ற)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



உதிப்பு 16 . 07 . 1966

உதிர்வு 22 . 11 . 2014

**அமரர் முடியப்பு கொன்சால்வேஸ்**
**(சிந்தாத்துரை)**

கடந்த 22.11.2014 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் 31 ஆம் நாள் திருப்பலி பூஜை இன்று (22.12.2014) காலை 8.00 மணிக்கு மட்டுவில் லூர்து அன்னை தேவாலயத்திலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
077 174 4690

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 10 . 05 . 1960

உதிர்வு 28 . 12 . 2008

**சேனாதிராஜா தயாளன்**
[இலங்கை மின்சாரசபை ஊழியர், சுன்னாகம்]

ஆண்டுகள் ஆறு கடந்திட்டாலும்
ஆறிடுமோ நம் வேதனைகள்
அவனியில் எம்மைப் பண்புடனே வளர்த்து
இன்பமுடன் நாம் வாழ வழி வகுத்து
இறைவனடி சேர்ந்தீர்கள் நீங்கள்
இன்றும் என்றும் நாம் மறவோம்.

தற்காலிக முகவரி:
C1/1 சென்ட்ரல் றோட்,
கொழும்பு 12

நிரந்தர முகவரி:
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்
011 307 0572.

# செய்திகள்

## ஏகாதசி விழா

சுழிபுரம், டிசெ.22

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய மார்கழி மாத சுவர்க்க வாயில் ஏகாதசி கொடியேற்றத் திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை பகல் ஆரம்பமாகவுள்ளது. தேர்த் திருவிழா எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும். மறுநாள் தீர்த்தத் திருவிழா சுழிபுரம் திருவடி நிலை தீர்த்தக் கரைக்கு ஸ்ரீவரதராஜப் பெருமாள் அழகிய மஞ்சத்தில் பக்தர்கள் புடை சூழ எழுந்தருளி தீர்த்தம் நடைபெறும். அன்றைய தினம் கடலில் ஆயிரக்கான அடியவர்கள் நீராடி தமது விரதத்தை நிறைவு செய்வார்கள்.

(வ-28)

## சுதேச மருத்துவ சஞ்சிகைக்கு ஆக்கங்கள் அனுப்பலாம்

வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தால் சுதேச மருத்துவம் தொடர்பான விழிப் புணர்வை பொது மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கில் சுதேச மருத்துவம் சார்ந்த விடயங்கள் அடங்கிய காலாண்டு சஞ்சிகை வெளியிடப்படவுள்ளதாக வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் சி.துரைரட்ணம் தெரிவித்துள்ளார்.

சஞ்சிகைக்கான ஆக்கங்கள் துறைசார் வைத்தியர்கள், அறிஞர்களிடம் இருந்து கோருவதற்கு உத்தேசிக் கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள், மாணவர்கள் முதல் துறைசார் நிபுணர்கள் வரை பயன்பெறும் வகையில் ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். குறிப்பாக சுதேச மருத்துவத்துறை வைத்தியர்கள், மருத்து வமனைகள் வட மாகாணம் மற்றும் தேசிய ரீதியில் மக்களுக்கு ஆற்றிவரும் பங்களிப்பை வெளிக் காட்டும் கட்டுரைகள், சுதேச மருத்துவம், மருத்துவ பயன்பாடு, விசேட சிகிச்சை முறைகள், மூலிகைகள் அவற்றின் பயன்பாடு தொடர் பான விடயங்கள் பற்றிய ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆக்கங்களை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் மாகாண ஆணையாளர், மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், வட மாகாணம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-10)

# மதுபாவனையில் முதல் இடத்தில் வட மாகாணம்

### நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.22

'மதுப் பாவனையில் இலங்கையில் முதலிடத்தில் வட மாகாணம் உள்ளது. யாழ். பல்கலைக்கழகத்தைச் சூழ ஏராளமான மதுபானக் கடைகள் தற்போது உள்ளன. எனவே நாம் அந்த நிலைமைக்கு எவ்வாறு சென்றோம் என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அதன் பின்னணியில் அரசியல் இருக்கின்றது. இதை ஊக்குவிப்பது எம்மவர்கள் அல்ல. ஆனால் அடிமையாக்குகின்றார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.



கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.விஷன் கிருஷ்ணா அறநெறிப் பாட சாலைக்கென புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தொகுதியைத் திறந்து வைக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

யாழ்.விஷன் கிருஷ்ணா அறநெறிப் பாடசாலையின் 2 ஆவது ஆண்டு விழாவும், புதிய கட்டடத் திறப்புவிழாவும் நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்றன.

கோணாவளை வீதி கொக்குவிலில் அமைந்துள்ள குறித்த அறநெறிப் பாடசாலைக்கென புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியை பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு நாடா வெட்டி திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்;

"தற்போது கல்விச் சாலைகள், அறநெறிப் பாடசாலைகள், மற்றும் முன் பள்ளிகளை ஆரம்பித்துவைப்பதற்கும், வேறு பல நிகழ்வுகளுக்கும் இரத்தக்கறை படிந்தவர்கள் செல்கின்றனர். ஏதாவது தருவார்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று அவர்களும் அழைக்கின்றனர்.

இவ்வாறு இரத்தக்கறை படிந்தவர்களால் ஆரம்பித்து வைக் கப்படும் எந்தவொரு காரியமும் நிலைக்காது என்பதை அப்படி அழைப்பவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்"-என்றார்.

இதேவேளை – குறித்தபாடசாலையானது அருணா சுசீந்திரன் தம்பதிகளால் கடந்த வருடம் சொந்த நிதியில் நிறுவப்பட்டு, புதிதாக கட்டடம் அமைக்கப்பட்டு இன்று 2 ஆவது ஆண்டில் 144 மாணவர்களுக்கு அறநெறிக் கல்வியைப் புகட்டி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

க.சுசீந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், மற்றும் சி.மாணிக்கராஜா, பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர். (வ)

## மரண அறிவித்தல்கள்

### கிறிஸ்தோப்பர் அல்பிரட் துரைராசா



போயிட்டி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கிறிஸ்தோப்பர் அல்பிரட் துரைராசா 19.12.2014 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோப்பர் -மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மிக்கேற் பிள்ளை- நச்சேத்திரம் தம்பதியரின் மருமகனும், யூப்பிறேசியாவின் (தவம்) பாசமிகு கணவரும், பயஸ் புஸ்பராசாவின் அன்புச் சகோதரரும், பத்மா செல்வராஜினி, காலஞ்சென்ற பஞ்சவர்ணம் மற்றும் சந்திரா, குணராசா, ராகினி மரியதாஸ், அப்புத்துரை, பொன்னுத்துரை, றோஸ்ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிறேசியன்-ராஜினி, றொட்டினி- றஜனி ஆகியோரின் சிறிய தகப்பனாரும், சோந்திரின், வேஜினி, நிக்கோலா, எர்வின், றெவின், றொட்றிக், றொயிஸ் மற்றும் றொபின் சறோஜினி, றொபேட், டெல்வின், றிசான், பிரியா, கனியூட், றெஜினூட், வினியூட், றெஜிஸ்ராலா, றொணியூட்,அமிஷா, ஜினு ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (23.12.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு புனித லூர்து அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் புனித லூர்து அன்னை சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: யூப்பிறேசியா (தவம்) 077 807 3645,
பயஸ் புஸ்பராசா 077 986 3406/021 320 1305 (55148) (4.6.3)

தகவல்:
பயஸ்புஸ்பராசா

### செல்லர் கந்தையா



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் கந்தையா கடந்த (19.12.2014) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும், கமலாதேவி (ஓய்வுபெற்ற பெண் தாதிய உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை), பானுமதி, காலஞ்சென்ற ஜீவரட்ணம் (குமார்) மற்றும் சோதிமலர், ரஞ்சினிதேவி (டென் மார்க்), புஸ்பவனிதா (சுவிஸ்), துரைரட் ணம் (பிரான்ஸ்), கலாஜோதி (இத்தாலி), அனுலா (பிரான்ஸ்), பகீரதன் (பிரான்ஸ் - உதயன் பத்திரிகை முன்னாள் பணியாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ஜெனரட்ணசிங்கம் மற்றும் கனகலிங்கம், வீரசிங்கம், கிருபாகரன் (சுவிஸ்), காலஞ்சென்ற விமலேஸ்வரன் (டென்மார்க்) மற்றும் தனுஷா, ஜெயக்குமார் (இத்தாலி), ரவீந்திரன் (பிரான்ஸ்), சுமதி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனும், மகிந்தன், சஜந்தன், துஷந்தன், ராம்ஜி, கஸ்தூரிக்கா, தரணிகா, ஜதுர்ஷனன், ஹரிஸ்கஜன், திலீக்கா, ஜெனுஷன், விதுஷா, வினோஜா, ஜெருஷன், கஜானி ஆகியோரின் பேரனும் ஜெனுஸிக்காவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2014) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.07, சென்மேரிஸ்
2ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை.

(55149) (45.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## மருத்துவமனையில் பார்வையாளரை கடித்த நாய்

வடமராட்சி, டிசெ.22

பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனையில் நடமாடும் கட்டாக்காலி நாய் பார்வையாளரைக் கடித்ததில் அவர் காயமடைந்து அதே மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த இலக்கிய வாதியான கே.ஆர். திருத்துவராஜா என்பவரே நாயால் கடியுண்டவராவார். சில தினங்களுக்கு முன்னர் பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனை விடுதியில் சிகிச்சை பெற்று வந்த உறவினரைப் பார்வையிடச் சென்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விடுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளை மருத்துவமனை வளவுக்குள் நடமாடிய கட்டாக்காலி நாய்களின் கூட்டத்தில் காணப்பட்ட நாய் ஒன்று திடீரென பார்வையாளர் மீது பாய்ந்து அவரது கால் ஒன்றைக் கடித்து பதம் பார்த்தாகத் தெரிவிக்கப்பட்டது.

(வ-173)

## ஆடைகள் வடிவமைத்தல் பயிற்சியில் இணையலாம்

கிளிநொச்சி,டிசெ.22

கிளிநொச்சி பிரதேச பெண்களுக்கான ஆடைகள் வடிவமைத்தலும் கைவேலைக்குமான பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி கணேசபுரம் பராசக்தி முன்பள்ளி மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட வுள்ளன. பிரதேசத்தில் தரம் 9 இற்கு மேல் கற்ற பெண்களிடம் மட்டும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை கல்விச் சான்றிதழ் ஆகியவற்றுடன் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலகத்துக்கு வருகை தருமாறு பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

ஆறுமாத காலம் நடைபெறும் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றுவோருக்கு பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்புப் படி வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளனர்.

(வ-9)

# ஆர்ப்பாட்டம் செய்தோர் மீது தாக்குதல்

கொழும்பு, டிசெ.22

அம்பராந்தோட்டையில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விளையாட்டு கைத்துப்பாக்கியைக் காண்பித்து மிரட்டிய சம்பவத்தின் மூலம் பிரபலமான அம்பாந்தோட்டை முதல்வரே இந்தத் தாக்குதலை மேற் கொண்டுள்ளார் என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

குறிப்பிட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மனித உரிமைப் பணியாளர்கள் பிரிட்டோ பெர்ணாண்டோ, ஜய திலக பண்டார, பிலிப் திசநாயக்க உட்பட மற்றும் பலர் தாக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–சி)

# அதிக குளிரால் பெண் சாவு

மட்டக்களப்பு, டிசெ.22

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக அடை மழை பெய்துவருகின்ற நிலையில், குளிரால் பெண் ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.இன்பராஜன் தெரிவித்தார்.

வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த ஐய்யாத்துரை வசந்தி (வயது 49) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குளிரால் பாதிக்கப்பட்ட இந்தப் பெண், வாழைச்சேனை' ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என்றும், இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ அலுவலகத்துக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற–10)

## வீட்டிலிருந்தவர்களை கட்டி வைத்து கொள்ளை

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ்ப்பாணம் பிரவுண் வீதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள் ஆயுதங்களைக் காட்டி வீட்டில் இருந்தவர்களைக் கட்டிவைத்துவிட்டு பணம், நகை என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

மோட்டார்சைக்கிள்களில் வந்த 8 பேர் அடங்கிய கொள்ளையர்கள், வீட்டில் இருந்தவர்களை ஆயுதங்களைக் காட்டி மிரட்டி கட்டி வைத்துள்ளனர். பின்னர் வீடுமுழு வதும் சல்லடைபோட்டு அங்கிருந்த நகைகள், பணம் என்பவற்றை கொள்ளையிட்டுள்ளனர். இதன்போது சந்தேகமுற்ற அயல் வீட்டார் சம்பவம் குறித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்ததை உணர்ந்து கொண்ட கொள்ளையர்கள் தப்பியோடியுள்ளனர். இதன்போது மோட்டார் சைக்கிள் ஒன்றை அவர்கள் விட்டுச் சென்றுள்ளனர் என்றும் அதனைக் கைப்பற்றிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

# மரண அறிவித்தல்கள்



## சோமலிங்கம் ஞானப்பிரகாசம்

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமலிங்கம் ஞானப்பிரகாசம் 18.12.2014 ஜேர்மனியில் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சோமலிங்கம் - இராசம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ் சென்றவர்களான திரு திருமதி சிதம்பரப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் யோகராணியின் (முன்னாள் ஆசிரியர்) அன்புக் கணவரும் நிறோ, நிசா, கலாபன் ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் (கிராமியவங்கிமுகாமையாளர்), கணேசலிங்கம் (பிரதம எழுதுவினைஞர் கட்டடங்கள்நிர்மாணத்திணைக்களம்) மற்றும் சிவதாசன் (முன்னாள் தபாலதிபர், ஜேர்மனி), பரமநாதன் (கிராமசேவையாளர்), செல்வராணி, இந்திராணி (சுவிஸ்), பிரகாசம் (சுவிஸ்), சிவலிங்கம் (ஜேர்மனி), ஆகியோரின் சகோதரரும், புஸ்பராணி ஞானாமிர்தம், ஜெயக்குமாரி, ஞானதீபம், மகாலிங்கம் காலஞ்சென்ற சிவஞானசுந்தரம், சுகந்தினி, விஜிதா, காலஞ்சென்ற தவமலர், தில்லையம்பலம் (ஓய்வுபெற்றகிராமசேவையாளர்), அன்னலட்சுமி, ரஞ்சிதமலர், பாஸ்கரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.12.2014 செவ்வாய் கிழமை மு.ப 8.00மணியளவில்ஜேர்மனியில் இடம்பெறும்.

தகவல்:
சோ.பரமநாதன் (கிராமஅலுவலர்)

## சங்கரப்பிள்ளை இராசம்மா



பெரியாட்டி, கோப்பாய் வடக்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை இராசம்மா நேற்று (21.12.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் (அ.ச) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அம்பலம் - கதிராசி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், தம்பையா, செல்லத்துரை, குமாரசாமி, நடராசா மற்றும் துரைராசா, தியாகராசா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சவுந்தரம், பொன்னம்மா, குணலட்சுமி மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான , தவமணி, பூபதி மற்றும் சோதி, குமாரசாமி, காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, ஐயம் பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், செல்வராசா, காலம் சென்ற இராஜேஸ்வரி மற்றும் சவுந்தரம், பாக்கியலட்சுமி, பரதராசா, தேவராசா, நவராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற யோகாம்பிகை மற்றும் சின்னத்துரை சுப்பிர மணியம் அம்பலவாணர், காலஞ்சென்ற வசந்தாதேவி மற்றம் நந்தாதேவி, தேவகி, சிவகௌரி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2014) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பெரியாட்டி, கோப்பாய். (55164) மக்கள், மருமக்கள்



## வல்லிபுரம் கிருஸ்ணபிள்ளை

இளைப்பாறிய சாரதி இ.போ.சபை

இணுவிலைப் பிறப்பிடமாகவும், நீண்டகால வதிவிடமாக அரியாலையையும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கிருஸ்ணபிள்ளை 21.12.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசையா, நல்லதம்பி, இரத்தினசிங்கம், முத்துமாலை மற்றும் செல்வராசா, மகாலிங்கம், பாக்கியநாதன், பூபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஆசைப்பிள்ளை, பூவதி, யோகம்மா, செல்லத்துரை, புஸ்பராணி, பூவதி, விமலாதேவி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயகுலரதி (லண்டன்), கிருஸ்ண மனோரதி (லண்டன்), ஜெயஸ்ரீ (லண்டன்), விஜயஸ்ரீ (லண்டன்), மினாரதி (பிரான்ஸ்), சுபாரதி (லண்டன்), இராஜஸ்ரீ (லண்டன்), புஸ்பஸ்ரீ (லண்டன்), காலஞ்சென்ற ஜமுனாரதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயராஜா (லண்டன்), மகேந்திரராஜா (லண்டன்), பாஸ்கரன் (பிரான்ஸ்), ஜீவன் (லண்டன்), சுதாமதி (லண்டன்), ராதிகா(லண்டன்), சுபா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் துக்க அனுஷ்டிப்பு இணுவில் மேற்கு இராசையா - ஆசைப்பிள்ளை வீட்டிலும், அராலி தெற்கு நாகலிங்கம் - இரத்தினம் வீட்டிலும் நடைபெறுகின்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி தெற்கு,
காளிகோவிலடி.
00442088612175
00447447461775 (55162)

தகவல்:
நாகலிங்கம் குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்கள்



## பொன்னையா இராஜகுலேந்திரன்

(இந்திரன்)

(இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை)

மானிப்பாய் மேற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், சந்தையடி ஒழுங்கை மானிப்பாயை வசிப்பிடமாகவும் 25, 3/4 அறத்துசா லேன், வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராஜகுலேந்திரன் அவர்கள் 21.12.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - பாக்கியம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற சதாசிவம் - புவனேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், சதானந்த ஈஸ்வரியின் அன்புக் கணவரும், துஸ்ஸியந்தி (BSc),, துஸ்ஸியந்தன் (ஜேர்மனி), கஜேந்தி (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.முருகதாஸ் (ஆஸ்திரேலியா), சோபா (ஜேர்மனி), சுரேன் (பொறியியலாளர்- சிங்கப் பூர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஆராதனா, ஆரத்யா, ரபீஷன், சுரஜித் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற இராசமலர் (லண்டன்), Dr. பேரானந்தன், சரோஜாதேவி (கனடா), பத்மேஸ்வரன் (லண்டன்), மகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகுமாரி, சிவகுமாரன், சூரியகுமாரன், கமலகுமாரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை (23.12.2014) மகிந்தபால, கல்கிசையில் பிற்பகல் 2.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.
077 711 5629
011 236 1140 (55157)

தகவல்:
அ.காண்டீபன்
(மருமகன்)



## திருமதி கனகமணி இரத்தினம்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகமணி இரத்தினம் அவர்கள் நேற்று (21.12.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - இரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், கந்தசாமி, அன்னலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செல்வராணி, செல்வராசா (ஓய்வு பெற்ற களஞ்சியக் காப்பாளர் - புகையிரதத்திணைக்களம் கொழும்பு), யோகராணி (ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியை - யா/ நாவற்குழி ம.வி., யா/ கைதடி நாவற்குழி ம.வி), புஸ்பராணி (எழுதுவினைஞர் பிரதேச செயலகம் - வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இலட்சுமணன் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், மாவட்ட செயலகம்- யாழ்ப்பாணம்), சுகிர்த மலர் (ஓய்வு பெற்ற தாதியார் போதனா வைத்தியசாலை- யாழ்ப்பாணம்), செல்வநாயகம், சிவமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியும், துஷ்யந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்), தயானந்தி (தொழில் நுட்ப அலுவலர், கட்டடங்கள் திணைக்களம் - வவுனியா), விஜிதன் (லண்டன்), லிபியந்தி, கௌமீரா (லண்டன்), உதயபாலன், பிரசாந்தன், பவசுதன் (லண்டன்), கோசிகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2014) திங்கட்கிழமை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் (பாடசாலை வீதி, நாவற்குழி) நடைபெற்று பூதவுடல் பிணைமுருங்கை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி, நாவற்குழி.
T.P: 077 559 6895
077 609 7502 (55158)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்



## தணிகாசலம் சோமஸ்கந்தராஜன்

கோப்பாய் மத்தி காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியைப் வசிப்பிடமாகவும் கொண்ட தணிகாசலம் சோமஸ்கந்தராஜன் 19.12.2014 வெள்ளிக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தணிகாசலம் (ஆச்சாரியார்) - நேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா - இரத்தினமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், கலாராணியின் அன்புக் கணவரும், சுலக்சன், சுனந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அம்பிகை (செல்லக்கிளி), அகிலரூபன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடராசா, அனிதா, துரைராசா, தெய்வேந்திரராசா (பவா), சூரியகுமார், காலஞ்சென்ற சசிகலா, ரதிகலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சிவபாதம், அருணாசலம் மற்றும் மங்களம், லில்லியம்மா ஆகியோரின் அன்புப் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான இராசையா, இராசலிங்கம் (கட்டப்பொம்மன்), நல்லம்மா, கனகம்மா (சின்னக்கண்டு) ஆகி யோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.12.2014) செவ்வாய்க்கிழமையன்று ஜேர்மனியில் நடைபெறும். அன்றைய தினம் கோப்பாய் மத்தி காளிகோவிலடியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 615 8719 (பவா)
077 484 2968 (சிலன்) (55161)

தகவல்:
குடும்பத்தினர்

# செய்திகள்

## வாக்களிக்கும் முறை

### தேர்தல் திணைக்களம் விளக்கம்

கொழும்பு, டிசெ.22

தேர்தலில் வாக்களிக்க வேண்டிய முறை குறித்து நேற்று தேர்தல்கள் திணைக்களத்தால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

ப.1 விரிவு

அதன்படி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 3க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடுகின்றமையால், ஒரு வேட்பாளருக்கு விருப்பம் தெரிவிப்பதுடன், மேலும் இரண்டு வேட்பாளர்களுக்கு இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்புத் தெரிவித்தலை வாக்குச் சீட்டில் அடையாளம் இடலாம். அல்லது ஒரு வாக்கு வேட்பாளருக்கு மாத்திரம் வாக்கை வழங்கவும் முடியும்.

வாக்குச் சீட்டில் தமது இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்பத் தெரிவுகளை அடையாளப்படுத்தாவிட்டாலும், தாம் விரும்புகின்ற வேட்பாளருக்கு மாத்திரம் வாக்களித்திருந்தால் அந்த வாக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆனால் தாம் விரும்பும் வேட்பாளருக்கான வாக்கை வழங்காமல், இரண்டு விருப்பத் தெரிவுகள் மாத்திரம் இடப்பட்டிருக்குமாக இருந்தால் அந்த வாக்கு நிராகரிக்கப்படும். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## சர்வதேச கண்காணிப்பாளரின் சுயாதீனத்துக்கு கட்டுப்பாடு

### இராணுவத்தினரின் நடைமுறையால்

கொழும்பு, டிசெ. 22

ஜனாதிபதித் தேர்தலின் போது, வடக்கில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ள சர்வதேச கண்காணிப்பாளர்களின் சுயாதீனத்துக்கும் – சுதந்திரத்துக்கும் இராணுவத்தினரால் கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள்ளன.

"பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றுக் கொள்ளாமல், தேர்தல் கண்காணிப்புக்காக வடக்குக்கு சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் செல்ல முடியாது"– என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

"வடக்குக்கு விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடு தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கின்றது. அதனால் வெளிநாட்டவர்கள், வடக்குக்குப் பயணம் மேற்கொள்வதாயின், பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களும் இதற்கு விதி விலக்கல்ல"– என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ப.1 விரிவு

"வடக்கிற்கான பயணக் கட்டுப்பாடுகளை நாம் நீக்கவில்லை. பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி, வடக்கிற்கு வெளிநாட்டவர்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். இது குறித்து, தேர்தல் ஆணையாளரிடம் இருந்து எந்த எந்த அதிகாரபூர்வ கோரிக்கைகளும் விடுக்கப்படவில்லை.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறுவதற்கு, தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடும் வெளிநாட்டவர்கள் பற்றிய விவரங்களை, அவர்களின் கடவுச்சீட்டு விவரங்களுடன்இணைத்து, பாதுகாப்பு அமைச்சிடம், தேர்தல் ஆணையாளர் சமர்ப்பிக்க வேண்டும். தேர்தல் ஆணையாளரின் பரிந்துரை இல்லையென்றால், அவர்களின் நோக்கம் எமக்குத் தெரியாது"– என்றும் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்க, பவ்ரல் மற்றும் தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையம் ஆகியவற்றால், ஆசிய நாடுகளைச் சேர்ந்த 100 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை பணியில் அமர்த்த அனுமதி கோரப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையாளரால், 60 வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (ற–5)

## சு.கவுக்கு எதிராக எம்.பிக்கள் வழக்கு

கொழும்பு, டிசெ.22

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர உள்ளதாக எதிர்க் கட்சியில் இணைந்து கொண்டுள்ள ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். தற்போதைய கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பாவால் அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்கும் நோக்கில் கட்சித் தாவிய அனைத்து ஆளும் கட்சி உறுப்பினர்களினதும் கட்சி உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட உள்ளது என்று பொதுச் செயலாளர் அநுரபிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார். அதையடுத்தே நீதிமன்றில் வழக்குத் தொடரப்படவுள்ளது.

தமது அடிப்படை உரிமைகள் மீறும் வகையில் கட்சி செயற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர்வதற்கு மேலதிகமாக மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்ய உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனாநாயக்க தெரிவித்துள்ளார். (ற)

## தேர்தல் தொடர்பில் 350 முறைப்பாடுகள்

கொழும்பு, டிசெ.22

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக தேர்தல்கள் செயலகத்துக்கு இதுவரை 350 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரதூரமான சம்பவங்களுடன் தொடர்புடைய 30 முறைப்பாடுகளும் அதில் அடங்குவதாக தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாடுகள் பிரிவு தெரிவித்துள்ளது. சட்டவிரோதமான முறையில் சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பிலேயே அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது. இதனைத் தவிர அரச ஊழியர்கள் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக 76 முறைப்பாடுகள் தேர்தல்கள் செயலகத்துக்கு கிடைத்துள்ளன என்றும் கூறப்படுகின்றது. (ற)



கடும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் பாதிக்கப்பட்டுள்ள, அம்பாறை தம்பப்பன்னி பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட 69 குடும்பங்களை கடற்படையினர் மீட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்துள்ளனர். (ற)

## கம்மன்பிலவை கட்சியிலிருந்து நீக்க நடவடிக்கை

கொழும்பு, டிசெ.22

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் உதய கம்மன்பிலவை கட்சியிலிருந்து நீக்க கட்சி நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

விரைவில் கம்மன்பிலவின் கட்சி உறுப்புரிமை இரத்து செய்யப்படும் என கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார். கம்மன்பிலவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தம்முடன் சிலர் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளதாக கம்மன்பில அறிவித்த போதிலும், எவரும் ஜாதிக ஹெல உறுமயவை விட்டு விலகிச் செல்லமாட்டார்கள் என்றும் வர்ணசிங்க தெரிவித்துள்ளார். (ற)

## அம்பாந்தோட்டையை ஆக்கிரமிக்கும் சீனா

கொழும்பு, டிசெ. 22

அம்பாந்தோட்டையில் 16 மில்லியன் டொலர் பெறுமதியான மற்றொரு அபிவிருத்தித் திட்டத்தை சீனாவிடம் கையளித்துள்ளது இலங்க்க அரசு. ஒருங்கிணைந்த பஸ் – ரயில் சேவை நிலையத்தை அமைக்கும் திட்டமே தற்போது சீனாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் துறைமுக பொறியியல் நிறுவனம் இலங்கைப் பெறுமதியில் சுமார் 2 பில்லியன் ரூபாவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படும் இந்தத் திட்டம், ஒன்றரை ஆண்டுகளுக்குள் நிறைவு செய்யப்படும் என்று திட்டத்தின் பணிப்பாளர் ஆர். எம்.காமினி தெரிவித்துள்ளார், இந்த திட்டத்துக்காக மாநாட்டு மையத்துக்கு அருகே 23 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெடுஞ்சாலை மற்றும் ரயில் பாதைகள், இந்தச் சேவை நிலையத்தில் நிறைவடையும் வகையில், நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

தற்போதுள்ள பஸ் நிலையமும், வணிக வளாகவும் இந்த இடத்துக்கு மாற்றப்படவுள்ளன. (ற–5)

## அமைச்சர் திஸாநாயக்க பதவி விலக வேண்டும்

### த ப்ரைடே ஃபோரம் வலியுறுத்து

கொழும்பு, டிசெ.22

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கு எதிராக சர்ச்சைக்குரிய கருத்தொன்றை வெளியிட்டமை தொடர்பில், அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உடனடியாக பதவி விலக வேண்டும் என்று இலங்கை புத்திஜீவிகள் குழுக்களில் ஒன்றான த ப்ரைடே ஃபோரம் தெரிவித்துள்ளது.

சந்திரிகா என்பவர் கீழே தள்ளி மிதித்து, வீதியில் ஓட வைக்கப்பட வேண்டியவர் என எஸ்.பி.திஸாநாயக்க அண்மையில் குறிப்பிட்டிருந்தார். இதற்கு எதிர்க்கட்சிகள் மற்றும் பெண்கள் அமைப்புக்கள் போன்றன தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தன. இந்தநிலையில் அமைச்சருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் பரிசீலனை செய்யுமாறு த ப்ரைடே ஃபோரம் சட்டமா அதிபரிடம் வலியுறுத்தியுள்ளது. (ற)

# நீதியான தேர்தல் நடப்பது சந்தேகமே

## மாதுலுவாவே சோபித தேரர் கவலை

கொழும்பு, டிசெ.22

தேர்தல்கள் சுயாதீனமானதும் நீதியானதுமான முறையில் நடைபெறுமா என்பதில் சந்தேகம் நிலவி வருகின்றது என்று தெரிவித்துள்ளார் மாதுலுவாவே சோபித தேரர்.

"எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தல் சுயாதீனமான முறையில் நடைபெறுமா என்பதில் சந்தேகம் நீடித்து வருகின்றது. எதிர்வரும் நாள்களில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரிக்கக்கூடும்"– என்று அவர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

"நாட்டின் அனைத்து தேர்தல் சட்டங்களையும் அரசு மீறிச் செயற்பட்டு வருகின்றது. இதனை தேர்தல் என்று சொல்வதை விடவும் வாக்கு கொள்ளையாகவே கருத வேண்டும்.

தேர்தல் காலத்தில் பெரியளவில் அரசு தானங்களை, கொடைகளை வழங்கி மக்களிடமிருந்து வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றது. இதுவும் ஒரு வகையிலான லஞ்சமே. தேசிய வானொலிச் சேவைகள் எம்மையும், எதிர்க்கட்சியினரையும் கடுமையான வார்த்தைகளில் திட்டித் தீர்க்கின்றன.

தேர்தல் ஆணையாளருக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. அவரால் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. தேர்தல் நடைபெறும் திகதி தேர்தல் ஆணையாளருக்கு தெரியாத நிலைமை காணப்படுகின்றது. சோதிடர்களே தேர்தலை நிர்ணயிக்கின்றனர்.

ஜனாதிபதிக்கு எல்லையற்ற அதிகாரங்கள் காணப்படுகின்றன. அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. 18ஆம் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் ஊடாகவே இவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. இதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்–என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஏழையை அழைத்துக் கொண்டே ஹஜ் யாத்திரை செல்ல வேண்டும்

## பரப்புரைக் கூட்டத்தில் மஹிந்த செல்வந்த யாத்திரிகளிடம் வேண்டுகோள்

அம்பாறை, டிசெ.22

வசதி படைத்த முஸ்லிம் செல்வந்தர்கள் பல தடவைகள் ஹஜ் யாத்திரை சென்று வருகின்றனர். அவர்கள் இனிமேல் ஹஜ் கடமை நிறைவேற்ற வேண்டுமென்றால் ஏழை முஸ்லிம் ஒருவரைத் தம்முடன் அழைத்துச் செல்லவேண்டும். அப்படியென்றால் மட்டுமே அனுமதி வழங்கப்படும் – இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அம்பாறை, கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசல் தர்ஹா திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"30 வருடகால இருண்ட யுகம், முற்றுமுழுதாக இல்லாமற் செய்யப்பட்டு, சுதந்திர நாட்டைத் தோற்றுவித்துள்ளேன். இந்தச் சுதந்திரத்தைப் பறிகொடுக்க எவருக்கும் இடமளிக்கமாட்டேன். மக்களுக்கான சேவைகளை அரசு மூலம் முன்னெடுக்கும்போது நான் எத்தகைய பேதங்களும் காட்டவில்லை. ஆனால் எமக்கு எதிராக இன்று பலர் பொய்ப் பரப்புரைகளை மேற்கொண்டுள்ளனர். இனவாதம், மதவாதம் பேசுபவர்கள் பிரச்சினைகளையும் உருவாக்க முனைந்துள்ளனர். ஆனால் இவர்களின் கனவுகள் பலிக்க நான் ஒருபோதும் இடமளிக்கமாட்டேன். இந்த நாட்டுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தமைக்காக நான் ஜெனிவா வரை கொண்டு செல்லப்பட்டுள்ளேன். ஆனால் அங்கு எமது நியாயத்துக்காக இஸ்லாமிய நேச நாடுகள் குரல் கொடுத்தன. இதையிட்டு நான் பெருமிதம் கொள்கிறேன்."– என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற–30)

# மத்திய கிழக்கு நலன்புரி சங்கம் மைத்திரிக்கு ஆதரவு

கொழும்பு, டிசெ. 22

அகில இலங்கை மத்திய கிழக்கு நலன்புரி சங்கம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவையே ஆதரிக்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சங்கத்தில் பதிவு செய்துள்ள ஒரு லட்சத்து 49 ஆயிரம் குடும்பங்களின் ஆதரவு மைத்திரிபால சிறிசேனவுக்கே வழங்கப்படவுள்ளது' என்று அந்தச் சங்கத்தின் தலைவர் ரஞ்சித் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் மத்திய கிழக்கில் வேலை செய்பவர்களுக்கு ஓய்வூதியம் பெற்றுத் தருவதாகக் கூறப்பட்ட வாக்குறுதி இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன அதனைப் பெற்றுத் தருவதாகக் கூறியுள்ளார். அதனடிப்படையில் மைத்திரியை ஆதரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை– பொலன்னறுவை, லங்காபுற பிரதேச சபை மற்றும் மெதிரிகிரிய பிரதேச சபை என்பவற்றின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் இருவர், நேற்றுமுன்தினம் பொது எதிரணியில் இணைந்து கொண்டுள்ளனர். (ற–5)

# கணபதியை துணைக்கு அழைக்கும் மஹிந்த

## தேர்தல் பரப்புரைகளில்

கொழும்பு, டிசெ. 22

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளின் போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்துக் கடவுளாகிய பிள்ளையாரையும் துணைக்கு அழைத்துள்ளார். பிள்ளையாரின் படம் பொறித்த துண்டுப் பிரசுரங்களை ஜனாதிபதி தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் அவர் பயன்படுத்தி வருகின்றார்.



மட்டக்களப்பில் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பங்கெடுத்தவர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிக்கும் சிறிய துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. அதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் படம், இந்துக் கடவுளாகிய பிள்ளையாரின் படம் என்பன பொறிக்கப்பட்டிருந்தன, கீழே ஜனாதிபதிக்கு வாக்களிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் 'ஜனாதிபதி மஹிந்த இந்துக்களை அவமதிப்பதைப் போன்று இவ்வாறு செய்வதை வன்மையாகக் கண்டிகின்றேன்' என்று தெரிவித்துள்ளார். (ற–5)

# ஐ.ம.சு. முன்னணி தேர்தல் அலுவலகங்கள் திறப்பு



கிளிநொச்சி, டிசெ.22

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கிளிநொச்சி மாவட்டம் மற்றும் பளை தேர்தல் அலுவலகங்கள் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சிக்கு வந்திருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொது செயலாளரான அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதி தலைவருமான முருகேசு சந்திரகுமார் ஆகியோர் அலுவலகங்களைத் திறந்து வைத்தனர். ஏ–9 வீதி, பரந்தன், கிளிநொச்சியில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகமும், பச்சிலைப்பள்ளியில் அமைந்துள்ள பிரதேச அலுவலகமுமே திறந்து வைக்கபட்டுள்ளன. இதன்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் கட்சியின் ஆதரவாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற)

# ஐ.தே.க. கூட்டத்தின் மீது ஹப்புத்தளையில் தாக்குதல்

## ஐந்து பேர் காயம்

கொழும்பு, டிசெ. 22

பதுளை மாவட்டத்தில் ஹப்புத்தளைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

பரப்புரைக் கூட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஊவா மாகாண எதிர்க்கட்சித் தலைவர் ஹரீன் பெர்னாண்டோ ஆகியோர் வருகை தருவதற்கு 10 நிமிடங்கள் முன்னதாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்துஆலயமண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில், வைக்கப்பட்டிருந்த பதாகைகள் மற்றும் அலங்காரங்கள் குண்டர் குழுவொன்றினால் சேதப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் அங்கிருந்த ஐ.தே.கவின் ஹப்புத்தளை அமைப்பாளர் சேனாரத் ஜயசிங்க உள்ளிட்ட 5 பேர் தாக்கப்பட்டு காயமடைந்தனர். இவர்களில் இருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவின் வாகனத்தின் மீதும், தனது வாகனத்தின் மீதும் கற்கள் வீசித் தாக்கப்பட்டதாக, ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (கு–)

# ஜனரஞ்சகம்

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிலும் நிதானமாக செயற்படுவதுடன் அடுத்தவரின் ஆலோசனைகளையும் கேட்டு நடப்பது நல்லது. வீண் பகைகள் ஏற்பட்டு விலகும். எவ்வளவு திறமையாக செயற்பட்டாலும் பாராட்டுக்கு பதில் விமர்சனம் கிடைக்கும்.

**இடபம்:** திடீர் கோபம் ஏற்படும். வீண் செலவும் இருக்கும். பிடிவாதத்தைத் தவிர்ப்பது நன்மை தரும். வாடிக்கையாளர்களிடம் கோபமான வார்த்தைகளை பேசாமல் சாந்தமாக உரையாடுவது வியாபார விருத்திக்கு வழி செய்யும்.

**மிதுனம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். சக ஊழியர்களுடன் கடுமையாக பேசாமல் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. மிகவும் கவனமாக பேசுவதும் வாக்குவாதத்தைத் தவிர்ப்பதும் நன்மை தரும்.

**கடகம்:** அயலாருடன் அனுசரித்துச் செல்வது நல்லது. பெண்களுக்கு, மற்றவர்கள் செயல்களால் திடீர் கோபம் உண்டாகலாம். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வீண் செலவைக் குறைப்பது நல்லது.

**சிங்கம்:** பிடிவாதத்தை விடுவது நன்மை தரும். எல்லா நன்மைகளும் உண்டாகும். அறிவுத் திறன் கூடும். வீண் அலைச்சல் திடீர் பதற்றம் ஏற்படலாம். காரியங்களில் இழுபறியான நிலை ஏற்பட்டுபின்னர் முடியும்.

**கன்னி:** கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். மகிழ்ச்சி ஏற்படும். பேச்சில் கோபமும் குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்களும் ஏற்படலாம் மனக்கஷ்டம், பணக்கஷ்டம் தீரும்.

**துலாம்:** தடைப்பட்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வீண் மனக் குழப்பங்கள் அவ்வப்போது வந்தாலும் முடிவில் தெளிவு உண்டாகும். தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்:** தேவையான உதவிகள் தாமதமாகக் கிடைக்கும். திடீர் கோபம் தோன்றலாம். மிகவும் கவனமாகப் பேசுவது நன்மை தரும். தொழில் முன்னேற்றம் தொடர்பான கவலை ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஒரு சின்ன விடயத்துக்காகக் கூட அலைய வேண்டி இருக்கும். பணிச் சுமை காரணமாக திடீர் கோபம் உண்டாகலாம். கவனமாக செயற்படுவது நல்லது.

**மகரம்:** உங்கள் செயல்களை குடும்பத்தில் உள்ளவர்கள் குற்றம் சொல்லலாம். எனவே வாக்குவாதத்தில் ஈடுபடாமல் கண்டும் காணாமல் செல்வது நன்மை தரும். மற்றவர்கள் பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** கோபத்தைத் தவிர்ப்பது நன்மை தரும். உத்தியோகத்தர்கள் நிதானத்தைக் கடைப்பிடிப்பது வெற்றிக்கு உதவும். எந்த வேலையையும் திட்டமிட்டு செய்வது நன்றாக நடக்க உதவும். கஷ்டங்கள் தீரும்.

**மீனம்:** மனதில் பக்தி உண்டாகும். சகோதரர்கள் மற்றும் உறவினர்களிடம் பேசும்போதும் கவனம் தேவை. எந்த ஒரு செயலையும் சிந்தித்துச் செய்வது நல்லது. எங்கும் எதிலும் நன்மையே உண்டாகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

## கட்ட அவுத்து விடுங்கடா



இனிமேல் திருடமாட்டேன்

## விமர்சகர்களுக்காக படம் இயக்கவில்லை



விமர்சகர்களுக்காக படம் இயக்கவில்லை என்று இயக்குநர் கே.எஸ்.ரவிகுமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, 'லிங்கா' படத்தின் கிளைமாக்ஸ் பற்றி சிலர் விமர்சிக்கிறார்கள். ஸ்பைடர்மான், பாட்மான் மாதிரியான ஹொலிவுட் சூப்பர் ஹீரோக்களை ஏற்றுக் கொள்பவர்கள், அது போல் தமிழில் எடுத்தால் ஏற்க மறுக்கிறார்கள். குறை சொல்பவர்கள் எப்போதும் இருந்து கொண்டே இருப்பார்கள். விமர்சகர்கள் தேவைதான். ஆனால் அவர்களால் படங்கள் ஓடுவதில்லை.

ஒரு படத்தை ரசிகர்களுக்காக, மக்களுக்காக எடுக்கிறோம். அவர்கள் தான் படத்தின் வெற்றியை முடிவு செய்கிறார்கள். அந்த வகையில் லிங்கா சிறந்த படம் என்பது எனக்கும் ரஜினிக்கும் தெரியும் – என்றார்.

## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

செருப்பு இல்லாமல் நாங்கள் நடக்கலாம். ஆனால், நாங்கள் இல்லாமல் செருப்பு நடக்க முடியாது.
*--- தீவிரமாக யோசிப்போர் சங்கம்*
*(எங்களுக்கு வேறு எங்கும் கிளைகள் கிடையாது )*



இட்லி மாவை வைத்து இட்லி போடலாம்.
ஆனால், கடலை மாவை வைத்து கடலை போட முடியுமா?
*--- ராவெல்லாம் முழிச்சு கிடந்து யோசிப்போர் சங்கம்*

என்னதான் மனுசனுக்கு வீடு, வாசல், காடு, கரைன்னு எல்லாம் இருந்தாலும்,
ரயில் ஏறணும் என்றால், ப்ளாட்பாரத்துக்கு வந்துதான் ஆகணும்.
இதுதான் வாழ்க்கை.

டிசம்பர் 31 க்கும், ஜனவரி 1 க்கும் ஒரு நாள்தான் வித்தியாசம்.
ஆனால், ஜனவரி 1 க்கும், டிசம்பர் 31 க்கும், ஒரு வருசம் வித்தியாசம். இதுதான் உலகம்.

## குண்டுப் பெண்களுக்கான உலக அழகிப் போட்டி




குண்டான பெண்களுக்கான அழகிப் போட்டி மேற்கிந்தியத்தீவுகளில் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது. முன்னதாக மிஸ் பிளஸ் கரீபியன் பிரபஞ்ச அழகி என்ற பெயரில் நடத்தப்பட்ட இந்தப் போட்டி தற்போது உலக அளவில் நடத்தப்படுகிறது.

இந்தப் போட்டியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த குண்டான அழகிகள் கலந்து கொள்ள உள்ளனர். அழகு என்பது உடலின் அளவில் இல்லை என்பதை எடுத்துக் கூறுவது தான் இந்த போட்டியின் குறிக்கோள் ஆகும். வெளி அழகு முக்கியம் அல்ல மன அழகே அழகு என்பதை இந்தப் போட்டி தெரிவிக்கிறது.

மிஸ் பிளஸ் சைஸ் பிரபஞ்ச அழகிப் போட்டியில் நீச்சல் உடை, கேள்வி பதில் மற்றும் திறமை சோதனை ஆகிய சுற்றுகள் உள்ளன. இந்தப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பணப்பரிசு, அழகு குறித்து ஓராண்டு படிக்க புலமைப்பரிசில், மொடலாக இருக்க ஒப்பந்தம், கரீபியன் தீவில் தங்களுக்கு பிடித்த இடத்துக்குச் செல்ல ரிக்கெட் மற்றும் பிற பரிசுகள் அளிக்கப்படும்.

கடவுள் இருக்காரா? இல்லையா? னு கேட்கிறவங்க வீட்டுக்கு போனா...



ஒரு ஜீவன் "சாப்பிடுறியா"னு கேட்கும், அதாங்க கடவுள்...!

# தொடர்ச்சி

## மஹிந்த

அச்சிடுதலில் ஏற்பட்ட தாமதங்களினால் தான், நிகழ்வு பிற்போடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிரணியின் பொது வேட்பாளர், மைத்திரிபால சிறிசேன கடந்த 19 ஆம் திகதி தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ள நிலையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கை வெளியீடு இழுபறிக்குள்ளாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகளை மஹிந்த பல மாதங்களுக்கு முன்பிருந்தே மேற்கொண்டு வந்தபோதிலும், தனது தேர்தல் அறிக்கையை தேர்தல் நாளில் இருந்து 12 நாள்களுக்கு முன்னதாகவே வெளியிடும் நிலையில் உள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் அறிக்கையை தோற்கடிக்கும் வகையில் சில உள்ளீடுகளை சேர்த்துக் கொள்வதற்காகவே இந்த காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

(த-5)

## இரணைமடு

31 அடியாக உயரும் பட்சத்தில் வான் கதவுகள் திறக்கப்படுவது வழமையாகும்.

அந்த வகையில் இன்று காலை 8 மணியளவில் 4 வான்கதவுகள் திறக்கப்படும் சாத்தியம் காணப்படுகின்றது என்று நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது. வான் பாயும் பகுதிகளில் உள்ள தாழ் நிலங்களில் உள்ள மக்கள் இதுகுறித்து அவதானத்துடன் செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ற-5?426)

## தமிழர்கள்

நிச்சயமாகப் பயன்படுத்த வேண்டும் என்று கூறியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரான, நாடளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, இந்த விடயம் தொடர்பில் தமது கட்சியின் நிர்வாகிகள் உறுப்பினர்கள் ஆகியோருக்கு தாம் வலியுறுத்தியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி பிராந்திய மக்கள் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அபிப்பிராயம் கேட்கும் கலந்துரையாடல் நேற்று வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது குறித்து தமது கட்சி கிறிஸ்மஸை அடுத்து வரும் நாள்களில் அறிவிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மாவட்ட வாரியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து மட்ட உறுப்பினர்களையும், தமது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களையும் தாம் சந்தித்து, இந்த விடயங்கள் குறித்து அவர்களது கருத்துக்களை அறிந்து வந்ததாகக் கூறிய மாவை சேனாதிராசா அவர்கள், உடல் சுகவீனமுற்று இந்தியாவில் சிகிச்சை பெற்றுவரும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நாடு திரும்பியதும், யாருக்கு வாக்களிப்பது என்பது குறித்து தமது கட்சி அறிவிக்கும் என்றும் தெரிவித்தார்.

(த-402, 421)

## கைவிரித்தார்

எனினும், 'அரசில் இருந்து வெளியேறல்' என்ற கட்சியின் முடிவில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்று அக்கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் 'உதயனிடம்' தெரிவித்தார்.

கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் என பலதரப்பினரினதும் ஆலோசனைக்கமையவே பொதுவேட்பாளருக்கு ஆதரவு வழங்க முஸ்லிம் காங்கிரஸ் முடிவெடுத்துள்ளது. எனினும், அக்கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவர் இதற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளார் என்றும், அமைச்சர் ஒருவரும் கடுப்பிலேயே இருப்பதாகவும் அறியமுடிகின்றது.

குறிப்பாக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இருதரப்பு பேச்சை முஸ்லிம் காங்கிரஸ் நடத்தியிருந்தது. இதன்போது தமது கோரிக்கைகளையும் முன்வைத்திருந்தது. அவற்றுள் முஸ்லிம்களின் தேசிய மட்டத்திலான பிரச்சினைகளுக்கு அரசிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை. அத்துடன், முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படும் அமைப்புகளுக்கு எதிராகவும் அரசு காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இவ்வாறான விடயங்களும் மு.கா. அரச கூட்டிலிருந்து வெளியேறுவதற்கு காரணியாக அமைந்துள்ளது.

அத்துடன், நாடாளுமன்றத் தேர்தல், முஸ்லிம் மக்கள் மத்தியில் சரிந்துவரும் தமது அரசியல் செல்வாக்கு உள்ளிட்ட விடயங்களும் மு.காவை மேற்படி முடிவை எடுக்க தூண்டிய காரணிகளுள் முக்கியமானவையாகும் என்று அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேவேளை, முஸ்லிம் காங்கிரஸின் மேற்படி முடிவு கூட்டணி அரசுக்கு பெரும் தலையிடியாக அமைந்துள்ளது. மு.காவின் ஆதரவை இழந்தால் அரசுக்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை இழக்க வேண்டிவரும் என்பதுடன், கிழக்கு மாகாணத்திலும் ஆட்சிமாற்றம் ஏற்படும் சூழ்நிலை உருவாகும். அதற்கு புறம்பாக உள்ளூராட்சி மன்றங்களிலும் அரசுக்கான ஆதரவில் வீழ்ச்சி ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது, பொது வேட்பாளர் சரத்பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கியிருந்த முஸ்லிம் காங்கிரஸ், அதன் பின்னர் அரசமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது அரசுக்கு தமது ஆதரவை வழங்கியிருந்தது. இந்த நிலையிலேயே அரசில் இருந்து வெளியேறும் முடிவை அது மீண்டும் எடுத்துள்ளது.

(ற-சி)

## சர்வதேச

சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 28 ஆவது கூட்டத்தொடர், ஜெனிவாவில் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தொடர் குறித்த உத்தேச நிகழ்ச்சி நிரலை ஐ.நா. மனித உரிமைகள் சபை வெளியிட்டுள்ளது.

இதிலேயே, மார்ச் 25 ஆம் திகதி இலங்கை குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

(த-5)

## அரசின்

யின் வவுனியா மாவட்ட இரு உறுப்பினர்களிடம் பேரம் பேசல் இடம்பெற்றுள்ளது. இதனை வடக்கு மாகாண சபையில் அங்கம் வகிக்கும் பெரும்பான்மை இன உறுப்பினர் ஒருவரே மேற்கொண்டுள்ளார்.

இருப்பினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் இருவரும் நேரடியாகவே இதனை மறுத்துள்ளனர். இதனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இழுக்கும் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

(த-5)

## வடக்கில்

வடக்குக்கான பரப்புரையை ஜனாதிபதி மஹிந்த ஏற்கனவே ஆரம்பித்துள்ளார். இந்த நிலையில் பொது எதிரணி, தமது கட்சித் தலைவர்களுடன் கூட்டாக வடக்கு மாகாணத்தில் களமிறங்கிப் பரப்புரையை மேற்கொள்ளவுள்ளது.

விசேட விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி பொது எதிரணியினர் வருகை தரவுள்ளனர். வடக்கின் 5 மாவட்டங்களுக்கும் அன்று காலையிலிருந்து மாலை வரையில் தொடர் பரப்புரை நடவடிக்கைகளை மேற் கொள்ளவுள்ளனர்.

இதன்போது, சர்வ மதத் தலைவர்களையும், சிவில் சமூகத்தினரையும் பொது எதிரணியினர் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் இந்த மாதம் 27 ஆம் திகதி பரப்புரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. திருகோணமலையில் 27 ஆம் திகதியும், மட்டக்களப்பில் 29 ஆம் திகதியும் பரப்புரை இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)

## மைத்திரியின்

டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜனவரி முதலாம் திகதி நேரடி விவாதத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார். இந்த அழைப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டாலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அதற்கு அனுமதி வழங்கப் போவதில்லை என கட்சி மத்தியகுழு முடிவெடுத்துள்ளது.

இந்தத் தீர்மானத்தை நாங்கள் எடுப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. குறிப்பாக மைத்திரிபால என்பவர் கட்சிக்குத் துரோகம் இழைத்து விட்டுச் சென்றவர். அதுமாத்திரமல்லாது, தான்தான் சு.க. செயலாளர் எனக் கருதியும் வருகிறார். மஹிந்த ராஜபக்ஷ எமது கட்சித் தலைவர். கட்சிக்கு துரோகம் இழைத் தவருடன் கட்சித் தலைவர் விவாதிப்பதை கட்சி உறுப்பினர்கள் ஒருபோதும் அனுமதிப்பதில்லை.

மைத்திரிபாலவுக்கு சமூகப் பிரச்சினைகள் குறித்து எந்தவித கரிசனையும் இல்லை. அவர் கட்சியிலிருக்கும்போது சமூகநலன் சார்ந்த விடயங்கள் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு எதிராகவே குரல் கொடுத்தவர்.

இவ்வாறான ஒருவருடன் எமது கட்சித் தலைவர் விவாதிப்பதை சுதந்திரக் கட்சி என்றவகையில் நாம் அனுமதிப்பதில்லை என்ற தீர்மானத்தை எடுத்துள்ளோம். எனினும், ஜனவரி 9 ஆம் திகதி தோல்வியுற்று மனம் சோர்ந்து இருக்கப்போகும் மைத்திரிபாலவுடன் பேச்சு நடத்த நாங்கள் தயாராகவே உள்ளோம்"– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த ஊடகச் சந்திப்பில் அமைச்சர் காமினி லொகுகே, மேல் மாகாணசபை உறுப்பினர் உதய கம்மன்பில மற்றும் மத்திய மாகாண சபை உறுப்பினர் சதாசிவம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

(ற-சி)

## கூட்டமைப்பு

கடந்த 19 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது. அதில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான எந்தவொரு தீர்வுத்திட்டமும் முன்வைக்கப்படாமை தொடர்பில் கூட்டமைப்பு ஏமாற்றம் வெளியிட்டிருந்தது.

இந்தப் பின்னணியில் நேற்று இரவு, கொழும்பில் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களிடையே முக்கிய கலந்துரையாடல் இடம்பெற இருந்தது. ஆயினும் கலந்துரையாடல் திடீரென ஒத்திவைக்கப்பட்டதுடன், அந்தக் கலந்துரையாடல் இன்று காலை 8 மணிக்கு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் காலை 9.45 மணிக்கு, பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபாலவுடன் சந்திப்பு இடம்பெறும் என்று தெரியவருகின்றது. கலந்துரையாடலில் முடிவைப் பொறுத்தே மைத்திரியுடனான சந்திப்பு இடம்பெறலாம் என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(ற-5)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

தேவை
நல்ல நிலையிலுள்ள Hero Honda Pleasure(10000Km இற்குள்) தேவை.
தொடர்பு : 077 613 9307

விசேட பொதுச்சபைக்கூட்டம்
தலைவர் சீனியர் குணநாயகம் அவர்களின் தலைமையில் 14.12.2014ஆம் திகதியில் நடைபெற்றது. இதில் 2015ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி இடம் பெறும் ஜனாதிபதித் தேர்தலில் எமது மக்களுக்கே உரித்தான பிரத்தியேகமான பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத்தரக்கூடிய வேட்பாளருக்கே எமது ஆதரவை வழங்குவதாக ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.
கௌரவ பொதுச் செயலாளர் (P.J. அன்ரனி)

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான
Diploma in Information Technology DITec
Diploma in Office Automation DOA
Diploma in Pc Applications DPCA
Adv. Dip. in Hardware & Networking ADHN
Dip. in Video Production & Multimedia DVPM
Dip. in Web Designing & Development DWD
Dip. in Computerized Accounting DCA
Tally, JAVA, AutoCAD
யாழில் முதற்தர ஆங்கில பயிற்சி மையத்தில் இருந்து
Spoken English
75% OFF

DMI COMPUTER EDUCATION
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பிரிவு I 24/12/2014 9.30 am
பிரிவு II 29/12/2014 9.30 am
(ISO 9001 2008) CERTIFIED
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113. கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel. : 021-226 2470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி, Tel. : 021-227 0775
சுன்னாகம் No.130, K.K.S. வீதி, Tel. : 021-224 1970

# விளையாட்டு

## உணவுப் பிரச்சினையில் இந்திய வீரர்கள்



ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி வீரர்களுக்கு சரியாக உணவு வழங்கப்படாத காரணத்தால் அவர்கள் கொந்தளித்துப் போயுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது.

இந்திய அணி வீரர்கள் ஆஸ்திரேலியா சென்றது முதலே சாப்பாடு பெரிய பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. இந்திய வீரர்கள் கேட்ட சைவ உணவு முறையாக வழங்கப்படாததால் அதிருப்தி அடைந்தனர்.

அடிலெய்ட் முதலாவது டெஸ்ட் போட்டியின் போது இந்திய அணி வீரர்களுக்காக இந்திய சமையல்காரர்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். தற்போது பிரிஸ்பேனில் 2ஆவது டெஸ்ட் போட்டி நடைபெற்ற போது மீண்டும் சாப்பாடுப் பிரச்சினையை எதிர்கொள்ள நேரிட்டுள்ளனர்.

இந்திய வீரர்கள் தமக்கு சைவ உணவு கிடைக்காத காரணத்தால், குறிப்பாக இஷாந்த் சர்மா ரொம்பவே கோபமாக இருக்கிறார். அவருடன் சுரேஷ் ரெய்னாவும் இணைந்து அணி நிர்வாகத்திடம் கடுமையான கோபத்துடன் முறையிட்டுள்ளனர்.

வீரர்கள் மட்டுமின்றி ஐ.சி.சியின் பணியாளர்கள், இந்திய அணி இயக்குநர் ரவிசாஸ்திரி ஆகியோருக்கும் இதே சிக்கல் உள்ளதால் இவர்கள் தற்போது வெளியில் இருந்து உணவு வரவழைத்து சாப்பிடுகின்றனர்.(ற)

## டோனி 8 முறை 'டக் அவுட்'

பிரிஸ்பேன் டெஸ்ட் ஆட்டத்தில் எதிரணியினர் 400 ஓட்டங்களுக்கு மேல் முதல் இன்னிங்ஸில் அடித்த தருணங்களில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றதில்லை என்ற நிலவரம் ஸ்மித் தலைமை வெற்றியினால் மாறியுள்ளது.

பிரிஸ்பேன் டெஸ்ட் ஆட்டத்தின் சில சுவையான தகவல்கள்:

இந்திய அணித்தலைவராக டோனி டெஸ்ட் போட்டிகளில் 8ஆவது முறையாக ரன் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்துள்ளார். அவர் ஜோஷ் ஹேசில்வுட் ஸ்விங்கை தவிர்க்க மேலேறி வந்து ஆட முயன்றார். ஆனால் ஹேசில்வுட் மிடில் ஸ்டம்பில் நேராக ஒரு பந்தை வீச தோனி மேலேறி வந்ததால் தன்னைத் தானே யார்க் செய்து கொண்டார் பந்து துடுப்பில் பட நடுவர் ஆட்டமிழப்பு கொடுத்தார்.

இதன் மூலம் ஒரு அணித்தலைவர் மற்றும் இலக்குக் காப்பாளராக அதிக டக் அவுட்களை சந்தித்த வீரரானார் டோனி. மொத்தத்தில் தென்னாபிரிக்கா அணித்தலைவர் தன் காலத்தில் 10 முறையும், நியூஸிலாந்தின் அணித் தலைவராக இருந்த காலத்தில் ஸ்டீவன் பிளெமிங் 13 முறையும் டக் அவுட் ஆகியுள்ளனர். ஆகவே, டோனி இதில் 3ஆம் இடம் பிடித்துள்ளார்.

அணித்தலைமைப் பொறுப்பில் அறிமுகமான டெஸ்ட் போட்டியில் ஆட்ட நாயகன் விருது பெற்ற ஸ்டீவன் ஸ்மித் அந்த வகையில் 9 ஆவது அணித்தலைவராக திகழ்கிறார். இதற்கு முன்னதாக அனில் கும்ளே, பிரெண்டன் டெய்லர், கிரெக் சாப்பல், இம்ரான் கான், கெவின் பீட்டர்சன், சந்தர்பால், ஷாகிப் அல் ஹசன், வக்கார் யூனிஸ் ஆகியோர் முதல் டெஸ்டில் ஆட்ட நாயகன் விருது பெற்றுள்ளார்கள்.

2ஆவது இன்னிங்ஸில் ஷேன் வோட்சன் இலக்கை வீழ்த்தியதன் மூலம் அவரது இலக்கை டெஸ்ட் போட்டிகளில் 6ஆவது முறையாகக் கைப்பற்றியுள்ளார் இசாந்த் சர்மா. ஜேம்ஸ் ஆண்டர்சன் 8 முறையும், ஸ்டூவர்ட் பிராட் 7 முறையும் ஷேன் வோட்சனை வீழ்த்தியுள்ளனர்.

தொடர்ந்து 9ஆவது டெஸ்டாக இந்தியா 100 ஓட்டங்கள் அல்லது அதற்கு குறைவான ஓட்டங்களில் 5 அல்லது அதற்கு மேலான இலக்குகளை மடமடவென இழந்துள்ளனர். இன்று பிரிஸ்பனில் 71/1 என்ற நிலையிலிருந்து 117/6 என்று சரிந்தனர்.

46ஆவது இன்னிங்ஸில் புஜாரா டெஸ்ட் கிரிக்கெட்டில் 2,000 ஓட்டங்களைக் கடந்துள்ளார். ராகுல் டிராவிட் 40 இன்னிங்ஸ்களில் முதல் 2000 டெஸ்ட் ஓட்டங்களை எடுத்து முதலிடம் வகிக்கிறார்.

பிரிஸ்பேன் டெஸ்ட் போட்டியின் ஓட்ட விகிதம் 4.12. ஆஸ்திரேலியாவில் ஒரு டெஸ்ட் போட்டியில் இதுவே அதிக ஓட்ட விகிதம். ஒட்டுமொத்தமாக 9ஆவது உயர்ந்த ஓட்ட விகிதம் இதுவாகும்.



## வாய்ப்பேச்சை குறைக்க வேண்டும் இந்தியா

பிரிஸ்பேன் டெஸ்ட் தொடரில் 4ஆம் நாள் ஆட்டத்தில் ஏற்பட்ட தோல்விக்கு ஷிகர் தவனின் காயத்தைக் காரணமாக எடுத்துக்கொள்ள முடியாது என்று சுனில் கவாஸ்கர் விமர்சித்துள்ளார்.

ஆஸ்திரேலிய வீரர்களுடன் இந்திய வீரர்கள் பதிலுக்கு பதில் வாய்ப்பேச்சில் ஈடுபடக்கூடாது என்றே நான் கருதுகிறேன். இந்தியாவில் கழக மட்ட கிரிக்கெட்டில் கூட 'ஸ்லெட்ஜிங்' போன்றவை இல்லை, நமக்கு அது பழக்கம் கிடையாது. ஆனால் ஆஸ்திரேலியர்கள் கிரிக்கெட் ஆட்டத்தை அப்படி ஆடியே பழக்கப்பட்டவர்கள். எனவே அவர்களிடத்தில் இது செல்லுபடியாகாது.– என்றும் அவர் கூறியுள்ளார்.

"ஆனால் இந்தியர்களான நமக்கு ஒவ்வொரு வார்த்தையும் மனதில் ஆழமாக பதிந்து விடும். நாம் அதை வெளியே துரத்த நினைத்தாலும் அது நம் மனதில் தங்கும். அப்படி மனதில் தங்கிவிடும் போது அது ஆக்கபூர்வமான விளைவுகளை ஏற்படுத்தாது. ஆஸ்திரேலிய வசைக்கு பதிலடி கொடுப்பது என்பது புத்திசாலித் தனமான நடைமுறை அல்ல. நாம் ஆக்ரோஷம் பற்றி பேசுகிறோம், ஆனால் அது ஆக்ரோஷமான நோக்கத்தை தெரிவிப்பதாக இருக்க வேண்டும்."– என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

"இந்தத் தொடரில் ஆஸ்திரேலியர்கள் வசை, கேலி போன்றவற்றில் அவ்வளவாக ஈடுபடவில்லை. பிலிப் ஹியூஸின் உயிரிழப்புக்குப் பிறகே அவர்கள் இந்த விவகாரத்தில் புதிய பக்கத்தைப் புரட்டத் தொடங்கியுள்ளனர். அதற்காக அந்த அணியை நான் பாராட்டுகிறேன். கிரிக்கெட் ஆட்டத்தில் அவர்கள் இப்போது ஆடுவது போல்தான் ஆடவேண்டும்.

இந்திய பந்து வீச்சாளர்களின் செயற்பாடு எனக்கு திருப்தி அளிக்கவில்லை. பிரிஸ்பேன் ஆடுகளத்தை இவர்கள் சரியாக பயன்படுத்தியதாக நான் நினைக்கவில்லை. ஆஸ்திரேலிய ஆடுகளங்கள் 3ஆம் நாள் மற்றும் 4ஆம் நாளில் துடுப்பாட்டத்திற்கு சாதகமாக இருக்கும். ஆனால் பிடியை நழுவ விட்டு ஒரு அணியை 500 ஓட்டங்கள் அடிக்கவிட்டால் அது எப்படி நல்ல பந்துவீச்சாகும்?– என்றும் தெரிவித்துள்ளார்.(ற)

## முகமது அலி மருத்துவமனையில்



மூன்றுமுறை உலக சம்பியன் பட்டம் வென்ற குத்துச்சண்டை வீரர் முகமது அலி நிமோனியா நோய் தாக்கப்பட்டதால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முகமது அலி, ஏற்கெனவே பார்கின்ஸன் நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார். இந்நிலையில், அவருக்கு நிமோனியாவும் தாக்கியுள்ளது.

இது குறித்து அவருக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் தெரிவித்தபோது, முகமது அலிக்கு லேசான நிமோனியா தாக்கம் ஏற்பட்டுள்ளது. அவருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சிகிச்சைக்கு அவர் உடல் நல்ல ஒத்துழைப்பு அளிக்கிறது. விரைவில் குணமடைவார் என்றனர்.

1981ஆம் ஆண்டு குத்துச்சண்டை போட்டியில் இருந்து ஓய்வு பெற்ற அவர், அதன்பின்னர் சமூக சேவையில் தன்னை அர்ப்பணித்தார்.(ற)

# ஐ.பி.எல்லில் மாற்றங்கள்

ஐ.பி.எல். ஆட்டங்கள் அடுத்த ஆண்டு ஏப்ரல் 8 முதல் மே 24 வரை நடக்கவுள்ளன. போட்டிக்கான அட்டவணை வெளியிடப்படாத நிலையில், தங்களது அணியை வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் அனைத்து அணிகளுமே இறங்கியுள்ளன. தங்களது அணியில் உள்ள அதிக விலைக்கு வாங்கப்பட்ட, சரியாக விளையாடாத வீரர்களை நீக்குவதன் மூலம் அடுத்த தொடருக்கான வீரர்கள் ஏலத்தில் அதிக பணத்தை தங்களது கையிருப்பில் வைத்துக் கொள்ளும் நடவடிக்கையில் ஐ.பி.எல். அணிகள் இறங்கி உள்ளன.

பெங்களூர்:-

கடந்த ஆண்டு ரூபா 14 கோடிக்கு வாங்கப்பட்ட வீரரான யுவராஜ் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். தொழிலதிபர் விஜய் மல்லையாவின் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்காக ரூ.14 கோடி கொடுத்து வாங்கப்பட்ட யுவராஜ் சிங்கை அடுத்த ஐ.பி.எல்லில் கழற்றிவிட மல்லையா திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. ரூ.14 கோடி கொடுத்து யுவராஜ்சிங்கை றோயல் சலஞ்சர்ஸ் வாங்கியபோதே பலரது புருவத்தையும் அது உயர்த்தியது. ஆனால் கொடுத்த பணத்துக்குத் தக்கபடி யுவராஜ் ஆடவில்லை என்பதால் அணி நிர்வாகம் அதிருப்தியடைந்துள்ளது. பெங்களூர் அணியில் கிறிஸ்கெய்ல், விராட் கோஹ்லி, ஏபிடி வில்லியர்ஸ் போன்ற அதிரடி வீரர்கள் உள்ளதால் கூடுதலாக யுவராஜை வைத்து ஒன்றும் ஆகப் போவதில்லை என்ற முடிவுக்கு வந்துள்ள அணி நிர்வாகம் யுவராஜை கழற்றிவிடப்போவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. முத்தையா முரளிதரன், அல்பி மோர்கல், ரவி ராம்பால், சச்சின் ராணா, ஷதாப் ஜகாதி, தன்மாய் மிஸ்ரா ஆகியோரும் பெங்களூர் அணியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் பெங்களூர் அணி ஏலத்தில் ரூபா 21 கோடிக்கு புதிய வீரர்களை வாங்க முடியும். மேலும் யுவராஜை குறைந்த தொகைக்கு மீண்டும் வாங்கவும் பெங்களூ அணி திட்டமிட்டுள்ளதாக மற்றும் ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

டெல்லி:-

அணித் தலைவர் ஹெவின் பீற்றர்சன் உட்பட 13 வீரர்களை டெல்லி அணி நீக்கியுள்ளது டெல்லி அணிக்கு 2014ஆம் ஆண்டு ஐ.பி.எல். சீசன் மிகவும் மோசமானதாக அமைந்திருந்தது. இதனால், அடுத்த ஆண்டு ஐ.பி.எல். சீசனில் தங்களது அணியில் இருந்து 13 வீரர்களைக் கழற்றிவிட்டுள்ளது டெல்லி அணி. கப்டன் ஹெவின் பீற்றர்சன், தினேஸ் கார்த்திக், முரளி விஜய், ஜெயதேவ், உனட்கட், ராஸ் டெய்லர், ரத்தன் சுக்லா, ராகுல் சர்மா, வெய்ன் பார்னெல், நீஷம், சித்தார்த் கவுல், ராகுல் சுக்லா, சரத், மலிந்த் குமார் ஆகியோர் டெல்லி டேர்டெவில்ஸ் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் புதிய வீரர்களை ஏலம் எடுக்க டெல்லி அணிக்கு ரூ. 40 கோடி கிடைத்துள்ளது.


மும்பை:-

இதே போன்று மும்பை அணி 8 வீரர்களை நீக்கியுள்ளது. பிரக்யான் ஓஜா, சாகீர்கான், ஜலஜ் சக்சேனா, பென் டங்க், அபூர்வா வாங்கடே, கவுதம், கிரிஷ்மர் சன்டோகியா, சுஷாந்த் மராதே ஆகியோர் மும்பை அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் புதிய வீரர்களை வாங்க மும்பை அணிக்கு ரூபா 10 கோடி கிடைத்துள்ளது.

பஞ்சாப்:-

பஞ்சாப் அணிக்காக விளையாடிய புஜாறா, பாலாஜி, முரளி கார்த்திக் ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய அணிகள் தமது மாற்ற நிலைப்பாடுகளை விரைவில் அறிவிக்கவுள்ளன. (த-ரி)





# மலிக் - சானியா வாழ்வில் விரிசலா?

இந்திய ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்ஸாவும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சொஹைப் மலிக்கும் விவாகரத்துச் செய்யப் போகிறார்களா என சிலரால் கேள்வி எழுப்பப் பட்டுள்ளது.

இவ்விருவருக்கும் இடையிலான திருமண வாழ்வில் விரிசல் ஏற்பட்டுள்ளதாக இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிலும் வதந்திகள் உலாவுகின்றன.

இந்தியாவின் மிக வெற்றிகரமான ரென்னிஸ் வீராங்கனையான சானியா மிர்ஸாவுக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சொஹைப் மலிக்குக்கும் 2010 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது.

நாடுகளின் எல்லைகளைக் கடந்த இந்தத் திருமணம் அப்போது பலரையும் வியக்க வைத்தது. ஆனால், இவர்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்ற தகவல்கள் கடந்த சில மாதங்களாக இரு நாடுகளிலும் உலாவுகின்றன.

சொஹைப் மலிக் பெரும்பாலும் பாகிஸ்தானில் வசிக்கிறார். சானியா மிர்ஸா தனது சொந்த நாடான இந்தியாவில் வசிக்கிறார். பல்லாயிரக்கணக்கான கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இவ்விரு விளையாட்டு நட்சத்திரங்களும் வசிப்பதும் இவர்களுக்கிடையிலான விரிசலுக்கு ஒரு காரணம் எனக் கூறப்படுறது.

தானும் தனது கணவரும் வெவ்வேறு விளையாட்டுத்துறையைச் சேர்ந்த தொழில்சார் விளையாட்டு நட்சத்திரங்கள் என்பதால் இந்தத்திருமணம் இலகுவானதொன்றல்ல என சானியா மிர்ஸா ஒப்புக்கொண்டிருந்தார் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால், அனைத்து தடங்கல்களுக்கும் மத்தியில் இவ்விருவரும் விளையாட்டுத்துறை சார்ந்த உலகப் புகழ்பெற்ற ஜோடியாக விளங்கினர்.

தொலைக்காட்சி நடன நிகழ்ச்சியொன்றிலும் இவ்விருவரும் இணைந்து பங்குபற்றினர்.

தனக்கு தனது கணவர் சொஹைப் மலிக் மலர் ஒன்றை வழங்கும் ரொமண்டிக் புகைப்படமொன்றை கடந்த ஜூலை மாதம் தனது சமூக வலைத்தளங்களில் சானியா வெளியிட்டிருந்தார்.

சில தினங்களுக்கு முன் சில வலைத்தளங்களிலிருந்து அப்படத்தை சானியா நீக்கிவிட்டார் எனவும் இந்த ஜோடிக்கிடையே ஏற்பட்ட விரிசலுக்கு இது ஓர் ஆதாரம் என்றும் சிலர் கூறுகின்றனர்.

இவர்களுக்கிடையில் விரிசல் ஏற்பட்டதாக கூறுவதற்கு தெரிவிக்கப்படும் வேறு சில காரணங்கள் உண்மையா என்பது தெரியவில்லை.


பாகிஸ்தான் நடிகையொருவரின் காரணமாகவே சொஹைப் மலிக்--சானியா மிர்ஸா உறவில் விரிசல் ஏற்பட்டதாகச் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேவேளை தெலுங்கு நடிகர் ஒருவரே காரணம் எனவும் வேறு சில ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இது குறித்து சொஹைப் மலிக்கோ சானியா மிர்ஸாவோ வெளிப்படையாக கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

ஆனால், தானும் சொஹைப் மலிக்கும் இணைந்து பிடித்துக் கொண்ட புகைப்படமொன்றை தனது சமூக வலைத்தளத்தில் சானியா மிர்ஸா கடந்த வாரம் வெளியிட்டார். தம்மை குறித்த வதந்திகளை மறைமுகமாக நிராகரிக்கும் வகையில் அவர் இந்த புகைப்படத்தை வெளியிட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

(த)

# சிறந்த வெளிநாட்டு வீரராக ரொனால்டோ



ரியல் மட்ரிட் உதைபந்து அணியின் முன்னணி வீரரும் போர்த்துக்கல் அணி வீரருமான கிறிஸ்டியானோ ரொனால்டோ உலகின் சிறந்த உதைபந்து வீரராக திகழ்ந்து வருகிறார்.

தற்போது இவருக்கு 2014ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதை பி.பி.ஸி. வழங்கியுள்ளது.

இது குறித்து கிறிஸ்டியானோ ரொனால்டோ கருத்து வெளியிடுகையில்,

என்னை சிறந்த வீரராக தேர்ந்தெடுத்ததற்கு பி.பி.ஸிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், என்னுடைய இங்கிலாந்தின் பழைய ரசிகர்களுக்கும் மிக்க நன்றி—என்றார்.

ரொனால்டோ ரியல் மட்ரிட் அணியில் விளையாடுவதற்கு முன் இங்கிலாந்தின் மான்செஸ்டர் யுனைட்டெட் அணியில் விளையாடியவர்.

இவருடன் ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், குத்துச்சண்டை வீரர் பிளாய்ட் மேவெதர் மற்றும் கார்பந்தய வீரர் மார்க் மார்கியூஸ் ஆகியோர் போட்டியில் இருந்தனர். இவர்களை முந்திக்கொண்டு ரொனால்டோ இந்த விருதை பெற்றுள்ளார்.

ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடும் 29 வயதான ரொனால்டோ, 267 போட்டிகளில் 281 கோல்கள் அடித்துள்ளார். இந்த வருட சிறந்த உதைபந்து வீரர் என்ற விருதையும் பெற்றுள்ளார்.(த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**COLLEGE OF PHYSICS**
Arasady Road, Kantharmadam

# A/L - 2017
ஆரம்பம்
22.12.2014
3.30 P.m

(55143)
(45,7,3)
N. KAPILAN Bsc

# A/L CHEMISTRY
2015.2016, 2017 பிரிவுகள்
GROUP Classes

* அனைத்து அலகுகளிலும் சகல ஐயங்களை யும் தீர்ப்பதன் மூலம் அடைவு மட்டத்தை அதிகரிக்கலாம்.
* ஆசிரியரின் நூல்களை அனைத்துப் புத்தகசாலைகளி லும் பெறலாம்.

(55104)
(45.7.3)
Mr. S.SureshKumar Bsc (Hons)
T.P.077 555 9028

# Physics Group Class
*Thanchi Lane, Arasady Road.*
**K.Selvan** B.Sc(Hons)
A/L 2017
தமிழ் மொழி மூலம்
&
English Medium
ஆரம்பம் : 23.12.2014 (செவ்) 3.00 P.m

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் **வைடூரியம் சொக்கலிங்கம்**
**(சிற்பமணி)**

அன்னைமடியில்
20.05.1947

ஆண்டவன் அடியில்
23.11.2014



கடந்த 23.11.2014 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (21.12.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் கீரி மலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (23.12.2014) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்திகேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும் மற்றும் உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும், போசனமளித்து உதவியவர்களுக்கும் மற்றும் நேரில் வந்து அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

(சி.18799) (45.3.7)

குடும்பத்தினர்.
தொ.பே. 077 278 2903

இன்று ஆரம்பம்
# NEW SCIENCE HALL
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

## G.C.E A/L 2017
## கணித, உயிரியல் பிரிவு

| தமிழ்மொழி மூலம் | ENGLISH MEDIUM |
|---|---|
| **PHYSICS** | **PHYSICS** |
| S.சோதிலிங்கம்<br>N.கபிலன்<br>K.செல்வன்<br>G.பிரபா | MR.S.SOTHILINGAM<br>MR.K.SELVAN |
| **CHEMISTRY** | **CHEMISTRY** |
| K.சிவத்திரன்<br>N.மகேஸ்வரன்<br>G.BENO<br>T.சுசாந்தன்<br>J. றஞ்சித்காந் | MR.N.MAHESWARAN<br>MR.G.BENO |
| **BIOLOGY** | **BIOLOGY** |
| T.தம்பிராஜா<br>வழமையான ஆசிரியருடன்<br>T.கெங்காதரன் | OUR USUAL TEACHER<br>MR.T.THAMBI RAJAH<br>MR.R.KUGANANTHAN |
| **COM.MATHS** | **COM.MATHS** |
| S.செந்தில்ராஜ்<br>P.செந்தில்நாதன்<br>S.சிவகரன் | MR.S.SIVAKARAN |
| | **தொழிநுட்பவியல் கற்கைநெறி**<br>★பொறியியற் தொழிநுட்பவியல்<br>★விஞ்ஞான தொழிநுட்பவியல்<br>★உயிர் முறைமைகள் தொழிநுட்பவியல் |

(சி/18776)

ஆரம்பம்: 22.12.2014 திங்கள் காலை 9.30

# NEW SCIENCE WORLD

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

க.பொ.த(உ/த)
# 2017 SCIENCE STREAM
தமிழ்மொழி மூல, ஆங்கிலமொழி மூல வகுப்புக்கள்
ஆரம்பம் : 23.12.2014 செவ்வாய் காலை 07.00மணி

அனுமதிகள் 21.12.2014 இன்று காலை 07.00மணி முதல் வழங்கப்படுகின்றன

## G.C.E (A/L) 2015 Monthly Serial Exam (November - 2014) Chemistry Dias

| Name | School | Medium | Marks | Rank |
|---|---|---|---|---|
| K.Sathursan | Kokuvil Hindu College | E.M | 92 | 1 |
| N.Sutharshanan | Jaffna Hindu College | E.M | 91 | 2 |
| P.Pravinth | Jaffna College | T.M | 88 | 3 |
| G.Shalom Dushyanthy | Vembadi Girls' High School | E.M | 88 | 3 |
| T. Sobithan | Jaffna Hindu College | T.M | 88 | 3 |
| S.Eniyavan | St.John's College | T.M | 87 | 6 |
| S.Vithyasakar | Jaffna Hindu College | E.M | 86 | 7 |
| T.Januja | Vembadi Girls' High School | E.M | 86 | 7 |
| T.Mathuran | Kokuvil Hindu College | T.M | 85 | 9 |
| K.Yalini | Vembadi Girls' High School | T.M | 85 | 9 |
| J.Jonny Jonathan | St. John's College | T.M | 85 | 9 |
| T.Aathunan | St. John's College | E.M | 84 | 12 |
| R. Sivarani | Victoria College | T.M | 84 | 12 |
| S. Nagasayini | Vembadi Girls' High School | T.M | 84 | 12 |
| K. Tharmila | Vembadi Girls' High School | T.M | 84 | 12 |
| M.Mathushanth | Jaffna Hindu College | E.M | 84 | 12 |
| K.Priyatharsan | Jaffna Hindu College | E.M | 84 | 12 |
| S. Sukirtha | Vembadi Girls' High School | T.M | 83 | 18 |
| S.Aravinthan | Jaffna Hindu College | E.M | 83 | 18 |
| T.Abirami | Kokuvil Hindu College | T.M | 83 | 18 |
| B.Aartheeban | Jaffna Hindu College | E.M | 83 | 18 |
| T. Nirujan | Jaffna Hindu College | T.M | 82 | 22 |
| K. Keerthanan | Jaffna Hindu College | T.M | 82 | 22 |
| A.Harishankar | Jaffna Hindu College | E.M | 82 | 22 |
| S. Supaluxmiy | | T.M | 82 | 22 |
| K. Sujanie | Vembadi Girls' High School | T.M | 81 | 26 |
| M. Sinthushan | Jaffna Hindu College | T.M | 81 | 26 |
| M.Pavithra | Vembadi Girls' High School | T.M | 81 | 26 |
| L.Tharshiga | Vembadi Girls' High School | T.M | 81 | 26 |
| K.Thanusiya | Vembadi Girls' High School | T.M | 81 | 26 |
| R.Nishana | Uduvil Girls' College | T.M | 81 | 26 |
| R.Shiveswaran | Jaffna Hindu College | E.M | 81 | 26 |
| S.Gowsy | J/Victoria College | T.M | 80 | 33 |
| R.Sharmini | Vembadi Girls' High School | T.M | 80 | 33 |
| V.Sivasangeetha | Vembadi Girls' High School | T.M | 80 | 33 |
| G.Piranavapiriyan | Jaffna College | T.M | 80 | 33 |
| T.Thenushan | St. Patrick's College | T.M | 80 | 33 |
| S. Nirojithan | Jaffna Hindu College | T.M | 80 | 33 |
| A.Ragathipan | St.John's College | T.M | 80 | 33 |
| S.Mayuran | Manipay Hindu College | T.M | 80 | 33 |
| T.Mithusha | J/Victoria College | T.M | 80 | 33 |
| T. Venuraj | Victoria College | T.M | 79 | 42 |
| N.Sarenya | Vembadi Girls' High School | T.M | 79 | 42 |
| P. Sharmila | Manipay Ladies' College | T.M | 79 | 42 |
| S. Thevatharsan | St.Patrick's College | T.M | 79 | 42 |
| S.Abirame | Uduvil Girls' College | T.M | 79 | 42 |
| S. Kajapriya | Vembadi Girls' High School | T.M | 79 | 42 |
| S.Anojan | Jaffna Hindu College | T.M | 79 | 42 |
| S.Viruthiga | Uduvil Girls' College | E.M | 79 | 42 |
| M.Arunmugan | Jaffna Hindu College | E.M | 78 | 50 |
| M.R.Fathima Nafeeta | Vembadi Girls' High School | T.M | 78 | 50 |
| T.Illakiya | Uduvil Girls' College | T.M | 78 | 50 |
| T. Mithusha | Vembadi Girls' High School | T.M | 78 | 50 |
| T.Vibeeshan | St.John's College | T.M | 78 | 50 |
| S. Niroshan | J/Vaddu Hindu College | T.M | 78 | 50 |
| S. Harievarthan | Jaffna Hindu College | T.M | 77 | 56 |
| K.Gowtham | Jaffna Hindu College | E.M | 77 | 56 |
| S.Thanusika | Mu/ Puthukkudiyirupu Centra | T.M | 77 | 56 |
| R.Archulan | St. John's College | E.M | 77 | 56 |
| P. Hajamohan | Jaffna Hindu College | T.M | 76 | 60 |
| T. Mathuvanthi | Vembadi Girls' High School | T.M | 76 | 60 |
| T.Naveenan | Jaffna Hindu College | E.M | 76 | 60 |
| S.Vithya | Vembadi Girls' High School | T.M | 76 | 60 |
| M.Thanushiya | Vembadi Girls' High School | T.M | 76 | 60 |
| V.Keerthiga | Vembadi Girls' High School | T.M | 76 | 60 |
| A. Vithusha | Chundikuli Girls' College | T.M | 76 | 60 |
| T.Sayeeshan | St. John's College | E.M | 76 | 60 |
| T.Keerthanaram | Jaffna Hindu College | E.M | 75 | 68 |
| T.Luxman | Jaffna Hindu College | E.M | 75 | 68 |
| M. Sulaxsana | Vembadi Girls' High School | T.M | 75 | 68 |
| S.Tharvajothy | Vembadi Girls' High School | E.M | 75 | 68 |
| K.Piranavan | Jaffna Hindu College | E.M | 74 | 72 |
| R.Thamayanthi | Jaffna Hindu Ladies' College | T.M | 74 | 72 |
| T. Nijanthai | Puthur Somaskanda College | T.M | 74 | 72 |
| T. Kobisan | Jaffna Hindu College | T.M | 74 | 72 |
| B. Manchuthan | Jaffna Hindu College | T.M | 74 | 72 |
| J.Rosan | J/Vaddu Hindu College | T.M | 73 | 77 |
| S. Thinesh | St. Henry's College | T.M | 73 | 77 |
| S.Umayal | Vembadi Girls' High School | T.M | 73 | 77 |
| K.Piranavan | St. John's College | E.M | 73 | 77 |
| R. Hisho | Jaffna Hindu College | T.M | 73 | 77 |
| S. M. Sahhir | KIN/ AL-HUTRH | T.M | 73 | 77 |
| T.Harina | Vembadi Girls' High School | T.M | 72 | 83 |
| K.Prashanth | J/Vaddu Hindu College | T.M | 71 | 84 |
| M. Saruyan | Jaffna Hindu College | T.M | 71 | 84 |
| T. Ajantharaja | Jaffna Hindu College | T.M | 71 | 84 |
| S. Sahithiya | Vembadi Girls' High School | T.M | 71 | 84 |
| N.Kinthuja | Vembadi Girls' High School | T.M | 71 | 84 |
| S. Abirame | Vembadi Girls' High School | T.M | 71 | 84 |
| S.Vishnuya | Vembadi Girls' High School | E.M | 71 | 84 |
| S. Arapy | Manipay Ladies' College | T.M | 71 | 84 |
| S. Sampavi | Jaffna Hindu Ladies' College | T.M | 70 | 92 |
| V. Stropan | Jaffna Central College | T.M | 70 | 92 |
| J. Digeerthena | Jaffna Hindu Ladies' College | T.M | 70 | 92 |
| P.Kajavathani | Vembadi Girls' High School | E.M | 70 | 92 |
| P.Jinoth | Kokuvil Hindu College | T.M | 70 | 92 |
| T.Anojan | J/Victoria College | T.M | 69 | 97 |
| A. Shindujah | Vembadi Girls' High School | T.M | 69 | 97 |
| K.Janani | Vembadi Girls' High School | T.M | 69 | 97 |
| T. Kamshiga | Vembadi Girls' High School | T.M | 69 | 97 |
| S.Niroja | J/Puttur Sri Somaskanda Colle | T.M | 69 | 97 |
| S. Nirojini | Vembadi Girls' High School | T.M | 69 | 97 |
| A. Mathanki | Vembadi Girls' High School | T.M | 68 | 103 |
| T.Tharani | J/Victoria College | T.M | 68 | 103 |
| S.Karthick | Jaffna Hindu College | E.M | 68 | 103 |
| S.Priyanthini | Vembadi Girls' High School | E.M | 68 | 103 |
| M.Mahinthan | Jaffna Hindu College | T.M | 68 | 103 |
| R.Nishanthan | St. John's College | E.M | 68 | 103 |
| K.Thulaanchan | Jaffna Hindu College | E.M | 68 | 103 |
| S.Prashanthan | Jaffna Hindu College | T.M | 67 | 110 |
| S.Praveena | Vembadi Girls' High School | T.M | 67 | 110 |
| S. Tharshan | Jaffna Hindu College | T.M | 67 | 110 |
| B. Ampujan | St. Patric's College | T.M | 67 | 110 |
| S.Charvakgnan | Jaffna Hindu College | E.M | 67 | 110 |
| K.Kobiraj | J/Vaddu Hindu College | T.M | 67 | 110 |
| S.Marie Colastika | Vembadi Girls' High School | T.M | 66 | 116 |
| G. Thanushigan | Jaffna Hindu College | T.M | 66 | 116 |
| M. Regitha | Jaffna College | T.M | 66 | 116 |
| K.Luxman | Jaffna Hindu College | T.M | 66 | 116 |
| S. Sutharshan | J/Vaddu Hindu College | T.M | 66 | 116 |
| M.Vithusha | Vembadi Girls' High School | T.M | 66 | 116 |
| T. Janatheepa | Ba/Shivanantha College | T.M | 66 | 116 |
| K. Anoban | Jaffna Hindu College | T.M | 65 | 123 |
| S. Inkaran | J/Arunodaya College | T.M | 65 | 123 |
| B.Ragavi | Vembadi Girls' High School | E.M | 65 | 123 |

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.